# உத்தமர் காந்தியடிகள்

பாகனேரி

ஆசிரியர் :
பண்டித, வித்துவான் தி. இராமானுசன்
தமிழ் விரிவுரையாளர், மதுரைக்கல்லூரி,
மதுரை.

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

பதிப்பாளர் :
A. T. N. நாகலிங்கம் & கம்பெனி
புதுமண்டபம், மதுரை.

உரிமைப் பதிவு
செய்யப்பட்டது

1948

[விலை ரூ.1-12-0

முதற்பதிப்பு 1948

Printed at The Premier Art Press, Madras.

## முன்னுரை :

உலகு போற்றும் உத்தமர் காந்தி அடிகள் இன்று நம்மிடை இல்லை; பொய்யுடல் களைந்து, 'பேரமரர்' ஆகிவிட்டார்.

அண்ணலாரின் உடல் மறையினும், அவரது 'ஆன்ம ஒளி' என்றும் நின்று நிலவும்! அவ்வொளியிலே கலந்து திளைத்தல், நமக்குக் கிடைத்தற்கு அரிய பெரும் பேறு ஆகும். அதற்கு அடிகளின் வாழ்க்கை நமக்கு முன் மாதிரியாய் இருந்து வழி காட்ட வேண்டும்.

'என்னுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம்,' என்பது, அடிகள் அருளிய மணி மொழி. அவர்தம் வாழ்க்கையைத் 'திறந்த புத்தகம்,' ஆக்கி நாட்டிற்கு நல்க யான் விரும்பினேன். அவ்விருப்பம் என் நண்பர் திரு. A. T. N. நாகலிங்கம் அவர்கள் நன் முயற்சியால் இன்று ஈடேறுகின்றது.

பல சொல்ல விருப்பம் இல்லை. சிறப்பாக, 'மாணவநிலையில் பயில்வார்க்குப் பயன்தரல் வேண்டும்,' என்ற கருத்தால் யான் இதனை ஆக்கியுள்ளேன்.

பல்கலைக் கழகத்தாரும் பிற கல்வித் துறைத் தலைவர்களும், நோக்கு அறிந்து போற்றி, இதற்கு ஆதரவு தர வேண்டுகிறேன்.

மணிநகரம்,
மதுரை.

தி. இராமானுசன்.

## பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | பிறப்பும் இளமையும் | 7 |
| 3. | கல்விப் பயிற்சி | 20 |
| 4. | தொழில் முயற்சி | 33 |
| 5. | தென்னாப்பிரிக்கா வாசம் | 46 |
| 6. | நாடு திரும்புதல் | 65 |
| 7. | விடுதலைப் போர் | 72 |
| 8. | சமூகத் தொண்டு | 102 |
| 9. | மூப்பும் முடிவும் | 113 |
| 10. | உலகப் பேரொளி | 123 |

# உத்தமர் காந்தியடிகள்

## I தோற்றுவாய்

நாம் வாழும் உலகினைப் புலவர்கள் 'பரப்பு நீர் ஞாலம்' என்று கூறுவது உண்டு. 'இடத்தால் அகன்று பரந்தது,' என்பது பொருள். காலத்தாலும், என்று தோன்றியது என்று துணிய முடியாத பழமையினை உடையது அது! இப்படிப் பரந்த உலகிலே தொடக்கம் முதல் இன்று வரை பிறந்து இறந்தவர்களைக் கணக்கிடல் நம்மால் இயலாது. மனித இனம் என்றுமே அவ்வாறு தோன்றி மறைந்தாரை எல்லாம், நினைவில் இறுத்த விழைந்து முயலுவதும் இல்லை.

ஆனால், ஒரு சிலரை மனித இனம் என்றென்றும் மறவாது போற்றுகின்றது; அவர்களைக் கோடிக்கணக்கான மக்களினின்று வேறுபட்டவர்களாக மதிக்கிறது; 'கடவுள்' என்றும், 'கடவுளர் கூறு' என்றும் உச்சிமேற்கொண்டு மெச்சுகிறது. அன்னார் வாழ்ந்த வகை—கொண்ட கொள்கை—சென்ற நெறி—இவைகளை எல்லாம்

துருவித்துருவி ஆராய்கின்றது. ஆராய்வதுடன் இல்லை; அவ்வழி துறைகளை மேற்கொண்டு, தானும் உயர வழி கோலுகிறது!

இங்ஙனம் உலகுக்கு வழி காட்டிகளாய்—உலகம் போற்றும் உத்தமர்களாய்—உள்ள பேரியலாளர்கள், எல்லா நாட்டிலும் தோன்றி யிருக்கிறார்கள். அவ்வந்நாட்டு மக்கள், அவர்களை என்றும் மறவாது நின்று பேணிப் பெரு விழாக் கொண்டாடி மகிழ்கிறார்கள். இவ்வாறு மிகப் பலரை உலகு நினையாது மறப்பதற்கும், ஒரு சிலரை மறவாது போற்றுதற்கும் உரிய காரணந்தான் என்னை ?

மாந்தர் யாவரும், உடல் அமைப்பால் ஒரே வடிவினர் ஆவர்; எனினும், குணஞ்செயல்களால் ஒருவரின் ஒருவர் மாறுபட்டுப் பெரிதும் வேற்றுமை உறுவர். அவ்வேற்றுமைக்குத் தகவே, அவர்தம் பெருமை சிறுமைகள் கணிக்கப்பெறும். கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய பண்பு மேம்பாடு—தந்நலம் பேணாத சீரிய குறிக்கோள்—பிறர் குறை கண்டு தாம் வருந்தும் மன நிலை—வாழ்க்கையிலே கடைப்பிடிக்க ஓர் இலட்சியம்—இறுதிவரை உறுதியுடன் அதை அடையும் முயற்சி—உயிர் நீப்பினும் தம் கோளை நிறுவும் மனவுரம்—என்னும் இப்பண்பாடுகளுக்கு உறைவிடமாய் நின்றுள்ள சீரியர் எந்நாட்டிலும் பெரியராய்ப் போற்றப்படுகின்றனர். மக்கள், அவர்களைக் ‘கடவுளர்கள்’ என்றுகூடக் கருதி வழிபடுகின்றார்கள்.

மேலை நாட்டு இயேசு நாதர், வடநாட்டு விவேகானந்தர், நம் நாட்டு வள்ளுவர் ஆகிய அனைவரும் நாம் முன்னர்ச் சொன்னபடி, மக்கள் மனத்தைக் கோவிலாகக் கொண்ட உத்தமர்கள். அவர்கள், வாழ வேண்டிய வழியிலே வாழ்ந்தவர்கள். எல்லாரும் செல்லும் தீநெறியிலே அவர்கள் செல்லவில்லை; தீநெறியிலே செல்பவர்களையும், தடுத்து நிறுத்தினார்கள்; மன்பதைகட்கு எல்லாப்படியாலும் இதமே செய்து, பெருவாழ்வு வாழ்ந்தார்கள். மக்கள், அவர்கள் மாட்டமைந்த சீரிய பேரியல்பால் 'வான் உறையும் தெய்வம்' எனவே அவர்களைப் பேணிப் பெருமைப்படுத்தினார்கள். எனவே, அவர்கள் அன்றும்—இன்றும்—என்றுமே—மனித இனம் முழுமைக்கும் வழிகாட்டிகளாய் நின்று இலங்கும் பெருமையைப் பெற்றுவிட்டார்கள்!

உண்டு, உடுத்து, உறங்கிக் கழிவது வாழ்வன்று. நல்ல குறிக்கோளை மேற்கொண்டு, தனக்கும் பிறர்க்கும் நல்லது செய்து வாழ்ந்து, இறந்தாலும் புகழோடு இறப்பதுதான் சீரிய வாழ்வு. சீரிய வாழ்வு வாழவே, அறிஞர் முயலவேண்டும். நாம் கற்கும் கல்வியும், பேணும் குணமும், பழகும் பழக்கமும் ஆகிய எல்லாம், நல்வாழ்வு வாழ்ந்து நலம் உறுவதற்கே ஆகும். அப்படி வாழ முயல்வார்க்கு, முற்சொன்ன பெரியார்கள் முன் மாதிரியாய் இருந்து வழி காட்டுகின்றார்கள்.

அவர்கள் வாழ்ந்த வழிகளும், பட்ட தொல்லைகளும், சொல்லிய சொற்களும், கடலிற் பட்ட கலத்திற்குக் கரைவிளக்கம்போல நின்று,

மற்றவர்களை ஊக்குகின்றன. அப்பெரியார்கள், இறந்தும் இருந்தவர்களாகவே பயன் செய்வதால், அவர்கட்குக் 'கடவுள் இயல்' கூட்டி, எல்லாவுலகும் போற்றுகிறது. போற்றுவதில் பிழை ஒன்றும் இல்லை.

இராமன், கிருஷ்ணன் முதலிய நம் நாட்டுப் பெரியார்களைத் தெய்வ வடிவினர் என்று நாம் போற்றுகிறோம். போற்றுவது எதுகொண்டு? அவர்கள் மாட்டு அமைந்துநின்ற கடவுட்பண்புகளை நாம் கண்கொண்டு கண்டதில்லை. காவியம், கதை, கற்பனை ஆகிய இவைகள் மூலமாகக் கேட்டுத்தான் அறிகிறோம். கேட்டவுடன், நமக்கு அப்பண்புகளிலே உள்ள விருப்பால் அவர்களையும் கடவுளர் என்று மதிக்கிறோம். எனவே, நாம் மதிப்பது நம்பிக்கை கொண்டு.

ஆனால், அப்பெரியார்கள் வாழ்ந்த காலத்திலே உடனிருந்த மக்கள் நிலை வேறு. அம்மக்கள் அவர்களை நேரிற்கண்டு மகிழ்ந்திருப்பார்கள்; அவர்களுடைய அருஞ்செயல்களிலே ஈடுபட்டிருப்பார்கள்; அவர்கள் இயற்றிய அற்புதங்களைக் கண்டு வியந்திருப்பார்கள்; 'மனிதன் தேவனாவது எப்படி?' என்பதைக் கண்ணாரக் கண்டும் இருப்பார்கள். எனவே, அவர்கள் பெரிதும் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். பிற்காலத்தாருக்கு இப்பெருநலங்கள் எல்லாம் எய்துமாறு இல்லை. 'இராமன் பிறந்த அன்று யான் பிறந்திலேனே!' என்று, நம்மோத்த ஓர் அடியார் வருந்தியிருக்கிறார். எனினும், நமக்கு இவ்வருத்தம் தீர, பல பெரியார்களை அடுத்

தடுத்து நம் பாரதநாடு பெற்றுத் தந்து கொண்டேயிருக்கின்றது.

இந்த வகையிலே நோக்கினல், இன்று இந்திய நாட்டிலே வாழும் நாமனைவரும் புண்ணியப் பேறுபடைத்தவரே ஆவோம். உலகு போற்றும் உத்தமராய், கடவுட்கூறு என்று கண் காணத் தென்பட்ட காந்தி அடிகளார் வாழும் காலத்திலே நாம் வாழப் பிறந்தது ஒன்றுமே போதும்!

நேருக்கு நேர் அவரை நாம் கண்டோம்; அவர் அறிவுரைகளைக் கேட்டோம்; அவர் இயற்றிய வியத்தகு செயல்களைக் கண்டு நயந்தோம்; 'வாழவேண்டும் வகையிலே வாழ்பவர் தெய்வம்,' என்ற வள்ளுவர் சொல்லை உண்மை எனத் தேறினோம். இவ்வளவிற்கும் மேலாக, அடிகளார் நம் நாட்டவர் என்று கருதுங்கால் நம் மகிழ்ச்சி அளவிறந்து பொங்குகிறது! அவர் புகழ் பரவும் இடம் எல்லாம் நமது புகழே பரவக் காண்கின்றோம். இத்தகைய பெருமகிழ்ச்சியும் பேரின்பமும் அடிகளாரைப்பற்றி வருங் கால மக்கள் எங்ஙனம் அடைய இயலும்? இயலவே இயலாது!

மக்களும் வாழவேண்டிய நிலையிலே வாழ்ந்தால், தெய்வநிலை எய்த முடியும். இதனை நம் அடிகளார், பிறமக்கட்கு அன்பால்—அறிவால்-ஒழுக்கத்தால்—ஆற்றலாற் சிறந்து நின்று, விளக்கினர். இதனைக்காணும்போது ஒரோ வழி நமக்கும் ஏன் அவைகளைப் பின்பற்றிச் சிறத்தல் கூடாது என்ற கருத்து எழுகின்றது. அக்கருத்

தெழுச்சியால் தத்தம் வாழ்க்கையைப் பண்ணுறுத்திச் செம்மை செய்துகொண்ட தமிழன்பர் பலர் உள்ளனர். அத்தகைய பெருந்தமிழர் ஒருவர், அடிகளாரை 'வடநாட்டு வள்ளுவர்' என்று சிறப்பித்துப் போற்றுகின்றனர்.

அடிகளாரது வாழ்க்கை நெறி, நமக்கு ஒரு வழிகாட்டியாக அமையுமானல், நமது வாழ்வும் எத்தனையோ துறைகளிற்செம்மை உறும்; நாமும் அமரவாழ்வு எய்தலாம். அவர் தாம் பிறந்த இடத்தால்—சாதியால்—சமயத்தால்—உருவால்—பெயரால் நம்மின் வேறுபடலாம். ஆனல், குணநலத்தாலும் செயல்திறத்தாலும் அவ்வேற்றுமையை மறந்து, காலம் கடந்து எவ்வுலகினரும் 'எம்மவரே,' என்று போற்றி ஏற்கும் வகையிலே, அவர் மாற்று உயர்ந்து நிற்கின்ருர். இன்றைய மக்களுள் எவரும், அவரை ஓர் உலகப் பெரியாராகவே மதிக்கின்றனர். உலக முழுமையுமே அவர் வழி பின்பற்றி வாழப் போகும் காலம், மிகத் தொலைவில் இல்லை. அத்தகைய வள்ளலாரது வாழ்க்கையினைப் பற்றி நாமும் சிறிது தெரிந்துகொள்ள முற்படுவோம்!

# II பிறப்பும் இளமையும்

'பயிரின் தன்மை, விளை நிலத்தின் தரத்தையும் உரத்தையும் பொறுத்தது,' என்பர். அஃதொப்பப் பிள்ளைகளின் சீர்மையும், பெற்றோர்களின் குணத்திற்கும் நலத்திற்கும் ஒப்பவே அமையும். 'தாயைப் போலப் பிள்ளை,' என்பதும், 'மகன் அறிவு தந்தை அறிவு,' என்பதும் பழமொழி. உலகு உணர்ந்து ஓதும் பெருங்குணம் படைத்தவராய் நம் அடிகளார் இலங்கினர். அதற்குக் காரணம், பெரிதும் அவர்தம் பெற்றோர்களிடம் அமைந்திருந்த அரும்பெரும்பண்புகளும், வளர்ப்பின் சிறப்புக்களுமே என்று கூறிவிடலாம்.

கரம்சந்து காந்தி என்பார் நம் அடிகளாரின் தந்தையார். அவர் இராசகோட்டுத் தனியரசில் அமைச்சராய் இருந்து அரும்பணி ஆற்றியவர். அவரது கடமைச் சிறப்பினை ஒரு முறை மன்னர் வியந்து, பெருநிலப் பரப்பினை நன்கொடையாகத் தர விழைந்தார். கரம்சந்து காந்தியார் முதலிலே அதனை ஏற்க முற்றும் மறுத்தார்; பின்னர், மன்னர் வற்புறுத்துதலுக்கும் உறவினர் முறையீட்டிற்கும் ஓரளவு இயைந்

தார். இயைந்தவர், நானூறு கெஜ அளவுள்ள நிலப்பரப்பு மட்டுமே போதும் என்று கூறிப் பெற்றார். பேராசைப் பேய்க்கு அவர் இரை யானவர் அல்லர்.

நல்ல உலகியல் அறிவில் கைதேர்ந்தவர் அவர். பெரியார் பலர் கூட்டுறவும் அவருக்கு உண்டு. அவர் நாடோறும் கீதை நூல் படித் தலைப் பெருவழக்காகக் கொண்டிருந்தனர். அவர் பிறர் எளிமை கண்டு இரங்கும் பேரியல்பினர். ஒரு முறை அவர், உதவி அரசியல் அலுவலர் தம் மன்னரை அவமதித்தது கண்டார்; அதனை வெறுத்துக் கடிந்தார். அவர் தம்மைக் கடிந் தது குறித்து அவ்வலுவலர் மனம் நொந்து, அங்ஙனம் கடிந்தமைக்கு மன்னிப்புக் கேட்கு மாறு அவரை வற்புறுத்தினர். 'மனச்சான் றின் வழி நிற்றலே அறம்,' எனக் கருதிய அடி களாரின் தந்தையார், அதற்குச் சிறிதும் இணங்க மறுத்துவிட்டார். அதன்பொருட்டுச் சில மணி நேரம் காவல் தண்டனை கூட அவர் ஏற்க வேண்டி வந்தது. இங்ஙனம் உண்மை போற்றும் உத் தமப்பண்பு நம் அடிகளாருக்குத் தம் தந்தையா ரிடமிருந்து வழியுரிமையாய் அமைந்தது போலும்!

கரம்சந்து காந்தியாரின் மனைவியாராகிய புத்தளிபாய் அம்மையார், ஒழுக்கிற்சிறந்த உத் தமியார்; ஆண்டவனிடத்து இடையறாத பேரன்பு பூண்டவர்; ஏழைகட்கு இரங்கித் தம் மால் இயன்றன எல்லாம் தவறாது செய்பவர்; நோன்பு நோற்பதில் பெரும்பற்றுக் கொண்ட

வர். சாந்திராயணம் முதலிய பெரிய நோன்புகளும், அவரால் நோற்கப்பட்டன. நோய்வாய்ப்பட்டு மெலிந்துநின்ற போதிலும், நோன்பளவிலே தாம் கொண்ட கொள்கையை ஒரு முறையேனும் அவர் கைந்நெகிழ விட்டதே இல்லையாம்! இவ்வண்ணம், பேரறிவாலும் சீரிய ஒழுக்கத்தாலும் சிறந்து நின்ற கரம்சந்து காந்தியாருக்கும், புத்தளிபாய் அன்னையாருக்கும் பெறலருந்திருமகனாராக, நம் அடிகளார் தோன்றினார்.

அடிகள் பிறந்த காலம், ஆயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்பதாம் (1869) ஆண்டு, அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள், சனிக்கிழமை ஆகும். அவர் சுதாமாபுரி என்ற மறு பெயருடைய போர் பந்தர் என்னும் சிறிய ஊரிலே பிறந்தார். 'மோகன் தாஸ்' என்பது அடிகளாரின் பிள்ளைப்பெயர். பிற்காலத்தில் தந்தையார் பெயரும் குடிப்பெயரும் உடன் சேர்ந்து, 'மோகன் தாஸ் கரம்சந்து காந்தி' என்று அடிகளார் பெயர் உலகில் வழங்குவதாயிற்று. அவர் சாதி முறையால், 'பனியா' என்று வழங்கப்பெறும் மோட வைசிய வகுப்பினைச் சேர்ந்தவர். அவர் பிறந்த குடும்பம் போதுமான அளவு நல்ல செல்வநிலை உள்ள குடும்பம். ஆதலின் அவர் பெற்றோரால் நன்கு போற்றி வளர்க்கப் பெற்றார்.

அடிகளாரது இளமைப்பருவம், போர் பந்தரிலேயே கழிந்தது. முதலிலே சிறிய திண்ணைப் பள்ளிக்கூடத்திலே அவரைப் பெற்றோர் படிக்க வைத்தனர். பெருக்கல் வாய்பாடு முத

லிய அடிப்படைப் படிப்பு அங்குக் கற்பிக்கப் பெற்றது. அந்தக் காலத்தில் எல்லாம் தமது புத்தி மந்தமாகவே இருந்து வந்தது என்று அவரே தமது வாழ்க்கை வரலாற்றில் எழுதியிருக்கிறார். அவர் பிற தீய மாணவர்களுடன் கூடி, அறியாது ஆசிரியர்களைத் திட்டிப்பேசுவதும் உண்டாம்!

அடிகளின் தந்தையார், இராசகோட்டுத் தனியரசில் அங்கத்தினர் பதவி ஏற்ற போது, போர் பந்தரை விட்டு விலகி வர வேண்டி நேர்ந்தது. அடிகளாரும், இராசகோட்டில் ஆரம்பப்பள்ளி ஒன்றில் சேர்ந்து கல்வி பயின்றார். அங்குப் படித்த படிப்பின் தகுதியும், நடுத்தர நிலையிலேதான் இருந்தது என்கிறார். அப்பள்ளியில் முற்றும் கற்றுத் தேர்ந்த பின்னர் உயர்தரப் பள்ளியிற்சேர்ந்து மேற்கொண்டு கல்வி பயின்றார். அடிகள் அப்போது பன்னிரண்டு ஆட்டைப் பருவத்தினர். பதின்மூன்றாம் ஆண்டிலேயே அடிகளாருக்கு மணவினை நிகழ்ந்துவிட்டது. அவர் மனைவியார் பெயர் '**கஸ்தூரி பாய்**' என்பது.

கல்விச் சாலையில் பயிலுங்காலை, அடிகளார் எவருடனும் நெருங்கிப் பழகினது இல்லை. "நாம் உண்டு; நம் அலுவல் உண்டு," என்றிருப்பது வழக்கம். அவர் குறித்த காலத்திற்பள்ளிக்குச் செல்வதும், பள்ளி முடிந்ததும் நேரே வீடு வருவதுமே குறியாகக் கொண்டிருந்தார்; பாட புத்தகங்கள் ஒழியப் பிற புத்தகங்களைக் கண் எடுத்தும் பார்த்திரார்; ஆசிரியர்களின் பேரன்பிற்கு

உரியவர் ஆனார்; இரண்டாவது பாரத்துக்கு மேல், நல்ல தேர்ச்சிகளும் பரிசுகளும் பெற்றுச் சிறந்து நின்றார் ஒன்பதாம் வகுப்பிலும் பத்தாம் வகுப்பிலும் பயிலும்போது மாதம் ஐந்து ரூபாய் உபகாரச் சம்பளமும் அரசினர் மூலம் அவருக்குக் கிடைத்து வந்தது.

இளமை தொட்டே அடிகளாருக்குத் தமது நடத்தை குறித்துப் பெருங்கவலை இருந்து வந்தது. அவர் ஒழுங்கு தவறி நடக்கவே மாட்டார். ஒரு வேளை நடந்து தண்டனை பெற்றுவிட்டாலோ, மனம் நொந்து வருந்துவார். அவ்வருத்தம், 'பிழை செய்துவிட்டோமே!' என்று பல முறை கண்ணீர் விடச் செய்தும் இருக்கின்றதாம்! தண்டனை பெறுவது பற்றி அவர் துன்புற்றதே இல்லை. இளமைப் பருவத்தில் உடற்பயிற்சியில் அவர் உள்ளம் சென்றதில்லை. அதற்குப் பதிலாக உலாவுவதை வழக்கமாக அவர் கொண்டிருந்தார்.

உயர்தரப் பள்ளியில் எட்டாம் வகுப்பிலிருந்தே எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே கற்பிப்பது வழக்கம். அடிகளார் அப்போது எல்லாம், ஆங்கிலத்திற்சிறிது பிற்போக்கு உடையவராய் இருந்தனராம். ஆங்கில மூலபோதனை காரணமாக இரேகைக் கணிதத்தில் ஒன்றுமே தமக்குப் புரிந்ததில்லை என்று அவரே சொல்லியிருக்கிறார். வடமொழியும் அடிகளாருக்கு எளிதில் வரவில்லை. ஆசிரியரது கடுமையான குணம்—கண்டிப்பான ஒழுங்கு—பாடங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்க

வேண்டிய இன்னல்—எல்லாம் கூடி அவ்வகுப்பின்மீது அடிகளாருக்கு ஓரளவு வெறுப்பினை விளைத்துவிட்டன. ஒரு நாள் வடமொழி வகுப்பினைத் துறந்து, பார்ஸி மொழி போதிக்கும் வகுப்பிலே சென்று உட்கார்ந்தாராம். பின்பு, வடமொழி ஆசிரியரின் வற்புறுத்தலால், தம் செயலுக்கு வருந்தி, மீண்டும் வடமொழிக் கல்வியை மேற்கொண்டு கற்று வந்தாராம்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்பது பழமொழி. அதற்கேற்பவே, அடிகளது இளமை வாழ்வு, பின் வரும் பெருவாழ்வினுக்குக் கால் கொண்டது என்பது நன்கு அறியக் கிடக்கின்றது. பொய் சொல்லுவதிலும், தம் குறையை வஞ்சித்து மறைப்பதிலும் அவருக்கு இளமை தொட்டே வெறுப்பு இருந்து வந்தது. இளமையிலே, பள்ளிகளில் அடிகளார் பயின்ற கல்வியினும் பேணிய ஒழுக்கமே மாணச் சிறந்தது என்பதனை நாம் மறவாது போற்றுதல் தகும்.

உயர்தரப் பள்ளியில் அடிகளார் கல்வி பயிலும் போது நிகழ்ந்த செய்தி ஒன்று குறிப்பிடத் தக்கது: ஒரு முறை கல்வி இலாக்கா மேலதிகாரியான ஜாயிஸ் துரை, பள்ளியை மேற்பார்க்க வந்தார். வந்தவர், ஆங்கிலத்தில் ஐந்து வார்த்தைகளைச் சொல்லி மாணவர்களை எழுதச் செய்தார். 'கெட்டில்' என்ற வார்த்தையினை அடிகளார் தவறாக எழுதினர். அது கண்ட ஆசிரியர், அடிகளாரது காலை அழுத்தி மிதித்துக் குறிப்பால் அடுத்தவனைப் பார்த்து எழுதக் கட்

ட்டுவிட்டார். அடிகளார், அவ்விளம்பருவத்திலேகூடத் தாம் அது செய்வது தவறு என்பதை உணர்ந்தார். ஆதலின், அதனைச் செய்ய அவர் முயலவில்லை; அந்த ஆசிரியரது நடத்தையையும் அவமதிப்பாக நினைத்ததில்லை. 'பெரியார்கள் சொற்படி நாம் நடக்க வேண்டும்; அவர்கள் செயல்களைப் பற்றி நாம் துருவி ஆராய்ந்து துன்புறுதல் கூடாது,' என்னும் துணிவான கொள்கை, அடிகளாரிடம் அன்றைக்கே உரம் பெற்று நின்றது.

இளமையில் தந்தையார் அடிகளுக்குச் 'சிரவண பித்ரு பக்தி நாடகம்' என்னும் நூலை வாங்கிக்கொடுத்திருந்தார். ஓய்ந்த நேரங்களில் எல்லாம் அதனைப் படிக்குமாறும் அவர் அடிகளாரை வற்புறுத்துவது உண்டாம். அதில் சிரவணன் என்பவன், தன் பெற்றோரைக் காவடியில் தூக்கி வைத்துச் சுமந்து தீர்த்த யாத்திரை செய்து வைத்த செய்தி கூறப்படுகிறது. அதிலே, அடிகள் மனம் ஆழ்ந்தது. 'சிரவணனைப் போல நாமும் நம் பெற்றோரைப் பேணுதல் வேண்டும்!' என்ற அவா அடுத்தடுத்து அடிகளார் மனத்திலே பதிந்து நின்றது. தம் மனத்தின் உள்ளே, 'நான் ஒரு சிரவணனாய் இலங்க வேண்டும்,' என்று அடிக்கடி எண்ணிக்கொள்வாராம்! இப்படி, எதைப் படித்தாலும் அதன் உள்ளுறையில் கருத்துச் செலுத்தி நிற்பது—அதனை வாழ்க்கையில் பயன் படுத்த வேண்டும் என்று ஆவல் கொள்வது—அதற்காகப் பல துறைகளிலும் முயற்சி செய்வது— அரிய பண்பல்லவா? இப்

பண்பு அடிகளாரிடம் இளமைதொட்டே வளம் பெற்று வளர்ந்தது.

"உனக்கு மோர் கொடுத்து விடாய் தீர்த்தவனுக்கு வயிறு நிறைய உணவு அளி; சிரித்து வரவேற்பவனைக் கீழே விழுந்து வணங்கு; ஒரு காசு கொடுத்து உதவியவனுக்குத் தங்க நாணயங்களைக் கொடு; துன்பத்தில் ஊன்றுகோலாய் உதவினவனை உயிரையுங் கொடுத்துக் காப்பாற்று; ஒரு நன்மை செய்தவனுக்குப் பத்து நன்மைகள் செய்வதுதான் உனது அறன்; தீமைக்குப் பதில் நன்மை செய்பவர்தாம் உண்மையில் உலகில் வாழ்பவர் ஆவர்," என்னும் கருத்துடன் அமைந்த ஒரு குஜராத்திப் பாட்டினை இளமையிலே அடிகளார் படிக்க நேர்ந்தது. பாட்டைப் படித்ததோடு மட்டிலும் நிறுத்தாமல், அதன் கருத்தினையும் உள்ளத்திலே அப்படியே பதித்துக்கொண்டுவிட்டார். அன்று முதலே, 'தீமைக்கு மாற்றுத் தீமையன்று; நன்றி செய்வதே தகுந்த மாற்று ஆகும்,' என்ற ஒரு பேருண்மையினைத் தமது வாழ்க்கைச் சூத்திரமாக அடிகளார் அமைத்துக்கொண்டதாகச் சொல்லுகிறார்!

இங்ஙனமே, அவர் இளமையில் ஒரு முறை தம் குடும்பத்தாரோடு சென்று அரிச்சந்திர நாடகம் பார்த்தார். அது கதை என்றோ, நாடகக் காட்சி என்றோ அவர் மனத்திற்குத் தோற்றவில்லை; வாழ்க்கையின் சாயலாகவே தோற்றியது. அவர் கதையின் கற்பனையிலே கருத்தூன்றினர். மேலும் மேலும் அந்நாட

கத்தைப் பார்க்க விழைந்தார்; இயலாத நிலையில், பலமுறை அகக்காட்சியிலே கண்டு மெய்ம் மறந்துவிடுவதும் உண்டாம். அந்நாடகத்தில் அடிகளார் மனம் அப்படி ஈடுபட்டதன் காரணம், அரிச்சந்திரன்மீதும், உண்மையின் உயர்வின்மீதும் அவர் கொண்டிருந்த பெரும் பற்றுதலே என்பது தெரிய வருகிறது. அவர், "அரிச்சந்திரனைப்போல ஏன் நாமும் நம் வாழ்க்கையில் மெய்ம்மை பேணி வாழ்தல் கூடாது?" என்று எண்ணி வியந்தார். "கதை பொய்யாய் இருக்கலாம் என்பது எனக்குப் பிற்காலத்தில் தெரிந்தது. இருந்தாலும், கருத்தின் உயர்விலேதான் என் மனம் அன்று சென்றது," என்று அந்நிகழ்ச்சி குறித்து அடிகளாரே பிற்காலத்தில் எழுதியிருக்கிறார்.

மேற்சொல்லிய நிகழ்ச்சிகளிலிருந்து, பெற்றோரைப் பேணுதலிலும்—உண்மையை உரைப்பதிலும்—அடிகளார் ஆர்வம் மட்டுந்தான் கொண்டிருந்தார் என்று வாசகர்கள் கருதுதல் தவறு; அப்படியே, அவைகளைச் செயல் முறையிலும் பேணிக்கொண்டு வந்துவிட்டார் என்பதற்கும், இரண்டு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டாகவே நின்று சான்று பகர்கின்றன.

அடிகளார் பிறந்த குலமும் குடியும் தீண்டாமையைத் தெய்வம் போலப் பேணுவன. ஆனால், தீண்டாமை அடாது என்ற எண்ணமோ அவருக்கு இளமையிலேயே சிந்தையில் குடி கொண்டுவிட்டது ஒன்று. வீட்டுத் தோட்டியாகிய தீண்டாதாரோடு தமது வேறு

பாடு கருதாது தொட்டுக் கலந்து பழகுவார். தாயாருக்கு இது துன்பம் தரும். அவர் தீண்டாதானைத் தீண்டிய செய்தியைத் தாயாரிடம் மறைத்துப்பேசுவதும் இல்லை. தீண்டாதாரைத் தீண்டிய தீட்டுப் போக ஒரு முஸ்லீமைத் தொடுவது நல்லது என்பது தாயாரின் கற்பனை. அவர்மாட்டுள்ள அன்பால், அவ்வண்ணமே செய்து அவர் எண்ணத்தை ஈடேற்றி மகிழ்விப்பது அடிகளார் வழக்கம். எப்படியும் தம் அன்னையார் உள்ளம் புண்பட நடக்கக் கூடாது என்பதே அடிகளாரின் குறிக்கோள்.

நட்புக் காரணமாகப் புலால் உண்ணும் பழக்கத்தை எப்படியோ அடிகளார் இளமையில் மேற்கொண்டுவிட்டார். நம் நாடு அன்னியர் பிடிப்பினின்று விடுதலை பெற்றுவிட வேண்டும் என்ற வேணவா இளமை தொட்டே அவரிடம் வேரூன்றியிருந்தது. "நாம் வெள்ளையர் பிடியினின்று விடுதலை பெற விழைந்தால், அவர்களைப்போலப் புலால் உண்டு உடல் நலம் பெருக்க வேண்டும்," என்று அத்தீய நண்பன் அடிகளிடம் ஆசையைத் தூண்டி மயக்கினான். அவரும் மயங்கிப் புலால் உண்ணத் தொடங்கிவிட்டார். "சுவை கருதிப் புலால் உண்டேன் இல்லை; நாட்டுக்கு விடுதலை வரும் என்று நம்பியே உண்டேன்," என்று அடிகளே, தம் வரலாற்றில் வருத்தம் தெரிவித்துப் பின்னர் எழுதியிருக்கிறார்.

புலால் உண்ட நிறைவால், பல நாட்களில் வீட்டில் அவருக்கு உணவு தேவை இராது.

அன்னையாரோ, அவரை அன்புடன் உணவு அருந்த அழைப்பார். அப்பொழுது எல்லாம் அடிகளார் பசியில்லை என்றே பொய் சொல்லி விடுவார். ஆயினும், பின்னர், 'அன்னையாரிடம் பொய் சொல்லிவிட்டோமே!' என்ற வருத்தம் அடிக்கடி அவர் மனத்தைச் சுடும். தம் அன்னையாரிடம் அடிகளார் கொண்டிருந்த அன்பு, அவ்வருத்தத்தை நூறு மடங்கு அதிகம் ஆக்கி அவரை நடுங்கச் செய்தது. கடைசியில் 'அன்னையாரிடம் பொய் சொல்லுதல் தகாது,' என்ற உறுதியே அவர் மனத்தில் நிலை பெறல் ஆயிற்று. நாளடைவில், தாயாரிடம் பொய் பேசுதற்கு அஞ்சியே புலால் உணவைக் கை விட்டுவிட்டார். அன்னையாரிடம் கொண்டிருந்த அன்பு, அடிகளிடம் இடையிலே வந்தடைந்த தீய பழக்கத்தை எப்படியோ முடிவிலே நீக்கிவிட்டது.

தீய நட்புக் காரணமாக அடிகளார், இளமையிலே பல இன்னல்களுக்கு இலக்கு ஆனார். 'வேசையர் விடுதி போகும் அளவிற்குக்கூட வந்துவிட்டது,' என்று அவரே சொல்லுகிறார். பல தடவைகளில், தீயவர்களின் பேச்சுக்கு இணங்கி, தம் மனைவியாரைக்கூடத் திட்டி அடித்துத் துன்புறுத்தியது உண்டாம். தீயூழின் விளைவால் அடிகள் இன்னல்களுக்கு இலக்கானதில் வியப்பன்று; ஆனால், தம் முயற்சியாலும் ஒழுக்க நலத்தாலும் உடனுக்குடன் திருந்தி மேம்பட்டதுதான் விந்தையினும் விந்தை!

தீய நட்பால் அவரிடம் குடிகொண்ட பிறி

தொரு பழக்கம், சுருட்டுப்பிடித்தல். சுருட்டு வாங்கக் காசு கிடைப்பதில்லை. பிறர் அறியப் பிடிப்பதும், முடியாது. வேலைக்காரர்கள் பணத்தைத் திருடிச் சுருட்டு வாங்கிப் பிடித்தார். 'எப்படியோ திருடிச் செயலை நடத்துகிறோமே!' என்பதில் அவருக்கு மகிழ்ச்சி இல்லை; பெற்றோர் விரும்பாத செயலைச் செய்கிறோமே!' என்றதில் உள்ள இகழ்ச்சிக்கு அவர் உள்ளானார். அது குறித்தே, பலமுறை தனியிடங்களில் அமர்ந்து வருந்துவார். அடிகளை இப்படி மனச்சான்று நடு நின்று ஒறுத்தது. அடிகளார் அவ்வொறுத்தலைப் பொருட்படுத்தாது விடுவது இல்லை. குறைக்கு இரங்கிச் சீர்திருந்தும் பண்பு, பண்டு தொட்டே அவரிடம் இருந்து வந்தது. உடன் பிறந்தார் கைக்காப்பினில் சிறு பொற்றுண்டு திருடியும் சுருட்டு வாங்கிய கடனை அடைக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. அடிகளார் முதலில் உடன்பாட்டால் ஈடுபட்டாலும், பின்னர்க் குற்றம் குறித்துக் கசிந்து வருந்தினர். எப்படியும் அவரால் அக்குற்றத்தை மறக்கவே முடியவில்லை. முடிவில், 'தந்தையாரிடம் நம் குறையைச் சொல்லிப்பிழை பொறுக்க வேண்டுதலே தகவு உடைய செயல் ஆகும்,' எனத் தேர்ந்தார். நிகழ்ந்த நிகழ்ச்சி, தாம் செய்த பிழை, குற்றத்திற்கு வருத்தம், பிழை பொறுக்க வேண்டுதல் ஆகிய இன்னோரன்ன செய்திகளை எல்லாம் ஒரு தாளில் எழுதித் தந்தையாரிடம் தந்தார். தந்தையார், விவரம் உணர்ந்து, கண்ணீர் உகுத்தாராம்! அந்தக் கண்ணீரே, அடிகளது மனமா

சைத் துடைத்தது. தாம் இயற்றியது பிழை என உணர்ந்து வருந்தித் தாமே சீர்திருந்துவது மிகமிகச் சீரிய பண்பு அல்லவா?

அடிகளாரின் தந்தையார், சமயத்துறையி லேயும் தாராள மனப்பான்மை படைத்தவர். தாயார் புத்தளிபாய் அம்மையாரும் அப்படியே நல்ல மனம் கொண்டிருந்தவர். அவ்விருவரும் முகமதிய அன்பர்களையும் பார்ஸி நண்பர்களையும், இனவேறுபாடு கருதாது மனமொத்து ஏற்றுப் போற்றுவர். மேலும், அவ்விருவரும் அடிகளை இளமைப் பருவத்திலேயே, இராமன் கோவில் சிவன்கோவில் என்னும் வேற்றுமை இன்றி ஈரி டங்களிலும் அழைத்துச் சென்று வழிபட்டு வரு வதும் உண்டு. இச்சூழ்நிலைகள், நம் அடிகளாருக் குக் கடவுளைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் வேறுபாடு கருதமுடியாத அளவிற்கு இளமையி லேயே வளம் தந்து உதவின என்னலாம். இங்ஙு னம் ஒழுக்கத்திற்கு வித்தையூன்றின கல்வியும், பழக்க வழக்கமும், பெற்றோர் வழிபாடும் அவர் தம் இளம்பருவத்தின் வளம் பொருந்தின செய் திகளாகக் கண்டு அறிகிறோம். இப்பண்பு நலமே, வானுற வளர்ந்து, பிறர்க்கென வாழும் பெற்றி யுடன் அடிகளாரைப் பிற்காலத்தில் பெரு வாழ்வு வாழத் தூண்டியது.

# III கல்விப்பயிற்சி

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழாம் (1887) ஆண்டு, அடிகளார் உயர்தரப் பள்ளியின் இறுதிநிலை வகுப்பில் தேர்ச்சி பெற்றார். மேற்படிப்பினைக் கல்லூரியிற்சேர்ந்தே கற்கவேண்டும். பம்பாய், பவநகர் என்ற ஊரிடங்களிலே கல்லூரிகள் உண்டு. அடிகளார் பெற்றோர் விருப்பிற்கு இணங்கி, பவநகர்க் கல்லூரியிலே சேர்ந்தார். பவநகரில் படிப்பதால் செலவு ஓரளவிற்குக் குறையலாம் என்பது பெற்றோர் எண்ணம். அடிகளார் கல்வி கற்ற கல்லூரியின் பெயர் 'சாமல் தாஸ் காலேஜ்' என்பது.

அடிகளாருக்குக் கல்லூரிப்படிப்பில் விருப்பில்லை. பேராசிரியர்கள் புரியும் சொற்பொழிவுகளில் அவர் மனம் பொருந்துவது இல்லை. 'அதற்குக்காரணம், ஆசிரியர்களிடம் அமைந்திருந்த குறைபாடன்று; எனது படிப்பின் பிற்போக்குத்தான்,' என்று அவரே சொல்லுகிறார். இந்த அளவிலே முதல் வகுப்புத்தேர்வு முடிந்தவுடன் அடிகளார் வீடு திரும்பினார்.

மாவ்ஜீ தவே என்ற அந்தணர், அடிகளாரின் குடும்ப நண்பர்களுள் ஒருவர்; சிறந்த கல்வி

அறிவும் உலகியல் அறிவும் பெற்றவர்; "காந்தியைச் சீமைக்கு அனுப்பி மேற்படிப்புப் படிக்க வைக்கவேண்டும். காலம் மாறிவிட்டது. இவர் பாரிஸ்டர் ஆகித் திரும்பினால், குடும்பத்திற்குப் பேரும் புகழும் உண்டாகும்," என்று மாவ்ஜீ தவே கூறினார். அடிகளாருக்கு அதில் அளவற்ற விருப்பம் இருந்தது. அவர் தமையனார், பொருள் நிலை கருதியும், தம்பியாரை நீண்ட காலம் பிரிந்திருக்க இயலாமலும் முதலிலே பணம் கவன்றார்.

அடிகளின் அன்னையார் இது கேட்டு, இடி விழுந்தது போலக் கருதினார். அருமைத் தனயரை வெளி நாட்டுக்கனுப்ப அவருக்கு மனம் எழவில்லை. மேலும், இங்கிலாந்து சென்ற இந்தியர், ஒழுக்க ஈனராய், குடியராய், புலால் உண்பவராய்த் திரும்புகின்றனர் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. "இங்கிலாந்து சேய்மையில் இருப்பது; அங்கு எங்ஙனம் தனியே மகனை அனுப்புவது?" என்றும் அன்னையார் அலமந்தார்; இறுதியில் ஒருவாறு உள்ளம் தேறினார்; பின்னர், பேசார்ஜீ சுவாமி என்ற அறிமுகமான சமணத்துறவியாரிடம் கலந்து ஆலோசித்து, மைந்தரை அனுப்ப முடிவுசெய்தார். பேசார்ஜீ சுவாமி காந்தியடிகளின் குடும்பத்திற்கு வேண்டியவர். துறவியார், "பிள்ளையிடம் தீய வழியில் புகாதிருக்க உறுதி மொழி வாங்கிக்கொண்டு அனுப்பலாம்," என்று அவருக்குத் தேறுதல் கூறினார்.

அவர்கள் விருப்பிற்கு இணங்க அடிகளார் தம் அன்னையாரிடம் குடி, புலால், மாதர் என்னும்

மும்மயக்கத்திற்கும் தாம் ஆளாதல் இல்லை என்னும் சூளுரையை வழங்கி, விடை பெற்றார். அடிகளார் மேல் நாடு சென்று, பாரிஸ்டர் தேர்வுக்குப் படிப்பது உறுதி ஆயிற்று.

இங்கிலாந்து செலவும், பாரிஸ்டர் பட்டமும் இளம்பருவத்தினரான அடிகளுக்கு எவ்வளவோ பெரிய அவாவை எழுப்பி இருத்தல் கூடும். அதனாலேதான் அடிகள் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று துடிதுடித்தார். ஆயினும், அடிகளார் அன்னையாரின் அகம் குளிரும் வழி கண்ட பிறகுதான் தமது கருத்து வழி நிற்கலானார். என்னே அவர்தம் பணிவு!

அடிகள், ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து எட்டாம் (1888) ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் நாலாம் நாள், பம்பாயில் கப்பல் ஏறினார். கப்பல் நடுக்கடலில் செல்லச்செல்ல அவருக்குச் சிறிது அலுப்புத் தட்டியது. ஆங்கிலத்தில் பேசும் பழக்கம் இல்லாததனால், அவர் எவருடனும் உரையாடுவது இல்லை. கத்தி, முள் முதலிய கருவி கொண்டு உணவு கொள்வதை அவர் வெறுத்தார். ஆகையால், எல்லாரும் இருந்து உணவு உண்ணும் பொது அறைக்கும் அவர் போவதில்லை. இராசகோட்டில் வழக்கறிஞராயிருந்து, பாரிஸ்டர் தேர்விற்காக அதே கப்பலிற்பிரயாணம் செய்த மஜூம்தார் என்பவரோடு மட்டும் பேசுவார். அவர் அடிகளாரது கூச்சத்தை அகற்ற எவ்வளவோ முயன்றார். ஆனால், பயன் ஒன்றும் கிட்டவில்லை.

கப்பலில் இருந்த ஆங்கிலேய அன்பர் ஒரு

வர், அடிகளாருக்குப் புலாலின் மீதிருந்த வெறுப்பைக் கண்டு வியந்தார். அவர் அடிக ளாரை நோக்கி, 'இங்கிலாந்து குளிர் செறிந்த நாடு; ஆண்டுப் புலால் உணவின்றி வாழ்தல் இயலாதே! உங்கள் உறுதியைச் சிறிதளவு மாற் றியே தீரவேண்டும்!' என்று வேண்டினர். இவ் வுரைகள், அடிகளார் மனநிலையைக் குலைக்க வில்லை. அன்னையார் நினைவும் தமது சூளுரை யுமே அவர் கண் முன் தோன்றின. உடனே அவர் ஆங்கிலேய அன்பரை நோக்கி, "உமது அன்பிற்கு நன்றி செலுத்துகின்றேன்; புலால் உண்பதில்லை என்று சூளுரை வழங்கி யிருக்கிறேன். ஆதலின், ஒரு போதும் புலால் உண்ணேன். புலால் இன்றி வாழ இயலாவிட் டால் யான் இந்தியாவிற்கே திரும்பிவிடுவேன்," என்று உறுதி கூறினர்.

செப்டெம்பர் மாத இறுதிச்சனிக்கிழமை அன்று கப்பல் சவுதாம்ப்டன் துறைமுகத்தில் நின்றது. அடிகள் மஜூம்தாருடன் சென்று, விக்டோரியா ஹோட்டலில் தங்கினர். அவர் சீமைக்குப் புறப்படும்போதே அங்குளள நால்வ ருக்கு அறிமுகக் கடிதங்கள் பெற்று வந்திருந் தார்; டாக்டர் பிராணஜீவன் மேத்தா என்பவ ருக்கும் தந்தி கொடுத்திருந்தார். ஆதலின், அன்று மாலை எட்டு மணிக்கு மேத்தா வந்து 'விக்டோரியா ஹோட்டலில்' அடிகளாரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். ஓட்டல் வாசத் தில் செலவு மிகுதி ஆயிற்று. அடிகளுக்கு உண வும் பிடிக்கவில்லை. பம்பாயில் இருந்து கொண்டு

வந்த உணவுப்பொருள்களைக்கொண்டே காலம் தள்ளினர். இறுதியில், சிந்துமாகாண வாசியான நண்பர் ஒருவரின் உதவியால் ஓர் அறையினை வாடகைக்கு ஏற்பாடு செய்து, அங்குச்சென்று தங்கினர்.

ஆயினும், சீமை வாழ்க்கை அடிகளாருக்குப் பிடிக்கவில்லை. எப்பொழுதும் தாய் நாட்டைப்பற்றிய நினைவே அவருக்கு எழும். அன்னையாரின் அன்பு மனக்கண் முன்னே உருவெடுத்து நிற்கும். பழைய குடும்ப நினைவுகள் இடையிடையே வந்து மனத்தினைக் கவரும். அவர் வீட்டை நினைத்து இரவு நேரங்களில் வருந்தி அழுவதும் உண்டாம்! உணவும் சீரில்லை; உறக்கமும் செம்மையில்லை; சீமை வாழ்விலும் வெறுப்பு; படிப்புமுடியாமல் திரும்புவதிலும் விருப்பமில்லை. என் செய்வார்! பெரிதும் இடருற்று வருந்தினர். அக்காலத்தில் அடிகளாருக்கு வயது பதினெட்டே.

திங்கட்கிழமை அன்று, அடிகளாரை மேத்தா மீண்டும் வந்து கண்டார். அவருக்கு அடிகளார் அறையில் வசிப்பதில் விருப்பம் இல்லை. 'சீமைக்கு வருவது படிப்பதற்கு மட்டும் அன்று; மக்களோடு மனம் கலந்து பழகி, அவர்கள் பழக்க வழக்கங்களையும் போற்றி ஏற்க வேண்டும். அதற்கு ஆங்கிலேய குடும்பத்தோடே கலந்திருந்து உறைவதுதான் நலம் தரும்,' என்பது அவர் கருத்து. அவர் அதனை அடிகளிடம் வற்புறுத்தி, இறுதியில் ஒரு குடும்பத்தாரிடம் அவரைக் கூட்டிக்கொண்டு போய் அறிமுகம் செய்

வித்து, அங்கேயே தங்கும்படியும் செய்தார். அந்த ஆங்கிலேய நண்பரும், உடன் பிறந்தவரைப் போல அடிகளாரைப் போற்றி ஏற்று அவருடன் பழகி வந்தார். அடிகள் புலால் உணவினை வெறுத்து ஒதுக்கினால், உடல் நலம் குலைவுறுவர் என்று அவர் கருதி, அன்போடு பன்முறையும் புலால் உண்ணுமாறு அடிகளை வேண்டுவது உண்டு. அடிகளார் ஒருப்படுவரோ? அன்னையாருக்குச் செய்துள்ள சூளுரையினைச் செப்பி அதிலிருந்து தப்பினாராம்!

அடிகளார் கொண்ட புலால் மறுத்தலாகிய நோன்பால் அவர் ஆங்கிலேயரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினை இழக்க வேண்டி வந்தது. அது, 'பிற துறைகளிலே முன்னின்று முயன்று, அவர்களது சமூகத்தில் பழகுவதை மிகைப்படுத்திக்கொள்ள வேண்டும்,' என்ற எண்ணத்தை அடிகளுக்கு உண்டாக்கியது. பின்னர், மேனாட்டார் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளும் பணியில் அடிகளார் இறங்கினார்.

அடிகளார் சீமை வாழ்க்கைக்குரிய புதிய உடைகளை வாங்கி உடுத்துக்கொண்டார்; பட்டுத் தொப்பிஒன்றைப் பத்தொன்பது ஷில்லிங்கு விலை கொடுத்து வாங்கினார்; பம்பாயில் தைத்த பழைய உடைகளை எல்லாம் பெட்டியில் வைத்தார்; மாலை நேரத்தில் உடுக்கும் உடைகளைப் பத்துப்பவுன் கொடுத்து நாகரிக முறையில் தைக்கச் சொன்னார்; தமையனாருக்கு எழுதித் தங்கச் சங்கிலி வரவழைத்துக்கொண்டார். 'டை' கட்டுவது, அடிக்கடி தலையை வாருவது, தொப்பியை

அழகு படிய வைப்பது முதலியவைகளைக் கலை போலப் பேணிக்கற்ருர்; நடனக்கலை, பிரெஞ்சு மொழித் தேர்ச்சி, சொற்பொழிவுத்திறன் ஆகிய பிற துறைகளிலும் தேர்ந்து வெள்ளையர்களோடு கலந்தாற்ருன் கனவாகை முடியும் என்று கருதிஞர்; பிடில் வாசிக்கக் கற்றுக்கொண்டார்; நடனம் பயில ஒரு பள்ளியில் பணம் கட்டிச் சேர்ந்தார். சொற்பொழிவிலே திறமை பெற, ஓர் ஆசிரியரை அண்டிப் பயிற்சி பெற்ருர். அடிகளார் வரலாற்றிலே இது பெரிய மாறுதலான நேரம். இப்படியே, பல துறைகளிலும் மூழ்கியிருப்பரேல், அடிகளை இந்தியத் தாயின் துயர் களைந்த சேயாக நாம் காணுதற்கு எப்படி இயலும்! ஆண்டவன் கட்டளை அடிகளாரைப் பிறிதொரு துறையிலே சிந்திக்கச் செய்தது. "ஆங்கிலக்கனவான் ஆகவேண்டும் என்ற வெறி என்னிடம் மூன்று மாதகாலமே நிலைத்திருந்தது," என்று அடிகளே இதனைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர்.

"நம் ஆயுள் நாள் முழுவதும் நாம் இங்குத் தங்கப் போவதில்லையே! ஆங்கிலத்தில் பேசும் வன்மை பெற்று நமக்கு ஆவது என்ன? பிடில் வாசிப்பதாலும் நடனம் ஆடுவதாலும் பெரிய மனிதர் ஆய்விட முடியுமா? நாமோ, மாணவன். கற்றலில் கருத்துச் செலுத்தி நல்ல தேர்ச்சி பெறவே முனைதல் வேண்டும். ஒழுக்கச் சிறப்பால் நம்மைப் பிறர் பாராட்டுவது போதுமே!" என்ற எண்ணம், இடையிடையே அடிகளார் சிந்தையில் எழுந்தது. எனவே, அவர் அந்த வழி

களை எல்லாம் வெறுத்து, மாணவநிலைக்கே திரும்பிவிட்டார்.

பாரிஸ்டர் தேர்விற்கு அரிய படிப்புத் தேவை இல்லை என்பது அடிகளாருக்குத் தெரிந்தது. ஆங்கில மொழிப் பயிற்சியை மேலும் பெருக்க விழைந்தார். கடினமான தேர்வுக்குப் போக வேண்டும் என்ற கருத்தும் இருந்தது. 'இலண்டன் மெட்ரிக்குலேஷன்' தேர்வுக்குச் செல்லுவதே நல்லது என்று சில அன்பர்கள் சொன்னார்கள். அதற்கெனப் படிப்பது என்று முடிவு கட்டி, அடிகளார் தனிப்பட்ட பள்ளி ஒன்றில் சேர்ந்து கற்றார். தேர்வுக்கு ஐந்து மாதத் தவணையே இருந்தது அவர் இலத்தீன் மொழியைச் சிறப்புப்பாடமாகத் தேர்ந்தெடுத்திருந்தார்; ஒரு விநாடியையும் வீணாக்காமல் உழைத்தார்; தேர்தலுக்குச் சென்று எழுதினார். புதிய மொழிகளான இலத்தீன் பிரெஞ்சு மொழிகளோடு சேர்த்து மற்றைய பாடங்களையும் அவ்வளவு குறுகிய காலவரம்புள் கற்றுப் பயன்பெற முடியவில்லை. கூரிய அறிவும், நினைவு வன்மையும் குறைவு என்பது அவருக்குப்புலப்பட்டது. முதல் முறை தேர்ச்சிகிட்டவில்லை. அதற்கு வருந்தினார் எனினும், மனம் சோர்ந்துவிடவில்லை இரண்டாம் முறை எழுதி அதிலே வெற்றி பெற்றார்.

அடிகளார், மேல் நாடுகளில் தங்கியிருந்த போதும் எளிய வாழ்க்கையினையே மேற்கொண்டிருந்தார்; தம்மைக்காட்டிலும் எளிய மாணவர்களோடு கலந்து பழகினார்; அவர்களது வாழ்க்கைச் செலவைப் பார்த்துத் தம்முடையதையும்

எளியதாக்கிச் செப்பம் செய்துகொண்டார்; இரண்டு அறைகளுள் ஒன்றைக் காலி செய்தார்; பாதி நேரத்திற்குத் தாமே சமையல் செய்து செலவைச் சிக்கனப்படுத்தினார்; எளிய வாழ்வு பற்றிய புத்தகங்களைப் படித்து, அதனாற்பெற்ற அனுபவத்தைத் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டி ஆக்கிக்கொண்டார். இந்தச் சூழ்நிலை மாறுதல்கள் அவருக்கு வாழ்க்கையிலே என்றும் இல்லாத சுவை தந்து நின்றன; படிக்கவும் அதிக நேரம் கிடைத்தது; வண்டிச் செலவும் குறைந்தது. அது, தினம் எட்டுமைல் பத்துமைல் கூட நடக்கும் அளவிற்கு அவருக்கு வலுத் தந்தது. பழக்க வழக்கங்கள் குடும்ப நிலைக்கு ஒத்து இயங்கின. "அக்காலங்களில் எனக்கு ஏற்பட்ட மனக் களிப்பிற்கு எல்லையே சொல்ல முடியாது!" என்று தம் வரலாற்று நூலில் அடிகளாரே உளம் கனிந்து எழுதியிருக்கிறார்.

அடிகளாரது சீமை வாழ்விலே நாம் குறிக் கொள்ளத் தக்க செய்திகள் பல. அவருடைய அன்பர்களும் நண்பர்களும், அடிகளை மேனாட்டு நடையுடைகளிலே மூழ்குவித்து ஆங்கிலக் கனவானாக்கவே முயற்சி செய்தார்கள். ஆண்டவன் அருளால் அடிகளார் அதிலிருந்து தப்பினார். தாயாருக்குச் சொல்லிய சூளுரை தவறும்படி யான நிகழ்ச்சிகள் எத்தனையோ நேர்ந்தன. எனி னும், அவ்வமயங்களிலெல்லாம் அறிவுடனும் மனவுறுதியுடனும் நடந்து வந்தார்.

ஒரு முறை மேத்தா அவர்கள் அடிகளாரை ஒரு நாடகத்துக்கு அழைத்துச் சென்றார்.

உணவு விடுதியில் பெருவிருந்து நடக்க ஏற்பாடாயிருந்தது. இருவரும் விடுதியில் உண்ணச் சென்றனர். முதலிலே, குழம்பு பரிமாறப்பட்டது. குழம்பிலே புலாற்கலப்புண்டா இல்லையா என்பதிலே அடிகளாருக்குத் தெளிவில்லை. நண்பரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் அச்சமாயிருந்தது. ஏற இறங்க நோக்கி உணவு கொள்ள மனம் இன்றி விழித்தார்; உணவு பரிமாறியவனைக் கூப்பிட்டு ஐயம் தெளிய விழைந்தார். அது கண்ட நண்பர் மேத்தா சீறிச் சினந்து, "முறைப்படி நடந்துகொள்ள வேண்டும். பரிமாறியதை உண்ண வேண்டும். காட்டுமிராண்டியைப் போல விழிப்பது அழகன்று. விரும்பாவிடில் வெளியே போய்விடும்!" என்று கூறினார். பழிப்புக்கும் இழிவுக்கும் அஞ்சிப் புலால் உண்ணலை மேற்கொளளுவது அழகாகுமா? அன்னையார் மொழி நினைவுக்கு வந்தது. அடிகளார் அதனைக் காத்தலே அறம் எனக் கண்டார்; உடனே வெளியேறித் தப்பினார். அடிகளாரது மனவுறுதியின் மாண்புதான் என்னே!

இப்படியே மற்றொரு கடுஞ்சோதனையினின்றும் அடிகளார் விடுதலை பெற்றார்: ஆயிரத்து எண்ணூற்றுத்தொண்ணூற்றாறும் (1896) ஆண்டில், 'போர்ட்ஸ் மௌத்து' என்னும் ஊரில் 'மரக்கறி உணவாளர் மாநாடு' ஒன்று கூடிற்று. அடிகளாரும் மற்றோர் இந்திய நண்பரும் அம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டனர். வரவேற்புக் கழகத்தார், இவர்கள் தங்க விடுதி ஒன்று தயார் செய்திருந்தனர். அஃது ஒழுக்கம் கெட்டவர்

வீடு. அந்த வீட்டில் வசித்த பெண்ணைப்பற்றிக் கழகத்தாருக்கும் ஒன்றும் தெரியாது. முதல் நாள் மாநாடு முடிந்த பின்னர் நண்பர் இருவரும் இரவு உணவருந்திச் சீட்டு ஆடத் தொடங்கினர். அவ்விளையாட்டில் அவ்வீட்டுத் தலைவியும் கலந்து கொண்டாள். ஆட்டத்திடையே வெறுப்பிற்கு இடமான பேச்சுக்களும் செய்கைகளும் தொடர்ந்தன. கேலிப் பேச்சின் இனிமையில் மயங்கி, அடிகளாரும் அதிற்கலந்துகொண்டனர். பேச்சு வெறுக்கத்தக்க செயலாக மாறும் நிலைமை வந்தது. சீட்டுக் கட்டை ஒரு புறம் வைத்து அவள் மயக்கிலே சிக்கிப் படுகுழியிலே வீழ்ந்து ஆழ வேண்டிய தருணம் நேர்ந்தது. உடன் வந்த நண்பர், "இப்பேய்க்கு நீ இரையாகாதே! விலகிப் போ! விரைந்தோடு!" என்று பரிந்து எச்சரிக்கை செய்தார். அவர் கடிந்தவுடனே, அடிகளாருக்கு நாணம் மேலிட்டது. தாயாரின் நினைவும், தாம் உரைத்த சூளும் நினைவிற்கு வந்தன. அந்த இடத்தில் இருந்தால் என்ன நேருமோ என்று அஞ்சினர். மாநாட்டின் மற்றைய நாள் நிகழ்ச்சியிலே அவருக்குக் கருத்தில்லை. அடிகள் ஓடி வந்து தம் அறையினுட்புகுந்தார்; தீய செய்கையினின்று விலகுமாறு தம்மைக் கடிந்த அன்பரின் குரலை 'ஆண்டவன் குரல்' என்றே அடிகளார் குறிப்பிட்டிருக்கிறார்.

அடிகளாருக்கு இடையிலே பிரமஞான சங்கத்தாரின் கூட்டுறவு ஏற்பட்டது. அவர் அச்சங்கத்தாரோடு சேர்ந்து கீதை நூலைப்படித்

தார். அதில் அவர் மனம் பதிந்து திருந்தியது. 'பகவத்கீதை' ஓர் அரிய நூல் என்பதை அவர் அப்பொழுதுதான் உணர்ந்தார். நம்பிக்கை குன்றிய நேரங்களில் எல்லாம், தனித்திருந்து அதனை மனனஞ்செய்தல், அவருக்கு வழக்கமாயிற்று. மான்செஸ்டரைச் சார்ந்த கிறித்தவ அன்பர் ஒருவரோடும் அடிகளாருக்கு அறிமுகம் ஏற்பட்டது. அவரது தூண்டுதலால், கிறித்தவ நூலாகிய விவிலிய நூலினை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினார். புதிய ஏற்பாட்டில் உள்ள ஏசுநாதருடைய 'மலைப்பிரசங்கம்' அடிகளாருக்கு மிகவும் பிடித்தது. கீதை நூலோடு அதன் கருத்துக்களையும் ஒப்பிட்டு உண்மை ஓர்ந்தார். இளமைப் பருவத்தில் படித்த சியாமளபட்டர் இயற்றிய நீர்மோர்ப் பாட்டும் புதிய முறையில் அடிகளார் மனத்தில் பதிந்தது. 'வலக்கன்னத்தில் அடித்தவனுக்கு இடக்கன்னத்தையும் காட்டு,' என்ற கிறித்துவின் போதனை அடிகளாருக்கு அளப்பரிய களிப்பினை அளித்தது.

வெயிலின் கொடுமையறிந்தார்க்கு நிழலின் அருமை தெரிவதுபோல, அடிகளாருக்கு மேனாட்டுக் களியாட்டத்தினால் தம் தாய்நாட்டின் பழம் பெருமை புலனாயிற்று. இருளிடை நின்ற விளக்கினை ஒப்ப மாயவாழ்வின் இடையிலே அடிகளார் சிக்கி நின்ற போதும் அதனால் பற்றப் படாத பேரொளியாகவே விளங்கினார். அன்பரும் நண்பருமாய அனைவரும், அடிகளாரது பற்றற்ற நிலைகண்டு அவரை வியந்து நயந்தனர்.

இத்தனை அலுவல்களுக்கு இடையில் அடிகளார் தம் படிப்பையும் விடவில்லை; ஒன்பது மாத காலம் ஓய்வு இன்றி அல்லும்பகலும் கற்று வந்தார். ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஒராம் (1891) ஆண்டு ஜூன் மாதம் பன்னிரண்டாம் நாளிலே, அடிகளார் பட்டம் பெற்றுத் தாய் நாடு திரும்பினர்.

## IV தொழில் முயற்சி

கப்பல் ஏடன் துறைமுகம் விட்டுப் புறப் பட்டது. தொடக்கம் முதலே கடல் நிலைசீரில்லை. பயணம் செய்தார் யாவருமே நோய் வாய்ப்பட் டனர். பெரும்புயல் வீசிற்று. அலைகள் கொந் தளித்து எழுந்தன. கடலிலே மட்டுந்தான் இந்த அமைதியற்ற நிலை என்று எண்ண வேண்டா. அடிகளார் மனத்திலும் குமுறலும் கொந்தளிப் பும் குடி கொண்டன; சோர்வும் அச்சமும் அடுத்தடுத்துத் தோன்றின. "சட்டக்கலையில் தேர்ந்துவிட்டோம்! ஆனால், தொழில் செய்யும் நடைமுறை அறிவு இன்னும் பெறவில்லையே!" என்ற ஏக்கமே அவர்தம் நிலையற்ற மனநிலைக் குக் காரணம். 'நம் தாயாரையும் தாய்நாட்டை யும் காணப் போகிறோம்!' என்றிருந்த மகிழ்ச்சி யையும் அது பாழ்படுத்திற்று.

அடிகளாரின் தமையனார் அவரது வரவை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தார். தம் இள வலின் பாரிஸ்டர் வாழ்க்கை பற்றிப் பல முறை அவர் மனக்கோட்டைகள் கட்டிவந்தார். தம்பி யார் தொழிலிலே இறங்கிப் பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதிலேயே அவர்

தம் சிந்தனை இலயித்தது. அடிகளார்மீது அவருக்குப் பாசம் மிகுதி. உயிரினும் இனியராகத் தம்பியாரை அவர் நேசித்தார். இடையிலே தாயார் இறந்த செய்தியைக்கூட அடிகளாருக்கு அவர் அனுப்பவில்லை. அயல் நாட்டில் தங்கும் போது தம்பியாருக்குத் துன்பந்தரும் செய்தி தர வேண்டா என்ற பரந்த எண்ணமே அதற்குக் காரணம். அடிகளார் வந்தவுடன் தொழிலில் இறங்குவதற்கு இயலுமாறு பல வசதிகளையும் செய்து வைத்திருந்தார். பெரும்பொருட்செலவினைச் சிறிதும் அவர் பொருட்படுத்தவில்லை.

துறை முகத்திலேசென்று, தமையனார் அடிகளை வரவேற்றார். இருவரும் வீடு சென்றனர். தம் மொழி தவறாது ஆணைபேணி வீடு திரும்பி வந்த தனயரைக் காணத் தாயார் அங்கில்லை. விதி வழியிலே சதி செய்து அன்னையாரைப் பிரித்துவிட்டது! அடிகளார் அன்னையாரைப் பார்க்க முனைந்தார்; அன்னையார் விண்ணுலகடைந்த செய்தி கேட்டுத் துணுக்குற்றார். அச்செய்தி பெரிய அதிர்ச்சியைத்தந்தது. தாயாரைக் கண்டு மகிழவேண்டும் என்று அவர் மனத்திலே முகிழ்த்திருந்த எண்ணங்கள், மாயமாய் மறைந்தன. ஆயினும், அவர் அழுது புலம்பவில்லை; கண்ணீர் அதிகம் சிந்தவும் இல்லை; ஓரளவு மனம் தேறி எல்லாவற்றையுமே மறந்து, தொழிலில் இறங்கினார்.

சிறிது காலம் இராசகோட்டிலேயே தங்கித் தொழில் புரிந்தார். பின்னர் நண்பர்களின் ஆலோசனையின்படி பம்பாய் நகரம் சென்று

தங்கினார்; அங்கு இந்திய நாட்டுச்சட்டங்களில் தேர்ச்சி பெற விழைந்து, பயிற்சியும் பெற்றார். தமையனார் முயற்சியால் ஓரளவு வழக்கும் வருமானமும் வந்தன. எனினும், செலவினத்திற்கு ஈடு செய்யும் நிலையிலே அஃது இல்லை. செலவினம் பெருக்கம் அடைந்துகொண்டே வந்தது. வருமானமோ, சுருங்கியது.

சட்டக்கலையில் தேர்ந்து பட்டம் பெற்றவர் தாம் நம் அடிகள். மற்றவர்களைப் போன்றே அவரும் மிடுக்காகத் தொழில் புரியத்தொடங்கினார். ஆனால், தொழிலிலே வெற்றிகிட்டவில்லை. முதல் வழக்கிலேயே நடுக்கமும் மயக்கமும் தோன்றி அவரை ஒடுக்கிவிட்டன. அவர் மனவூக்கம் குலைந்து மலைத்து நின்றார். மேலும், வக்கீல்கள் கைக்கூலி கொடுத்து வழக்குப் பெறும் முறையும் அவருக்குப் பிடிக்கவில்லை. அஃது அத்தொழில்மீது அடிகளாருக்கு வெறுப்பினை விளைத்தது. ஒழுங்கு வழுவாது ஓரளவு பொருளீட்டினது போதும் என்ற மனநிலை அவரிடம் வேரூன்றியது. பின்னர் அமைதியான வாழ்வு ஆசிரியத்தொழிலிலேதான் அமையும் என்ற கருத்தால் ஆசிரியராக முனைந்து முயற்சியும் செய்தார். அதுவும் கிட்டவில்லை.

அவர் இறுதியில் பம்பாயை விட்டு இராசகோட்டிற்கே திரும்பினார்; தனியாக ஒரு தொழில் விடுதி அமர்த்தி வேலையைத் தொடங்கினார். சிறிது வேலை கிடைத்தது. வழக்கின் மனுக்கள் தயாரித்துவந்தார். "அந்த வேலைகூட எனது திறமை குறித்து வரவில்லை; அன்பர்க

ளான பிற வக்கீல்களின் ஆதரவாலேதான் கிடைத்து வந்தது," என்று அவர் எழுதியிருக்கிறார். வந்த மனுக்களும், எளிய மனிதர்களின் வேலையாகவே இருந்தன. எனினும், மாதம் ஒன்றுக்கு மூந்நூறு ரூபாய் அளவில் இங்கு வருமானம் கிட்டி வந்தது. இதற்கு இடையில் கத்தியவார்த்தலியரசின் தொல்லைகளைப் பற்றிய பலசெய்திகளையும், அடிகளார் அறியலானார். அவருக்கு மேலும் பன்மடங்கு மனவெறுப்பு ஏற்பட்டது.

இங்கிலையில் அடிகளாரின் தமையனுருக்கு ஒரு செய்தி கிடைத்தது: அப்துல்லா சேட்டு என்பவரிடமிருந்து வந்த செய்தியில் அடிகளாரைத் தென்னுப்பிரிக்காவுக்கு அனுப்ப வேண்டும் என்றும், அவர் கான் முகமது என்பவருக்கு எதிராக நின்று நாற்பதினுயிரம் பவுன் வர வேண்டிய வழக்கு ஒன்றை நடத்துவதில் உதவி செய்யவேண்டும் என்றும் கண்டிருந்தது. அச்செய்தி அறிந்ததும் அடிகளுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. " ஓராண்டு தென் ஆப்பிரிக்காவில் தங்க வேண்டும். போகவரச் செலவுகளுடன், உணவு நீங்க, ஊதியம் நூற்றைந்து பவுன் அளிக்கப்படும்," என்ற உடன்பாட்டினைப் பெற்றுச் செல்ல ஒப்புக்கொண்டார். ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று மூன்றும் (1893) ஆண்டு இந்தியாவிலின்று ஆப்பிரிக்காவிற்கு அடிகளார் பயணப்பட்டார்,

அப்துல்லா சேட்டு நேட்டால் துறைமுகத்திலே வந்து, அடிகளாரை வரவேற்ருர். தொடக்

கத்திலேயே வெள்ளையர்கள் கறுப்பினத்தை நச்சுக் காற்றை ஒத்துத்துச்சமாகக் கருதி வருவது தெரிந்தது. கருமைக்கு உள்ள சிறுமையும் வெண்மைக்கு உள்ள பெருமையும் கண்டு அடிகளார் மனம் உளையலானுர்; அப்துல்லா சேட்டோடு பழகிய வெள்ளையர் எவரும் அவரிடம் அற்பத்தனத்தையே காட்டுவது கண்டு அருவருப்பு உற்ருர். சேட்டு, தம் வீட்டிற்கு அடிகளாரை அழைத்துச் சென்று, அங்குத் தங்குவதற்குத் தம்மறைக்குப் பக்கத்து அறையை ஒழித்துத் தந்தார். அடிகளாரின் நடையுடை பாவனைகளைக் கண்ட அப்துல்லா சேட்டிற்குச் 'செலவு மிகுதியாகுமே!' என்ற கவலை உண்டாயிற்று. அந்த நேரத்தில், வழக்கைப் பற்றிய முக்கிய வேலை ஒன்றும் இல்லை. 'வெள்ளை யானையை வீட்டிற்கட்டிக்கொண்டுவிட்டோமே!' என்று அவர் வருந்தினுர். வழக்கு டிரான்ஸ்வாலில் நடந்துகொண்டிருந்தது. உடனே அடிகளாரை அங்கு அனுப்புவதிலும் பலன் இல்லை என்று கருதினுர்.

மூன்ரும் நாள், அப்துல்லா சேட்டு அடிகளை நீதிமன்றத்திற்குத்தம்முடன் அழைத்துச் சென்ருர்; சிலருக்கு அவரை அறிமுகமும் செய்து வைத்தார். அவ்வமயம் அடிகளார் இந்தியர்கள் அணியும் தலைப்பாகையைத் தலையில் அணிந்திருந்தார். நீதிபதி அடிகளாரைச் சிறிது நேரம் உற்று நோக்கித் தலைப்பாகையினை நீக்குமாறு கட்டளை இட்டார். இந்தியர்கள் மன்றத்தினுட் புகும்போதே தலைப்பாகையினை நீக்கிவிடவேண்

டும் என்பது விதி. அடிகளார் தலைப்பாகையை நீக்க மறுத்து வெளியேறினார். சின்னாள் இந்நிகழ்ச்சி குறித்துப் பத்திரிகைகளில் போர் நிகழ்ந்தது. அடிகளார் வருகையை வேண்டாத இதழ்கள், 'அழையாத விருந்தாளி' என அடிகளாருக்குப் புனைபெயர் சூட்டி எழுதின. இதனால், அடிகளாரது பெயர் நாடெங்கும் பரவி விளம்பரம் ஆயிற்று.

இதற்கு இடையில், அப்துல்லா சேட்டிற்குப் பிரிடோரியாவிலிருந்து செய்தி ஒன்று வந்தது: வழக்கு நடத்தும் தொடர்பாக, முடியுமானால் அவரையே புறப்பட்டு வரும்படி அங்கிருந்து வழக்கறிஞர் எழுதியிருந்தார். சேட்டு, அடிகளாருக்கு வழக்கு விவரங்களை எல்லாம் சொல்லி, அவரையே அங்கு அனுப்பிவிடுவது நல்லது எனக் கலந்து முடிவு செய்தார். அம்முடிவின்படி அடிகளார் ஐந்தாறு தினங்களில் பிரிடோரியாவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவர் பிரிடோரியாவில் ஓராண்டிற்கு அதிகம் தங்கினார்; அங்குள்ள இந்தியர்களோடு எல்லாம் தொடர்பு கொண்டார்; பலகிறித்தவ அன்பர்களோடு நண்புபூண்டு விவிலிய நூலை ஆராய்ந்தார்; இந்திய மக்களின் குறை தீர்த்தற்பொருட்டு ஒரு கழகம் நிறுவினார்; பொது நலத்தொண்டின் தன்மை, திறன், பயன் முதலியவைகளை நல்ல முறையிலே பெற்றுப் பயன் அடைந்தார்; வழக்குப் பற்றியும் அறிஞர்களோடு ஆய்ந்து செய்யத் தகுவன எல்லாம் செய்தார்.

அடிகளார் மேற்கொண்டிருந்த வழக்கு மிகப்பெரியது; பல சிக்கலான பிரச்சினைகளை உள்ளடக்கிக்கொண்டிருந்தது. இரு சாராரும் தத்தம் சார்பிலே திறமையான நியாயவாதிகளை வழக்கு நடத்த அமர்த்தியிருந்தனர். வழக்கு எத்தனை நாட்கள் தொடர்ந்து நடக்கும் என்பது எவராலும் கணிக்க இயலாது. செலவும் ஏறிக் கொண்டே வந்தது. அடிகளாருக்கும் எதிரி நல்ல முறையிலே அறிமுகமாகியிருந்தார். அவரிடம் சென்று சொல்லிச் சமாதானமாக வழக்கை முடித்துவிடும்படி செய்ய வேண்டுவதே தமது அலுவல் என அடிகளார் கருதினர். அப்படியே அரும்பாடு பட்டு,'முப்பத்தேழாயிரம் ரூபாயைத் தவணைமுறையிலே டயாப்ஜி என்பார் செலுத்த வேண்டும்,' என்று முடிவு செய்து, வழக்கினைத் தொடர்ந்து நடவாமல் நிறுத்த வழி செய்தார். இரு சாராருக்குமே அடிகளார் மீது அளவு கடந்த அன்பும் ஆர்வமும் பெருகின. அடிகளாரும் டர்பனுக்குத் திரும்பினர்.

அடிகளார், தென்னாப்பிரிக்காவிலே இருபது ஆண்டுகட்கு மேலாகத் தங்கியிருந்தார். இருந்தாலும், தமது தொழில் ஒன்றே குறி என்று இருந்து செல்வம் சேர்த்துச் சிறப்பதில் அவர் தம் கருத்துச் செல்லவில்லை. அவர் காலத்திற் பெரும்பகுதி பிறர்க்கென உழைக்கும் பொது நலத்தொண்டிலேயே கழிந்தது. அவர் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டார். வக்கீல் தொழிலிற்பொய் சொல்லி வழக்கில் வெற்றி பெற அவர் விழைவதில்லை. வழக்குக்கு வருப

வர்கள் தமது கைச்செலவிற்கு மேல் அதிகம் கொடுத்தாலும் அதைப்பெற மறுத்துவிடுவார்; அன்போடும் ஆதரவோடும் அவர்களிடம் நடந்து பெரும்பாலும் வழக்குகளை மேற்கொண்டு நடத்த விடாமல், இருசாராரையும் சமரசமாய்ப் போய்விடுமாறே வற்புறுத்துவார். இப்படி அடிகளார் கட்சிக்காரர்கள் பேரன்பினைப் பெற்று வந்ததனால், அடிகளாரது அரசியற்பணியில் எல்லாம் அவர்களே பிற்காலங்களில் தொண்டர்களாய் மாறி, இறுதிவரை உறுதியுடன் நின்று உழைத்தார்கள்.

ஜோகன்ஸ்பர்கு என்னுமிடத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று நாம் இங்கு அறிதற்கு உரியது: கணக்கைப்பற்றிய மிகச் சிக்கலான வழக்கு ஒன்றை அடிகளார் மேற்கொண்டு நடத்தினர். கணக்குத்தவறுதலாக நேர்ந்த பிழையே அவ்வழக்கின் அடிப்படை. ஆனால், கட்சிக்காரர் அதனைச் சொல்லாமல், அடிகளாரை ஏமாற்றியிருந்தார். வழக்குப் பாதி நடந்துகொண்டிருக்கும்போது அடிகளாருக்கு உண்மை புலப்பட்டது. கட்சிக்காரர் மிக நடுங்கினர். அடிகள், "தவறுதலை ஒப்புக்கொண்டு வாதிப்பதே தலையாய அறம்," என்று வழக்கிட்டவரிடம் சொன்னர். ஆனால், கூட்டாளியான மற்ருெரு வக்கீல், "நாம் தவறுதலை ஒப்புக்கொள்வது தகாது. அது நமக்கு நாமே விலங்கிட்டுக்கொள்வதற்கு ஒப்பு ஆகும்," என்று அடிகள் கூற்றை மறுத்து உரைத்தார். அடிகளோ, உண்மையை மறைக்கச் சிறிதும் உடன்படவில்லை. கட்சிக்காரரும் அலையிடைப்பட்ட

துரும்பு போல ஆனார். இறுதியாக அடிகளார் சொல்லுகிறபடியே நடக்க அவர் முடிவு செய்தார். பெரிய வக்கீல் ஒதுங்கி நின்றார். அடிகளார் நீதிபதியின்முன் தமது கட்சியில் நேர்ந்த பிழையைத் தாமே எடுத்துக்காட்டினார். நீதிபதி அதுகண்டு வியந்து, நேரிய முறையில் முடிவு கூறினார். தம் வழக்கில் கண்ட குறையைத் தாமே எடுத்துக் காட்டி வழக்கைத் தள்ளிவிடுமாறு பேசிய அடிகளது நடுவு நிலைமை நாம் மிகவும் வியந்து போற்றுதற்கு உரியது. வக்கீல் தொழிலையும் உண்மையுடன் ஒத்து இயங்கும்படி செய்த பெரியார் நம் அடிகளார்.

'பார்ஸி ருஷ்டம்ஜீ' என்பவர் அடிகளாரின் அன்பிற்கு உரிய நண்பர் ; தென்னாப்பிரிக்காவில் பெரிய வணிகர். அவர் பெயரும் புகழும் அங்குள்ள இந்தியர்களிடையே வீடுதோறும் பரவியிருந்தன. பொது நலப்பணிகளில், அடிகளாரோடு கூடிநின்று தோள் தந்து உதவியவர் அவர். பல நல்ல பண்புகளுக்கு இடையே, அவரிடம் ஒரு தீக்குணமும் இருந்து வந்தது: பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களிலிருந்து பல திறச் சரக்குகள் அவருக்கு வருவது உண்டு. பெரிதும் வரி கட்டாமலே அவர் அச்சரக்குகளை வழக்கமாக இறக்குமதி செய்துவந்தார். துறைமுக அலுவலாளர் எவரும் அவரிடம் பழகாதவரல்லர். ஆதலால், அவரைப் பெரிதும் நம்பி, அவர்காட்டும் பட்டியலை ஒட்டியே துறைமுகத்தாரும் சுங்கம் வசூலித்து வந்தனர். ஒரு நாள் திருட்டுப் புலப்பட்டுவிட்டது ! என்செய்வார் பாவம்! அவரோ,

பெரிய மதிப்பு வாய்ந்த மனிதர். வழக்கு நடந்தால், மதிப்பிழக்க வேண்டி வரும். ஆதலின், அவர் காந்தியடிகளாரிடம் ஓடி வந்து உண்மை நிலையைத் தெரிவித்து, உதவி செய்ய வேண்டினார். அடிகளார், அவர் தமக்கு நெருங்கிய நண்பராயினும், அவரிடம் குற்றம் கண்டு சீற்றம் கொண்டார். பிழையை உள்ளவாறு முறையிடுவதன் வாயிலாகத்தான், ஏதாவது தம்மால் செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார். ருஷ்டம்ஜீ மற்றைய வக்கீல்களிடமும் சென்று கலந்து ஆலோசித்தார்; இறுதியில் அடிகளார் கூறிய வழியையே உறுதியாய்ப் பற்றி நின்றார்!

அடிகளார் அவரை நோக்கி, "இவ்வழக்கினை நீதி மன்றம் புகாதபடி தடுப்பதுதான் சிறப்பு. கடற்சுங்கத்தலைவரைக்கண்டு பிழை சொல்லி, விடுதலைக்கு முறையிடுவோம். மேலே, வழக்கை நடுத்துவதோ, அன்றி நடத்தாது நிறுத்துவதோ அவர்கள் விருப்பினைப் பொறுத்தது. அல்லாவிடில் நீங்கள் சிறை புகுதல் நேரிடும். பிழை செய்வதுதான் பழியே ஒழிய, செய்த பிழைக்குத் தண்டனையாகச் சிறை செல்வது பழியன்று. இது பாவத்திற்குச் சிறந்த கழுவாயே ஆகும்," என்று உறுதி கூறிவிட்டு, மேல் அதிகாரிகளைக் கண்டு பேசினார். ருஷ்டம்ஜீயின்மீது வழக்குத் தொடரவில்லை. திருடியதாக ஒப்பிய தொகைக்கு இரண்டத்தனை தொகை அபராதம் விதிக்கப்பட்டதுடன் வழக்கும் முடிந்தது. ருஷ்டம்ஜீ பின்பு இதற்குப் பெரிதும் நாணி, முன்

நிகழ்ச்சி முறைகளை எழுதிச் சட்டமிட்டுத் தம் வாணிப நிலையத்தில் மாட்டி வைத்தனராம்!

பொருள் வேட்கை மிகவுடைய வணிகமரபிலே பிறந்தவர் நம் அடிகளார்; செல்வத்திற் சிறந்த அமைச்சரின் புதல்வர். வாழ்க்கையோ, மேனாட்டு நாகரிகத்தில் அலர்ந்து நின்றது. தொழில், பாரிஸ்டர் தொழில். உலகிலுள்ள செல்வம் எல்லாம் ஈட்டினாலும் அத்தொழில் உடையார் வேட்கை தணியாது. எனினும், அத்தொழிலை மேற்கொண்ட அடிகளார் தொழில் நடத்திய விந்தை நம் சிந்தையைக் கவர்வதாய் உள்ளது!

அடிகளார் தங்க, வான் அளாவிய மாடிவீடு இல்லை. பூட்டப்பெட்டியும், அதில் சேமித்து வைக்கப்பொருளும் இல்லை. அவர் பொன்னும் பொருளும் வேண்டும் என்று எண்ணிச் சேர்த்தவரும் அல்லர், ஆனால், ஆண்டவன் இயற்கைப் படைப்புக்கள் அனைத்தும் அவருடையனவே ஆகும். இயற்கை வாழ்வு வாழ்ந்து, சிந்தை நிறைவாகிய செல்வம் பெற்றவர் அவர். இராசகோட்டில், அடிகளாருக்கு ஒரு முறை பொன்னும் பொருளும் அளிக்கப்பட்டன. அவைகளைப் பெற்ற அடிகளார், "இவற்றை வைக்க எனக்குப் பெட்டி இல்லை. மேலும், பெரும்பொருள் பிறர் மனத்திலே திருடும் உணர்வைத் தூண்டும். ஆகவே, இவைகளை ஜம்னாலால் பஜாஜ் அவர்கள்பால் சேர்த்துவிடுவேன்," என்று கூறினார்.

அடிகளார் ஆப்பிரிக்காவில் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டார்; ஓர் ஆச்சிரமம்

அமைத்து, தமக்குவேண்டும் உணவுஉடைகளைத் தாமே ஆக்கிக்கொண்டார்; பிறரையும் அங்ஙனமே வாழ வற்புறுத்தினர். மயிர்வினைஞர், துணி வெளுப்பவர் முதலிவர்களையும் தம்பொருட்டு வேலை செய்ய அவர் ஏவுவதில்லை. எல்லாவற்றிலும் தம் கையையே தமக்கு உதவியாகக்கொண்டிருந்தார்; எளிய வாழ்வினை மேற்கொண்டார். தேவைக்கு அதிகம் தொழிலிற்பொருள் ஈட்ட அவர் என்றும் முயன்றதில்லை.

"தென்னப்பிரிக்காவிலேயே இருந்தால் பணம் சம்பாதிப்பதிலேயே கருத்துச் சென்று விடுமோ என்று ஒருமுறை பயந்தேன்," என்று அடிகளாரே எழுதியிருக்கிறார். ஒரு முறை தென்னப்பிரிக்காவினின்று அடிகளார் தாய் நாடு திரும்பினர். அன்பினல் பிணிப்புண்ட நண்பர் பலர், விலையுயர்ந்த பொருள்களை அடிகளாருக்குப் பரிசு அளித்தார்கள். அவைகளிலே ஐம்பது கினி பெறத்தக்க மாலையொன்று அடிகளாரின் மனைவியாருக்கு அளிக்கப்பட்டது. அடிகளார் அவைகளைப் பெறவும் விரும்பவில்லை; விடவும் அவருக்கு மனமில்லை. பரிசு பெற்ற அன்று இரவெல்லாம் அவருக்குத் தூக்கம் இல்லை. "இப்பரிசுகளைப் பெற்றல், நாம் செய்த தொண்டுகள் எல்லாம் பயன் கருதிச்செய்தனவாக அல்லவா முடியும்?" என்று அவர் வருந்தினர்; தம்மனைவியாரிடமும் குழந்தைகளிடமும் கலந்து ஒரு முடிவு செய்தார்: பெற்ற பரிசுகளை எல்லாம் அன்றே அறநிதியாக ஒதுக்கி மக்களுக்குப் பயன் படும்படி செய்துவிட்டார்.

பொருளே கூடாது என்பது அடிகளார் கருத்தன்று. "வாழ்க்கைக்குப் பொருள் தேவை. ஆனால், அறவழிக்குப் புறம்பாகப் பொருள் ஈட்டுதல் அடாது. பிறரை வறியராக்கும் முறையில் நாம் அதனைச் சேமித்து வைத்தலும் தகாது. ஒருவரது ஆடம்பர வாழ்வே, மற்றவர் வறுமைக்குக் காரணம். ஆகவே, ஒவ்வொருவரும் எளிய வாழ்வு வாழ்ந்து இன்பம் காண வேண்டும். உழைப்புக் கூலிக்காகவே என்று கருதாது, கடமை அறமாக மேற்கொள்ள வேண்டும்," என்பது அடிகளார் கருத்து. தொழில் செய்வதும் பொருளீட்டுவதும் பற்றி அடிகளார் அறிந்துகொண்ட உண்மைகள் இவை. ஆனால், அடிகளார் பிறருக்கு இவற்றைப் புகட்டியதோடமையாமல், தாமே பின் பற்றி உறுதியாய் நடந்தும் வழி காட்டினர்.

## V தென்னாப்பிரிக்கா வாசம்

அடிகளார் அப்துல்லா சேட்டின் வழக்கினை நடத்த ஆப்பிரிக்கா அடைந்த செய்தியை நாம் அறிவோம். அதிலிருந்து சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவர் அங்கேயே தங்கித் தொண்டு புரிந்தார்; அரசியலாரோடு பெரும் போராட்டத்தினைத் தொடங்கி நடத்தினர். அடிகளாரின் வாழ்க்கை உருப்பெற்ற இடமே அது தான். வழக்கு நடத்த வந்த அவரது மனம், பிறிதொரு துறையிலே நாட்டம் உற்றது. அடிகளார், தமது வாழ்க்கையைப் பொது நலப்பணியில் ஈடுபடுத்தினர். மெய்யின் மேன்மையினைக் கண்டு போற்றி, அதனை உலகிற்கு உணர்த்தினர்; உண்மை வழி ஒன்றிலேயே விழி வைத்துச் சென்றார். அது ஒன்றே, இறுதிவரை உறுதி தரும் நெறி என்பதனையும் உலகிற்கு ஒரு தனி நின்று உணர்த்தினர்.

அடிகளார் அங்குக் காலடி வைத்தபோதே, தென்னாப்பிரிக்க வெள்ளையரது நிறத்திமிரை நேரிற்கண்டார். கறுப்பரை அவர்கள் இழிவாகக் கருதுவதும், பேசுவதும், நடத்துவதும், பிறவும் அடிகளார் உள்ளத்தை உருகச் செய்தன.

அப்துல்லா சேட்டோடு ஆங்கிலேயர்கள் நடந்து கொண்ட போக்கினைத் துறைமுகத்திலேயே அடிகளார் கண்டு துணுக்குற்ருர். நேருக்கு நேராக அடிகளாருக்கே கறுப்பர் என்ற காரணத்தால் பல இழிவுகள் செய்யப்பட்டன.

அடிகளார் நேட்டாலில் தொழில் நடத்திக் கொண்டிருந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று இங்குக் குறிப்பிடத்தக்கது: ஒரு நாள் அடிகளாருக்குச் சிறிதுநேரம் நீதிமன்றத்திலே தங்கநேரிட்டது. அடிகளார் தமது குல்லாவைக் கழற்றிப் பக்கத்தில் இருந்த பாகை தாங்கியில் மாட்டி வைத்தார். ஏவலாளன் அதனைக் கண்டான்; உடனே முகம் சிவக்க வெகுண்டு, அடிகளாரை அணுகினுன்; தலைப்பாகையைத் தாங்கியினின்று எடுத்துவிடுமாறு கட்டளை இட்டான். 'கறுப்பர்கள் பாகைகளை அதில் மாட்டுதல் கூடாது,' என்பதே அதற்குக் காரணம். அச்சொல்லம்பு அடிகளார் மனத்தில் ஆழத் தைத்தது. தைத்து என்ன பயன்! 'என்னே இந்தியர் நிலை!' என்று அடிகளார் ஏங்கினுர்.

அடிகளார், வழக்கின்பொருட்டு நேட்டாலினின்று பிரிடோரியாவிற்குச் சென்ருர்; முதல் வகுப்புச் சீட்டுப் பெற்று வண்டியில் அமர்ந்திருந்தார். வண்டி அடுத்த நிலையம் சென்றதும், ஒரு வெள்ளையன், கார்டின் உதவி கொண்டு, அடிகளை வேறு வண்டிக்கு மாறக் கட்டளை இட்டான். அடிகளாருக்கோ, விவரம் புரியவில்லை. தம்மிடம் இருந்த முதல் வகுப்புச் சீட்டைக் காட்டி மறுத்தார். உடனே போலீஸ் உதவியும்

வந்தது. அடிகள் வண்டியினை விட்டு இறங்கியே தீர வேண்டும் என்று போலீஸ் சேவகன் சொன்னான். அடிகளார் மீண்டும் மறுத்தார். அதனால் பயன் என்ன? அவரை வண்டியினின்று இறக்கி விட்டார்கள். முன் பின் அறியாத நாட்டில்—இரவு நேரத்தில்—பனிக் காலத்தில்—குளிரில் நனைந்து நடுங்குமாறு நம் அடிகள் நிலைமை ஆயிற்று! காரணம், நிற வேற்றுமையேதான்! நிறவேற்றுமையின் கொடுமையை உன்னியுன்னி அடிகள் நெஞ்சம் புகைந்தது. "நிறவேற்றுமை குறித்துப் போராடி அதனை ஒழிக்க வேண்டும்! வெளி நாட்டில் இந்தியர்க்கு நேரும் இழிதகவிற்கு முற்றுப்புள்ளி வைத்து ஆகவேண்டும்!" என்று அன்றே அடிகளார் உறுதி கொண்டார். அந்த உறுதியே அடிகளாரது தொண்டு வாழ்விற்கு முதற்சுழி இட்டது போல ஆயிற்று!

அடிகளார் அங்கு இரவு தங்கிப் பிறகு 'ஜோஹன்ஸ்பர்கு' என்னும் ஊருக்குக் குதிரை வண்டியில் ஏறிச் சென்றார். கறுப்பர் என்ற காரணத்தால், அடிகளாருக்கு வண்டியின் உள்ளே உட்கார இடம் கிடைக்கவில்லை. வண்டித் தலைவன் குதிரை ஓட்டுபவன் பக்கத்திலே அவரை அமரச் செய்தான். அவர் அதற்கும் உடன்பட்டுப் பிரயாணம் செய்தார். இடைவழியிலே, அவ்வண்டித் தலைவன், அடிகளாரை வண்டியினது மிதிபடியில் உட்காரும்படி கட்டளை இட்டான். காரணம், அவன் காற்றுவாங்கிக்கொண்டே சுருட்டுப் பிடிக்க விரும்பினதுதான்! அடிகளார் அதற்கு உடன்படவில்லை.

இரக்கம் அற்ற அரக்கரினுங்கொடிய அவன், அடிகளார் மறுத்தது கண்டு அவரது முகத்தில் அறைந்து, அவரைக் கீழே குப்புறத் தள்ளினுன். நல்ல வேளை! அடிகளார் கீழே சாய்ந்ததும், கம்பியைப் பற்றிக்கொண்டார். உள்ளிருந்த வெள்ளையர்களே, அந்நிகழ்ச்சி கண்டு பரிவுற்று இரங்கி, அடிகளாருக்கு உள்ளே அமர இடம் தந்து போயினர்.

இங்ஙனம் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலப்பல. அவை அனைத்தையும் இங்கு நான் கூற விரும்பவில்லை. "காந்தி கறுப்பர். அது காரணத்தால் இங்குத் தங்கித் தொழில் புரிய ஆணை தரல் தகாது," என்று வெள்ளையர் நீதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தனர். ஆப்பிரிக்க வெள்ளையர், இந்தியர்களைக் கூலிகள் என்று வழங்குவது வழக்கம். ஆதலின், அடிகளாரையும் 'கூலி பாரிஸ்டர்' என்றே சுட்டினர். அடிகளார், அங்குத் தெருவில் உலாவுவதைக்கூட வெள்ளையர்கள் வெறுத்து வந்தார்கள். ஒரு முறை போலீஸ் சேவகன் ஒருவனுல் அடிகளார் தெருவில் அடித்து வீழ்த்தப்பட்டார்.

சுருங்கச் சொல்வதானுல், இந்தியர் ஆப்பிரிக்காவில் விலங்கினங்களினும் தாழ்வாகவே கருதி வெறுக்கப்பட்டனர் என்று சொல்லலாம். வெள்ளையர் இந்தியர்களை மக்களில் இழிந்த பிறவிகள் எனக் கருதினர். இராக்காலத்தில் இந்தியர்கள் வெளியே போய் உலவுதல் கூடாது. வெள்ளையர் ஏறும் வண்டியில் இந்தியர் ஏறுதல் முடியாது. முதல் இரண்டாம் வகுப்பு இரயில்

வண்டிகளில் கறுப்பர்களுக்கு இடமே கிடையாது. இவற்றை எல்லாம் கண்ட அடிகளார் மனம் நைந்தது. பாரிஸ்டர் தொழில் செய்து பொருளீட்ட வந்த நினைவை அவர் அறவே மறந்தார்; "வெள்ளையரையும் இந்தியரையும் ஒரே நிலைக்குக் கொணர வேண்டும்; அதுவும் ஆன்மநேய ஒருமைப்பாட்டின் அடிப்படையிலே முடிதல் வேண்டும்," என்று உறுதி பூண்டு அன்று முதலே தொண்டு செய்ய முற்பட்டார்.

இதை அடுத்து மற்றொரு வழியில் நேட்டால் சர்க்கார் இந்தியர்கள் உரிமையைப் பறிக்க முயற்சி செய்தது: இந்தியர்களது ஓட்டு உரிமையைப்பறிக்க ஒரு மசோதாவைச் சட்ட சபையில் கொண்டு வந்தது. அதனால், இந்தியருக்குச் சிறிதளவு இருந்த உரிமையும் போய்விடும். பிறப்புரிமை இழக்கக் கூடிய சீட்டுக்களில் தங்கள் விரலடையாளங்களையும் பெயர்களையும் பொறித்துத்தான், இந்தியர்கள் இனி வாழ முடியும் என்ற நிலைக்கு அங்குக் கறுப்பர்கள் உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. இது கண்ட அடிகளார் இந்தியாவிற்கு மீள இருந்த தமது பயணத்தையும் நிறுத்தி வைத்தார்.

அப்துல்லா சேட்டின் தலைமையில் ஒரு சிறு கமிட்டி அமைத்து, அதனை எதிர்த்து நிறுத்தும் வழி துறைகளை அடிகளார் சிந்தித்தார்; குடியேற்ற நாட்டு மந்திரியாராய் இருந்த ரிப்பன் பிரபுவுக்குப் பதினாயிரம் கையெழுத்துக்கள் பெற்று ஒரு வேண்டுகோள் விடுத்தார்; சட்ட சபையின் நடவடிக்கைகளை இரண்டு நாளைக்குத்

தள்ளிவைக்குமாறு முயன்று, வெற்றி கண்டார். இருந்தாலும், இறுதியில் மசோதா சபையில் நிறைவேறிச் சட்டமாகிவிட்டது. அது கண்ட அடிகளார், இந்திய மக்களிடம் ஏற்பட்டிருந்த உணர்ச்சியை ஒரு முகமாக்கித் தொண்டு பேண வழி காட்டினர். இவ்விழிவுதரும் சட்டத்தினையும், பிற கொடுமைகளையும் இறுதிவரை எதிர்த்துப் போராடி வெற்றி காண அடிகளாரின் முயற்சியால், '**நேட்டால் இந்தியன் காங்கிரஸ்**' என்னும் ஒரு கழகம் நிறுவப் பெற்றது.

இவ்வாறு அக்கொடுஞ்சட்டத்தை எதிர்த்துப் போராடும் பணியின் தொடக்க வேலையை முடித்து, அடிகளார் இந்திய நாடு திரும்பினர். மனைவி மக்களையும் கூட்டிக்கொண்டு வந்து, ஆப்பிரிக்காவிலேயே தங்கித் தொண்டு செய்ய வேண்டும் என்னும் நினைவினுலேதான் அடிகளார் ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்ரும் ஆண்டு இந்தியாவுக்கு மீண்டார்.

இந்தியாவிற்கு வந்த அடிகளார் வாளா இருந்துவிடவில்லை. பல பத்திரிகைகளிலே, ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் அடைந்து வரும் தொல்லைகளைப் பற்றி எழுதினர்; அவர்கள் மேற்கொண்ட இன்னல்களைப் பலகூட்டங்களில் எடுத்துக் காட்டிப் பேசினர்; தாம் பட்ட இடர்ப்பாடுகளையும் விடாது எடுத்து உரைத்தார். தென்னுப்பிரிக்க அரசியலாரின் போக்குப் பற்றியும், வெள்ளையர் நடத்தை பற்றியும், இந்திய நாட்டு மக்களிடையே பலத்த ஓர் எதிர்ப்பு உணர்ச்சியை அடிகளார் உண்டாக்கி வைத்

தார். இதனை, இராய்ட்டர் செய்தி நிலையம் சிறிது மிகைப்படுத்தித் தென்னுப்பிரிக்காவிற்கு அனுப்பி வைத்தது. அது கேட்டுத் தென்னுப்பிரிக்க வெள்ளையர் ஆத்திரம் கொண்டனர். அடிகளார் செய்த விளம்பரத்தினல், இனித் தங்கள் நாட்டிற்கு இந்தியக்கூலிகளே வரமாட்டார்கள் என்று அவர்கள் கருதினர்கள். அதனல், வெள்ளையர்கள் தோட்டங்களுக்குப் பேரிழவு நேரும் என்னும் அச்சமும் அவர்கட்கு இருந்தது. இவை எல்லாம் கூடி, அடிகளார்மீது அவர்கட்கு மிகப் பெரிய ஆற்ருமையைக் கூட்டி வைத்தன.

அடிகளார் இந்தியா வந்து ஆறு மாதங் கூடத் தங்கவில்லை. உடனே திரும்பி வருமாறு நேட்டால் அன்பர்களிடமிருந்து செய்தி வந்தது. 'குர்லண்டு' என்ற கப்பல் அப்போது அப்துல்லா சேட்டிற்குச் சொந்தமாய் இருந்தது. அடிகளார் சேட்டின் வேண்டுதலின்படி குடும்பத்துடன் மீண்டும் பயணம் ஆனர். குர்லண்டு கப்பலில் சுமார் நானூறு பேர் அடிகளாருடன் ஆப்பிரிக்காவிற்குச் சென்ருர்கள். 'நாதரி'என்ற மற்ருெரு கப்பலும், அம்மாதிரி நானூறு பேர்களுடன் ஆப்பிரிக்காவிற்குப் புறப்பட்டது. நேராக நேட்டால் போவதான திட்டத்துடன் வந்ததால், பதினெட்டு நாட்களில் குர்லண்டு ஆப்பிரிக்காவைச் சேர்ந்தது.

இதையறிந்த நேட்டால் வெள்ளையர், உள்ளம் கொதித்தனர்; கூட்டங்கள் கூடி, அடிகளை டர்பனில் இறங்க விடாதபடி தடுக்க முயன்ற

னர். ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஆறுமாண்டு (1896) இந்தியாவில் பிளேகு நோய் கண்டிருந்தது; அதைக் காரணமாகக் காட்டி, வெள்ளையர் ஒழுங்கான கால் வரையறைக்கு மேலும் பல நாட்கள் அடிகளாரைக் கப்பலை விட்டு இறக்காது காவலில் வைத்தனர்; கப்பற் கம்பெனிக்கே பெருந்துன்பம் தருவதாக அச்சுறுத்தினர்; 'இறங்கும் பிரயாணிகள் கடலில் எறியப்படுவார்கள்,' என்றும் பயமுறுத்தினர். ஆனால், கப்பல் முதலாளிகளோ, அன்றிப் பிரயாணிகளோ, இவற்றிற்கு எல்லாம் அஞ்சிவிடவில்லை.

கப்பல் கரையை அடைந்தவுடன் அட்டர்னி ஜெனரல் அடிகளாருக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில், அடிகள் மற்றவர்களுடன் துறையில் இறங்கல் ஆகாது என்றும், மாலையில் போலீஸ் பாதுகாப்புடன் வீட்டிற்குப் போவது நல்லது என்றும் கண்டிருந்தது. சில தொல்லைகளைத் தவிர்க்கும் நோக்குடன், அடிகள் முதலில் அவரது முடிபினை ஏற்றார்; தமது குடும்பத்தைத் தாம் வரும்வரை தங்கி இருக்கும்படி கட்டளை இட்டு, ருஷ்டம்ஜீ வீட்டிற்கு அனுப்பினார். சிறிது நேரங்கழித்து, ருஷ்டம்ஜீயின் கம்பெனி வக்கீலாகிய இலாடன் என்பவர் அடிகளாரிடம் வந்து, உடனே புறப்பட வேண்டும் என்று சொன்னார்.

அடிகளார் இலாடனுடன் கப்பலிலிருந்து இறங்கியதுமே, சில வெள்ளையர் அவரை அடையாளம் கண்டு கூடிவிட்டனர்; 'காந்தி! காந்தி!'

என்று கூக்குரல் இட்டனர். கூட்டத்தினர் இலாடனை அடிகளாரிடமிருந்து அப்புறப்படுத்தி விட்டனர்; பின்பு கற்களையும் அழுகிய முட்டைகளையும் அடிகளார்மீது மழை போலச் சொரிந்தனர்; அடிகளார் வண்டியில் செல்ல நினைத்த போது வண்டிக்காரனையும் செல்லவொட்டாது தடுத்துவிட்டனர். அடிகளாரது தலைப்பாகை பறி போயிற்று. ஒருவன் அவரைத் தாடையில் ஓங்கி அறைந்து, காலாலும் உதைத்தான். மேலும் மேலும் காலிகள் கூட்டம் பெருக ஆரம்பித்தது. அடிகளாருக்கு மயக்கம் வந்தது. அவர் மயங்கி விழுந்துங்கூட, வெள்ளையர் உள்ளம் கசியவில்லை. மேலும், அடியும் உதையும் அடிகளுக்குக் கிடைத்துக்கொண்டேயிருந்தன. நல்ல வேளையாக, போலீஸ் உதவி எப்படியோ சமயத்தில் வந்து உதவியது. பின்பு போலீஸ் காவலுடன் அடிகளார் வீடு போய்ச் சேர்ந்தார்.

ஆனால், ருஷ்டம்ஜீ வீட்டிலும் இரவில் பேரமளி உண்டாயிற்று. வீட்டின் முன்பு வெள்ளையர் கூட்டங்கூடி நின்று, அடிகளாரைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டினர்; வெளியே வாராவிட்டால் அவர் தங்கிய வீட்டையே தீக்கிரை ஆக்கிவிடுவதாக மிரட்டினர்; "இந்திய நாட்டிலே சென்று எங்கள் முகத்திலே கரி பூசி விட்டார் அவர்! அவரை உயிரோடு நாங்கள் விடுவதில்லை!" என்று சூளுரைத்தனர். போலீஸ் தலைமை அதிகாரியாகிய அலெக்சாந்தர், அவர்களை நயந்துவேண்டி ஓரளவு அமைதி உண்டாக்கினார். எனினும், நிலைமை கட்டுக்கு அடங்க

வில்லை. அவர் அதுகண்டு அடிகளார் தப்புதற்கு மற்ருேர் ஏற்பாடு செய்தார்: அடிகளாருக்கு அவர் இந்திய சிப்பாய் உடை அணிவித்து, போலீஸ் இரகசியக் காவலுடன் தப்ப வழி காட்டினூர். அடிகளார் தப்பிச்சென்று போலீஸ் ஸ்டேஷனில் தங்கினூர்.

காலம் சென்ற சேம்பர்லேன் பிரபு அடிகளாரை அடித்தவர்களின்மீது வழக்குத் தொடருமாறு நேட்டால் சர்க்காரை வற்புறுத்தினூர். நேட்டால் சர்க்காரும் அதற்கு இணங்கியது. திரு. எஸ்கம்பு என்பவர், அடிகளாரைத் தாக்கியவர்களை அடையாளம் காட்டுமாறு அவரை வேண்டினூர். ஆனுல், அடிகளாரோ, எவர்மீதும் வழக்குத் தொடர விருப்பம் இல்லை என்று சொல்லி, அடையாளம் காட்ட மறுத்து விட்டார். இச்செய்தி வெள்ளையருக்குத் திகைப்பை உண்டாக்கியது.

அடிகளார், வெள்ளையர்கள் மனம் மாறத் தக்க பலசெயல்களையும்செய்து ஓரளவு மக்களது நன்மதிப்பினைப் பெற்ருர். ஆயிரத்து எண்ணூற்றுத்தொண்ணூற்ருரும் ஆண்டில் (1896) போயர் சண்டை மூண்டது. இந்திய மக்களின் தலைவர் என்னும் முறையில், அடிகளார் அப்போரில் பங்கு எடுத்து வெள்ளையருக்கு உதவ முன் வந்தார். தென்னுப்பிரிக்காவில் பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்டவர் என்ற காரணத்தால், இந்தியர் குடியேறியிருந்தனர். அதே நிலையிலேதான் இந்தியர்கள், தங்கள் உரிமைப் போரையும் நடத்தி வந்தார்கள். பிரிட்டிஷாரின்

ஆட்சியின்கீழ் நலம் அடைபவர்கள் என்ற காரணத்தாலேயே, இந்தியர்கள் அச்சண்டையில் சேர்ந்து தொண்டுசெய்தல் வேண்டும் என்பது அடிகளாரது கருத்து. அடிகளாரின் தலைமையில், இந்தியர் பலர் கூடிப் பணி புரிய முனைந்தனர். இந்திய வைத்தியப்படை ஒன்று அமைத்து, அதன் தலைவராய் அடிகளார் போர்க்களத்திற்சென்று தொண்டு செய்து உதவினர். வைத்தியப் படைக்குக் கடும்பணிகள் பல தரப்பட்டன. புண் பட்டவர்களைத் தூக்கிக் கொண்டு ஏழெட்டு மைல்கள்கூட அப்படை செல்ல நேரிட்டது. எனினும், அடிகள் விருப்போடு அப்பணியினைச்செய்து மகிழ்ந்தார்.

அடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்த காலங்களில் எல்லாம் எளிய வாழ்வினையே மேற்கொண்டிருந்தார். தொண்டு உள்ளமும் எளிய வாழ்க்கையுமே அவரது அந்நாளைய வாழ்வின் சிறப்பியல்கள் என்று சொல்லலாம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நான்காம் (1904) ஆண்டில் ஜோகன்ஸ்பர்கில் கொடிய பிளேகு நோய் கண்டது. பெருவாரியான மக்கள் அதற்கு இரையாகி மாண்டார்கள். அடிகளார் தம் பணியாளர் நால்வருடன் சென்று பணி செய்து நோய் நீக்கும் வேலையை மேற்கொண்டார். ஓய்வு நேரங்களில், **டாக்டர் பூத்து** என்பாரது மருத்துவச் சாலைக்குச்சென்று, நோயாளிகட்கு மருந்து கொடுத்து உதவும் அலுவலை இலவசமாக மேற்கொண்டார்; தம்மிடம் வந்த மூடவனை குட்டநோயாளனைச் சில நாளைக்குத் தம்

அறையிலே வைத்துப் புண்ணைக் கழுவி மருந்திட்டு உதவி செய்தார். இத்தகைய பொது நலப்பணிகள், அடிகளாரது மனத்திற்கு இன்பமும் ஆறுதலும் தந்தன. இவ்வமயம் அடிகளார் தம் தமையனுருக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதில், "இன்று வரையில் நான் ஈட்டிய பொருளில் மீந்ததை உங்களுக்கு அனுப்பி வந்தேன். இனி என் உதவியை நீங்கள் எதிர் பாராதீர்கள். எனது வருவாயின் பொருள் எல்லாம் பொது நலத்திற்கே செலவழியும்," என்று எழுதினுர்.

இங்ஙனம் அடிகளாரது வாழ்க்கையில் சில ஆழ்ந்த மாறுதல்கள் உண்டாகக் காரணமாயிருந்தவை சில நூல்களே என்பதை அடிகளாரே குறிப்பிட்டிருக்கிறுர். அவரது நூற்பயிற்சியிற் கீதைப்பயிற்சி மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அது, அவரது ஒழுக்கத்திற்கு வழி காட்டியாய்ப் பயன்பட்டது. சமபாவம், பரித்தியாகம் என்னும் இரண்டு சொற்களின் பொருளை ஆராய்ந்து, அச்சொற்களையே வாழ்க்கைச் சூத்திரமாக அடிகளார் அமைத்துக் கொண்டார்; தமக்கென ஒன்றில்லாமை, பிறரையும் தம்மைப்போலப் போற்றும் தயாளம் என்னும் இரண்டே வாழ்க்கைக் குறிக்கோள் என வகுத்துக்கொண்டார்; பிரமஞான சங்கத்திலே சேர்ந்து, சில அன்பர்களோடு அளவளாவினுர். கிறித்தவப் பாதிரிமார் கூட்டுறவும் அவருக்கு அப்போது வாய்த்தது. அவர் அடிக்கடி மாதாகோவிலுக்குச் சென்று, ஆண்டுள்ள சமய வாதிகளோடு விவிலிய நூலின் கருத்துக்களைப்

பொருத்தமுற ஆராய்ந்து தேர்ந்தார். ஆங்கிலப் புலவன் இரஸ்கின் எழுதிய 'இந்த முடிவுக்கு' என்னும் பெயரிய நூலும் அடிகள் வாழ்வினைப் பண்படுத்தியது எனலாம். "உழைத்து வாழும் தொழிலாளியின் வாழ்வே சீரிய வாழ்வு," எனும் முடிவு, அந்நூலிற்பொதிந்திருந்தது. ரஷிய அறிஞர் லியோ—டால்ஸ்டாய் என்பாரின் நூல்களும் இக்கருத்தினை வற்புறுத்தி அடிகளைத் திருத்தின. இவற்றின் பயனாய், அடிகளார் 'போனிக்ஸ் குடியேற்றம்' என்னும் நிலையம் ஒன்று அங்கு நிறுவினார்; அதில் குடியேறுவார் பலரும் உழைத்து, ஒரே வித ஊதியம் பெறவேண்டும் என்னும் திட்டம் வகுத்தார். பலரும் அந்நிலையத்தில்வந்து குடியேறினர். அடிகளாரும், வழக்கறிஞர் தொழிலை அறவே நீத்து, அங்கு நிலையாகத்தங்கிவிட விரும்பினார். ஆனால், சிற்சில சந்தர்ப்பங்களிலேதான் அவர் அங்குத் தங்க முடிந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நான்காம் (1904) ஆண்டில் அடிகளார் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற ஒரு வாரசஞ்சிகையை அதன் ஆசிரியராய் இருந்து நடத்தினார். அதில், இந்தியர்களின் நலனுக்கு உகந்த பல செய்திகள் ஆராயப்பட்டு வந்தன. அடிகளார், புலன் அடக்கம்-உணவு ஏற்கும்முறை-அறப்போர் முதலிய பல வேறு தலைப்புக்களைப்பற்றி நுணுக்கமான அனுபவ உண்மைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து வெளியிட்டார். அவை பலர்க்கும் வாழ்க்கை வழி காட்டியாய் அமைந்தன. எதனையும் பல

முறை நன்கு திர எண்ணியே அடிகளார் அதில் வெளியிட்டு வந்தார். தென்னாப்பிரிக்காவில் அடிகளார் நடத்தி வெற்றி பெற்ற சத்தியாக்கிரகப் போருக்கே அது முழுமுதற்காரணமாய் நின்று உதவியது என்னலாம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறும் (1906) ஆண்டில் ஆப்பிரிக்காவில் 'ஜுலுகலகம்' கிளம்பியது. அதிலும், போயர் யுத்தத்தில் உதவியது போலவே, அடிகளார் வெள்ளையர் சார்பிலே நின்று உதவினர். இந்தியப் படை ஒன்றுக்குத் தலைமை தாங்கிக் காயம் அடைந்தவர்கட்குப் புண் ஆற்றினர். அரசாங்கம், அவரது பணியினைப் பாராட்டி, 'சார்ஜண்டு மேஜர்' என்னும் பதவியினை அடிகளாருக்கு அளித்தது. அந்தக் கலகத்தில் ஈடுபட்டுப் பணி செய்த காலத்திலே, அடிகளார் மனத்திற் பிரமசரியத்தைப் பற்றிய எண்ணங்கள் வேரூன்றி வளர்ந்தன. மக்கள் இனத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமானல், மணம் செய்துகொண்டவர்க்கும் பிரமசரிய விரதம் இன்றியமையாதது என்பதனைக் கண்டார். அது முதல் அடிகளார் பிரமசரிய நோன்பினை மேற்கொண்டு வாழ்ந்தார்.

தென்னாப்பிரிக்காவில் அடிகளார் நடத்திய அறப்போரினைப் பற்றி நாம் அறிதல் வேண்டும். வெள்ளையர் ஆப்பிரிக்க நாட்டினையே தமது நாடாக்கிவிடப் பெருமுயற்சி செய்தனர்; ஆசிய நாட்டார் ஆங்குக் குடியேறுவதனைப் பலவகையிலும் வெறுத்தனர்; அதனால், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறும் (1906) ஆண்டில் சர்க்கார்,

'ஆசியமக்கள் பதிவுச் சட்டம்' என்னும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி இந்தியர் அனைவரும் கைதிகளைப்போலப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்து கொள்ளாதவர்கள், குடியிருப்பு உரிமையை இழப்பார்கள். விண்ணப்பம் செய்யத் தவறுவதும் குற்றமே. அக்குற்றத்திற்குச் சிறையிலிடுதல், நாடு கடத்துதல் முதலிய தண்டனைகள் விதிக்கப்படலாம். இவை அச்சட்டத்தின் விளக்கம். அக்கொடிய சட்டத்தைப்பற்றிக் கேட்டவுடன், ஏழைக் கறுப்புமக்கள் சினந்து எழுந்து தங்கள் உரிமையைக்காக்க விழைந்தார்கள்; சட்டத்திற்கு உடன்பட மறுத்துச் சிறை புகவும் திட்டமிட்டார்கள்; கட்டாயப்படுத்தும் முறையை அச்சட்டத்தினின்று நீக்குமாறுவேண்டினார்கள். முதலில் அரசியலார் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டும், பின்பு மறுத்துவிட்டனர். அடிகளார் தலைமை தாங்கி, அறப்போரை நடத்தத் தொடங்கினார். சட்டவரம்பிலே நின்று கிளர்ச்சி நடத்தப்பட்டது. தலைவர்கள், இலண்டன் சென்று பலரைக் கண்டு பேசினார்கள். மேலிடத்தாருக்கு விண்ணப்பமும் செய்துகொண்டார்கள். ஒன்றும் பயன்படாத நிலையிலேதான் அடிகளார் அரசினரோடு பொறுமைப் போர் தொடுக்கத் தொடங்கினர்; மற்றவர்களையும் அப்போரில் பயில்வித்தனர்.

அடிகளார் சட்டத்தை மீறிச் சிறை சென்றார். மக்களுக்கும் அரசியலாருக்குமிடையே ஒத்துழையாமைப் போர் மூண்டது. பலரும்

அடிகளாரைப் பின்பற்றிச் சிறையை நிறைத்த னர். மக்கட்குக் கொடுமைகளும் துன்பங்களும் பல மடங்கு ஏற்பட்டன. இந்தியர்கள் செய் துள்ள திருமணங்கள் யாவும் மாறுபட்டவை எனச் சட்டத்தீர்ப்பு ஏற்பட்டது. இந்தியக் கூலிகள் தங்கள் ஒப்பந்தக் காலத்திற்கு மேல் அங்கு வாழ விரும்பினுல், ஆளுக்கு மூன்றுபவுன் தலைவரி செலுத்த வேண்டும் என்னும் விதியும் விதிக்கப்பட்டது. திருமதி காந்தியாரின் தலை மையில் பல பெண்மணிகளும் மகிழ்ச்சியுடன் சட்டமீறிச் சிறை புகுந்தனர். சட்டமறுப்புச் செய்பவர் நுழைதல் தகாது என்று மறுக்கப் பட்ட நிலப்பகுதியில், இரண்டாயிர மக்கள் ஊர்வலமாய்ச் சென்ருர்கள். கரும்புத் தோட் டத்தில் வேலை செய்த தொழிலாளிகள் கட்டுப் பாடாய் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்தவர்களுட்சிலர் சுட்டுக் கொல் லப்பட்டனர். எனினும், எதிர்ப்பு இயக்கம் சத் திய நெறியினின்று மயிரிழையும் தவறவில்லை. நாட்டின் அமைதிக்குக் குலைவு நேராத நிலையிலே மக்கள் அடக்கத்துடன் நடந்துகொண்டார்கள். மக்களிடம் மறச்செயல் எதுவும் இறுதிவரை நிகழவே இல்லை. இந்த முறையிலே அடிகளார் திட்டமிட்டு நடத்திய பொறுமைப் போர், பிற நாட்டுப் பேரறிஞர் சிந்தையையும் கவர்ந்து நின்றது.

அடிகளார் சிறை சென்ற இருபது நாட்க ளுள், அரசியலார் எதிர்ப்பு இயக்கத்தாரோடு மனம் இயைந்து ஓர் ஒப்பந்தம் செய்ய முன்வந்த

னர். ஜெனரல் ஸ்மட்ஸும் அடிகளாரும் கூடிப் பேசினர். "கட்டாய முறையில் அனுமதிச் சீட்டுக்களை மாற்றிக்கொள்வது என்ற பகுதி நீக்கப்படும்; தாங்களாகவே சீட்டுக்களை இந்தியர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். புதிய அனுமதிச் சீட்டு இந்தியர்களோடு கலந்து தயாரிக்கப்படும். இவற்றை எல்லாம் ஒப்புக்கொண்டால், அந்தக் கொடிய சட்டம் நீங்கிவிடும்," என்னும் முடிவுக்கு இருவரும் ஒப்பினர். கைதிகள் யாவரும் விடுதலை ஆயினர். அடிகளார் நேரே ஜோகன்ஸ்பர்குக்குச் சென்று, கூட்டத்தில் ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசினர். பட்டாணியர்களுக்கு இந்த ஒப்பந்த முறை, மனத்தில் எந்தமாற்றமும் உண்டாக்கவில்லை. ஆகவே, அவர்கள் மேலும் ஒப்பந்த முறையை எதிர்த்து நின்றார்கள்; அடிகளாரையும் கடிந்தார்கள். இந்த எதிர்ப்பின் பயனாய், மீர் ஆலம் என்ற பட்டாணியர் ஒருவரால் அடிகளார் முத்திரை பதிக்கப்போர்கும் வழியில் தாக்கப்பட்டார்.

மற்றைய இந்தியர் எல்லாரும் அடிகளாரது ஆணை பேணித் திரள் திரளாய்ச் சென்று, வலியப் பதிவு செய்துகொண்டனர். அரசியலாருக்கும் பெருமகிழ்ச்சி விளைந்தது. இதற்குப் பிறகு அந்தக் 'கறுப்பர் சட்டத்தை' நடைமுறையில் வாராமல் தடுக்க வேண்டுவதுதானே அரசியலார்கடமை? ஆனால், தென்னாப்பிரிக்கச்சர்க்கார் அப்படிச் செய்ய முன் வரவில்லை. அச்சட்டம் நடைமுறையில் இருந்தது. இது குறித்து மறுமுறையும் சத்தியப்போர் தொடங்கியது. அதில் நிகழ்ந்த நிகழ்ச்சி முறைகளே, இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றிற்கு இடையில் இந்தியாவிலிருந்து கோகலே தென்னுப்பிரிக்காவிற்கு வந்தார். அவர்வந்தது, அரசியலாருக்கும் ஒத்துழையாமை இயக்கத்தாருக்கும் இடையே இருந்த மனத் தாங்கலை நீக்கி, ஓர் உடன்படிக்கை செய்து வைக்கவே ஆகும். அதனுல் பெரிய பலன் ஏற்படவில்லை. எதிர்ப்புப் போரும் அடக்கு முறையுமே இருதிறத்தாரிடமும் காணப்பட்டு வந்தன. ஆனுலும், இந்தியா திரும்பிய கோகலே, வாளா இருந்துவிடவில்லை. பெரிதும் நோயாளராய் இருந்த அவர், தனிப்பட்ட முறையில் அக் கொடுஞ்சட்டத்தை நீக்க எவ்வளவோ முயன்ருர். இந்தியாவில் ராஜப் பிரதிநிதியாகிய ஹார்டிஞ்சு பிரபு ஒரு சொற்பொழிவு ஆற்றினர். அது இங்கிலாந்திலும் தென்னுப்பிரிக்காவிலும் மிகப் பெரிய பரபரப்பினை உண்டாக்கியது. அச் சொற்பொழிவில் அவர் சத்தியாக்கிரகிகளை முற்றும் ஆதரித்தார்; ஒத்துழையாமை எதிர்ப்பினையும் வரவேற்றுப் பேசினர். அந்தப் பேச்சு மிக நல்ல பலனைத் தந்தது. எட்டு ஆண்டுகளாய்த் தொடர்ந்து நடந்த ஒரு பொறுமைப் போருக்கு முடிவும் வந்தது. எதிர்ப்பு இயக்கம் வெற்றி உற்றது!

பின்பு தென்னுப்பிரிக்கச் சர்க்கார் 'இந்தியர் சகாய மசோதா'வைச் சட்டம் ஆக்கிற்று. மூன்று பவுன் தலைவரி நீக்கப்பட்டது. இந்தியாவில் சட்டநெறிக்குட்பட்டவை எனக் கருதப்பட்ட எல்லா மணவினையும் அங்கும் ஒழுங்குடையவை எனச்செல்லுபடி ஆயின. விரல் இரேகைப்

பதிவு வாங்கிய அடையாளச் சீட்டுக்கள் யாவும் நுழைவு அனுமதிச் சீட்டாகக் கருதப்படும் என்னும் சட்டமாற்றமும் பிறந்தது. அதனால், இந்தியர் நிலையும் தென்னாப்பிரிக்காவில் பெரிதும் உயர்ந்தது. இவ்வாறு அடிகளார் தாம் தொடங்கிய பொறுமைப் போரில் இறுதியில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் பலன், தென்னாப்பிரிக்க இந்தியர்கட்கு மட்டும் அன்றி, உலகமக்களுக்கே ஒரு புதுநெறி காட்டி அவர்களை வாழவைத்தது; வெளி நாடுகளில் உள்ள இந்தியர்களின் தன் மானத்தை உயர்த்தியது. வெள்ளையர் அன்று முதலே இந்தியர்களைச் சிறிது உயரிய மன நிலையோடு கருதி மதிக்கத் தொடங்கினர். அடிகளை பொறுமைப் போருக்குத் தலைமை தாங்கி நடத்தும் ஆற்றலை அளந்தறிந்து கண்டுகொண்டார். 'ஆன்மவலி வெல்லும் வல்லமை உடையது,' என்பது உலகிலே உறுதிப்பட்டது. இவ்வெற்றி கேட்ட ரஷியப் பேரறிஞர் லியோ-டால்ஸ்டாய், அடிகளாருக்கு வெற்றியைப் போற்றிப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினார்:

"நீங்கள் தலைமை பூண்டு நடத்திய போர்ச் செயல், உலகத்தில் நடந்துவரும் எல்லாச் செயலினும் மேலானது எனவும், மிக மிக முக்கியமானது எனவும் உலகத்தின் இப்பகுதியில் உள்ள நாங்கள் கருதுகின்றோம். கிறிஸ்தவ நாடுகள் மட்டும் அன்றி, உலகம் முழுவதுமே அதில் ஈடுபடவேண்டும்,' என்பது டால்ஸ்டாய் பாராட்டிலே கண்டிருந்தது.

## VI நாடு திரும்புதல்

அடிகளார், எட்டு ஆண்டுகள் வரையில் இடைவிடாது ஆப்பிரிக்க அரசியலாருடன் பொறுமைப் போர் தொடுத்து, இறுதியில் வெற்றி பெற்றார். அவ்வெற்றியின் பயனாக இந்தியர்கள் நிலை ஓரளவு உயர்ந்து காட்டிற்று. அப்போரின் முடிவு உலக மக்கள் கருத்தினையும் கவர்ந்தது; அரசியலாருக்கும் ஒரு பெரிய மன மாற்றத்தை உண்டு பண்ணிற்று. அன்று தொட்டு வெள்ளையர்கள் இந்தியரை நல்ல முறையில் அறிந்துகொள்ளவும் தலைப்பட்டார்கள்.

ஆப்பிரிக்காவில் அடிகளார் மேற்கொண்ட போரில் ஒத்துழையாமை, சட்டமறுப்பு, சிறை புகுதல், பட்டினி நோன்பு, வேலை நிறுத்தம் முதலிய பல வழிகள் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஆயினும், பழிக்குப் பழி, புறங்கூறல், கொடுமொழி பேசல், ஆரவாரம் முதலிய தீய குறிகள் எவையும் அவ்வறப்போரில் கலத்தற்கு அடிகளார் இடம் கொடுக்கவில்லை. எவர் மீதும் சீற்றமோ, காழ்ப்போ, அடிகளார் ஒரு போதும் கொண்டதில்லை.

தென்னாப்பிரிக்காப் போராட்டத்தின்போது அங்கே ஜெனரல் ஸ்மட்ஸ் துரைமகனார் அதிகாரியாய் இருந்தார். அவர்தம் ஆட்சியே அங்கு அடிகளாரைச் சிறைக்கு அனுப்பியது. எனினும், அடிகளார் நெஞ்சில் அத்துரைமகனார் மீது இகல் எழவே இல்லை. அடிகளார் சிறையில் இருக்கும்போது ஸ்மட்ஸ் அவர்கள், தத்துவநூல்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து அடிகளார் படிக்க அனுப்பியது உண்டாம். அடிகளார் சிறைக்கோட்டத்தில் ஒரு மிதியடி செய்து, தாம் விடுதலை அடைந்ததும் ஸ்மட்ஸுக்குப் பரிசாக அளித்தார். "நான் காந்தி அடிகளார்க்கு எதிரியாய் இருந்தவன். எனினும், எங்கள் போராட்டத்தின் அடிப்படையில் பகைமை கால் கொண்டதில்லை," என்று ஜெனரல் ஸ்மட்ஸ் துரைமகனாரே, உலகறியச் சொல்லியிருக்கிறார்.

இம்முறையில், அடிகளார் அறப்போர் தொடுத்து வெற்றி பெற்றது, இந்திய நாட்டினர் இடையேயும் ஒரு விழிப்பை உண்டு பண்ணியது. இங்குள்ள இந்தியர்களும், தாய் நாட்டின் விடுதலை நோக்கியிருந்தனர். 'இந்திய தேசீயக் காங்கிரஸ்' அதற்கு உரிய துறையில் மக்களிடையே இங்கு வேலை செய்து வந்தது. 'இந்திய ஊழியர் சங்கம்' என்னும் கழகமும், அப்பணி புரிந்து வந்தது. கோபால கிருஷ்ண கோகலே என்ற பேரறிஞர், அடிகளாரது அரும்பெரும்பணியினை ஆப்பிரிக்காவிலேயே நேரிற்கண்டு அறிந்தவர். அவரும், அடிகளார்

இந்தியா போந்து நாட்டு விடுதலைக்கு உழைக்க வேண்டும் என்ற பெருவிருப்பு உடையவர். அவர், அடிகளாரிடம் அக்கருத்தினை ஆப்பிரிக்காவிலேயே வெளியிட்டும் இருந்தார். இவ்வாறு, தாய் நாடு அடிகளாரது தொண்டினை எதிர் நோக்கி நின்றது.

தென்னாப்பிரிக்கப் போர் ஒருவாறு முடிந்ததும், அடிகளார் தாய் நாடு திரும்ப எண்ணினார். கோகலே அவர்கள் வழி காட்ட, அந்நெறியிலே நின்று, தாய்நாட்டுப் பணி செய்வதில் அடிகளார்க்கு அளவு கடந்த ஆசை இருந்தது. கோகலேயை இங்கிலாந்தில் கண்டு பேசிய பின் அடிகளார் இந்தியா வர விரும்பினார். எனவே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினான்காம் (1914) ஆண்டு ஜூலை மாதம் பதினெட்டாம் நாள் அடிகளார் தென்னாப்பிரிக்காவில் கப்பல் ஏறினர்; கேலன் பேக்கு என்ற ஜெர்மானியரும், அடிகளாரின் மனைவியாரும் உடன் இருந்தனர்.

அடிகளார், இங்கிலாந்துக்கு வரும்வழியில், ஆகஸ்டு மாதம் நாலாம் நாள் 'முதலாவது உலகப் போர்' மூண்டுவிட்டது. ஆகஸ்டு ஆறும் நாள், அடிகளார் தம் மனைவியாருடனும், கேலன் பேக்குடனும் சீமை வந்து சேர்ந்தார்; ஆனால், கோகலேயைச் சந்திக்க அவரால் முடியவில்லை. உடல்நலங் கருதி, பிரான்ஸுக்குச் சென்ற அவர், போர் மூண்டதால் உடனே இங்கிலாந்து திரும்ப முடியவில்லை. அவர் அங்கேயே தங்கிவிட நேர்ந்தது. அடி

களார்க்கோ, அவரைக் காணுமல் தாய் நாடு மீள விருப்பம் இல்லை. அதன்பொருட்டு இங்கிலாந்திலேயே சில காலம் அடிகளார் தங்கினர்.

அடிகளார், அப்போது மூண்டிருந்த உலகப் போரினைப் பற்றியும், அதில் இந்தியர் பங்கு என்ன என்பதைப் பற்றியும் சிந்தித்தார்; டாக்டர் பிராண ஜீவன்தாஸ் மேத்தா, ஸொராப்ஜீ அட்ஜணியா முதலிய அன்பர்களோடு கலந்து பேசினர்; ஆண்டிருந்த இந்தியர்களைக் கூட்டித் தம் எண்ணங்களைத் தெரிவித்தார். சீமையில் வசிக்கும் இந்தியர் அனைவரும், போரில் கலந்து உதவி செய்ய வேண்டும் என்பது அடிகளார் கருத்து. அதற்குச் சிலர் எதிர்ப்பும் தெரிவித்தனர். ஆங்கில ஆட்சியைக் காட்டிலும், ஆட்சி புரியும் மக்களிடமே அதிகக் குற்றம் இருப்பதாக அக்காலத்தில் அடிகளார் எண்ணினர்; ஆட்சியாளரிடம் இருந்த குறைகளை அன்பினலேதான் போக்க வேண்டும் என்று முடிவு செய்து, போரில் உதவ முன் வந்தார்; எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது, தாமாக உதவ முன் வருபவர் பலரைக் கூட்டி, ஒரு படையை ஏற்படுத்தினர்; கிரூ பிரபுவுக்கு ஒரு கடித மூலம் தம் கருத்தினைத் தெரிவித்தார். அவரும் அடிகளார் நன்றியைப் பாராட்டினர்.

அடிகளார் படையில் எண்பதின்மர் இருந்தனர். அப்படையினர்க்கு டாக்டர் காண்டிலியின் மேற்பார்வையில் புண் ஆற்றும் பணிக்கு ஆரம்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆறு வாரத்திற்குள் தேவைப்பட்ட முதலுதவி முறை

கள் யாவும் கைவரத்தக்க நிலையில், அப்பயிற்சி முறை அமைந்திருந்தது. கர்னல் பேக்கர் தலைமையின்கீழ் அடங்கிப் பின்னர் அடிகளார் படை போர்க்களம் சென்று சேவை செய்தது.

இதற்கு இடையில் அடிகளாருக்கு விலா எலும்பு நோய் கண்டது. கோகலேயும் சீமை வந்து சேர்ந்தார். நோயின்போது பாலும் தானியங்களும் உட்கொள்ளவேண்டும் என்று டாக்டர் கூறினர். கோகலேயும், அடிகளார் வைத்தியர் பேச்சைக் கேட்கவே வேண்டும் என்று வற்புறுத்தினர். அடிகளாரோ, பல நாட்கள் வரை ஆவின்பால் உட்கொள்வதில்லை என்னும் நோன்பை மேற்கொண்டிருந்தார்; டாக்டர் வற்புறுத்தலுக்கு ஒருவாறு இணங்கி ஆட்டின்பாலை உட்கொள்ள இசைந்தார். வலி தீர்ந்தும், நோய் முழுதும் தீரவில்லை. பின்பு திரு இராபர்ட்ஸ் என்பார், அடிகளாரைத் தாய்நாடு திரும்புமாறும், திரும்பினுல் நோய் குணமாகிவிடும் என்றும் கூறினுர். அவ்வாறே அடிகளார் இந்திய நாடு வர முயன்ருர். அவர் வருவதற்கு முன்பே, கோகலே கொடுங்குளிர் தாங்காமல் இந்தியாவிற்கு வந்திருந்தார்.

அடிகளாருடன் வந்திருந்த கேலன் பேக்குக்கு இந்தியாவர உத்தரவு கிட்டவில்லை. அடிகளார் சில நாட்களில் பம்பாய் வந்து சேர்ந்தார். தாய் நாட்டில் காலடி வைத்த அடிகளாரது மகிழ்ச்சி, கட்டினுக்கு அடங்காதது. கோகலே பம்பாயில் அடிகளை நல்ல முறையில் வரவேற்க ஏற்பாடுகள் செய்திருந்தார். அவரோடு கலந்து

பேசி நாட்டிற்குப் பணிபுரிய வேண்டும் என்பது அடிகளாரது பேரவா. ஆனால், இறைவன் திருவுள்ளம் வேறாய் இருந்தது. கோகலே அடிகளார் வந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே உயிர் நீத்துவிட்டார்.

அடிகளார் பம்பாய் எய்தியவுடனே, அங்குக் கவர்னராய் இருந்த வில்லிங்டன் பிரபு அடிகளாரை அழைப்பித்துப் பேசினார். கவர்னரைக் கலந்து பேசின பின்பு அடிகளார் பூனாவுக்கு வருமாறு கோகலேயும் விரும்பினார். கவர்னரோடு பேச்சு நடந்தது. வில்லிங்டன் பிரபு, அரசியலில் ஈடுபட்டு அடிகளார் ஏதேனும் செய்யத் தொடங்குமுன் தம்மைக் கண்டு பேசிச் செய்தி தெரிவித்த பிறகே செயலில் இறங்குமாறு ஓர் உறுதி மொழியினை அடிகளாரிடமிருந்து பெற விரும்பினார். பொறுமையுடன் அறப்போரே புரியவிரும்பும் தமக்கு அவ்வுறுதி தருவது இயலும் என்று கூறி, அவ்வேற்பாட்டினுக்கு அடிகளார் மகிழ்வுடன் இயைந்தார்.

பின்பு அடிகளார் பூனாவிற்குச் சென்று, கோகலே அவர்களோடு கலந்து உறைந்தார். இந்திய ஊழியர் சங்கத்தார் அடிகளைப் பேரன்பு செய்து போற்றினர். எல்லா உறுப்பினர்களும் அவ்வமயம் அங்கு வந்திருந்தார்கள். அடிகளார் அவர்களோடெல்லாம் வருங்காலவேலை பற்றிக் கலந்து பேசினார். அடிகளார் அச்சங்கத்தின் உறுப்பினர்களுள் ஒருவராகவேண்டும் என்பது கோகலே அவர்களது பெருவிருப்பம். அடிகளாருக்கும் அவ்வெண்ணம் இருந்தது. ஆனால், சில

ரிடையே கருத்து மாறுபாடு இருந்தது. அச்சங்க நோக்கத்திற்கும் அடிகளார் கருத்துப் போக்கிற் கும் இடையே பெரிய பிளவு இருப்பதாக அவர் கட்குப் பட்டது. கருத்து மாறுபட்ட இடத்திலே பெருவாரி ஆதரவு இருந்தாலும், வலிய நுழைவ தில் அடிகள் முனையவில்லை. மேலும் அடிகளாரது நினைவு, ஓர் ஆச்சிரமம் அமைத்து, போனிக்ஸ் கூட்டாளிகளுடன் கூடித் தொண்டாற்ற வேண் டும் என்பது. அதன்படியே ஆமதாபாது நகர் சென்று, பயிற்சி நிலையம் ஏற்படுத்தி, நாட்டுத் தொண்டு புரிவதில் நாட்டம் கொண்டு நடந்தார்.

# VII விடுதலைப்போர்

இன்று நம் இந்திய நாடு விடுதலை பெற்றது. ஆனால், இவ்விடுதலை எளிதில் எய்திவிடவில்லை. கம்பெனியார் ஆட்சிக்காலந்தொட்டே, உள்நாட்டில் பெரும்புரட்சிகளும் போர்களும் விடுதலை குறித்து மீண்டு மீண்டும் மூண்டுகொண்டிருந்தன. ஆனால், படைவலியால் அவையாவும் அடக்கப்பட்டுவிட்டன. எனினும், நம் நாட்டு மக்களிடம் விடுதலை வேட்கை அறவே மாண்டுவிடவில்லை.

"சட்டமுறைகட்கு உட்பட்டு இந்திய நாட்டின் விடுதலையினைப் பெறவேண்டும்," என்ற நோக்கம் சிலரிடை அரும்பிற்று. அதன் பயனாய், 'இந்திய தேசீயக்காங்கிரசு' என்ற கழகம் ஒன்று நிறுவப்பெற்றது. அந்தக் கழகம் தொடர்ந்து செய்து வந்த தொண்டுகளின் பயனே இன்று நாம் கண்டிருக்கும் விடுதலை ஆகும்.

தேசீயக் காங்கிரசின் வளர்ச்சியிலும், சில வேறுபாடுகள் நாம் நினைக்கத்தகும்: முதலிலே, அது சில பிற்போக்காளர்களான மிதவாதிகள் அடங்கிய கூட்டமாகவே இருந்து வந்தது. அதிலே, அரசியலாரின் கருணையை விழையும்

கூட்டத்தாரும் தலைமை தாங்கி வந்தனர். சர்க்காருக்குக் கருணை மனுப் போடுவது, விடுதலை வேண்டும் என்று முடிவு செய்து தெரிவிப்பது, நாட்டின் பல பகுதிகளிலும் சென்று வாயளவில் வீரப் பேச்சுப் பேசுவது, அதிகாரிகளைப் பேட்டி காண்பது ஆகிய இவைகளே நாட்டு விடுதலைக்கு அக்காலக் காங்கிரசு கண்டறிந்த வழிகள்!

அடிகளார் தாய் நாடு வந்த பின்பு தேசியக் காங்கிரசில் சேர்ந்து பல பணிகள் புரிந்தார்; அதன் நோக்கினையும் போக்கினையுமே பிறிதொரு வழியில் மாற்றிச் செலுத்தினர். நாட்டுப் பணி புரிய விரும்பும் தொண்டர்கள் அடங்கிய கழகமாக அதனை உருமாற்றினர்; உண்மை, அகிம்சை, அன்பு என்ற மூன்றையும் தொண்டர்களின் ஒழுக்க நெறியாக ஆக்கித் தந்தார்; இடைவிடாது பல அறப்போர்களைத் தலைமை தாங்கி நடத்தினர்; சட்டமறுப்பு, வேலைநிறுத்தம், சிறைபுகல் முதலிய துறைகளில் மக்களை ஈடுபடச் செய்து, வேற்றவர் ஆட்சிமீது கொண்ட வெறுப்பை வெளிக்காட்டச் செய்தார்; நாட்டு மக்களிடம், என்றுமில்லாத அளவு தேசபத்தியை வளர்த்தார். இப்படி அடிகளார் செய்து வந்த பெருமுயற்சியின் விளைவாகவே, நாம் இன்று விடுதலை பெற்றிருக்கிறோம் என்பதனைச் சரித்திரம் சான்றுடன் சொல்லும். அந்தச் சரித்திரத்தினைச் சிறிதளவு தொடர்ந்து காண்பது, அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றினை அறிவதன் ஒரு பகுதி ஆகும்.

அடிகளார் இந்திய நாடு திரும்பும் போதே

ஐரோப்பியப் பெரும்போர் மூண்டுவிட்டது என் பதைக் கண்டோம். அவர் இங்கிலாந்தில் இருந்த போதும், போரில் ஒத்துழைப்புக் காட்டினார். இந்தியா வந்ததும் போருக்கு மனமுவந்து உதவி னார். பம்பாய், டில்லி முதலிய இடங்களில் நடந்த போர் முயற்சிக் கூட்டங்களில் கலந்துகொண் டார்; 'அப்போரில் கலப்பது நலம்,' என்று, நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னார்; கெய்ரா மாவட்டப்பகுதியினின்று பல்லாயிரக் கணக் கான மக்களைப் படைக்குத் திரட்டி அனுப் பினார். அடிகளாரின் இச்சேவையை மெச்சி, 'கேசரி இந்து' பதக்கத்தினை அரசியலாரின் சார்பிலே வைசிராய் அவருக்கு அளித்தார். இவ் வாறு எல்லாம் வெள்ளையருக்குக் கள்ளம் இன்றி உதவி செய்தால், அவர்களே மனம் மாறிவிடு வார்கள் என்பது அடிகளார் அப்போது கொண் டிருந்த உறுதி.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன் பதாம் (1919) ஆண்டில், அடிகளாரிடம் கண்ட அம்மனவுறுதி சிறிது குலையலாயிற்று. சர்க்காரி டம் அவருக்கு இருந்த நல்லெண்ணம், நாளுக்கு நாள் தகர்ந்தது. 'ஒத்துழையாமை ஒன்றே வழி,' என்பதனை அடிகளார் கண்டுகொண்டார். அமைதி, உண்மை, தாழ்மை, அன்பு, தீச்செயல் நீக்கம், காழ்ப்பின்மை முதலிய சீரிய வழியி லேயே அவ்வியக்கத்தினைத் தொடங்கி நடத்த வேண்டும் என்ற உறுதியினையும் பூண்டார். இவைகளை எல்லாம் மேற்கொள்ளுமாறு மக்க ளைப் பயிற்றவேண்டும் என்ற எண்ணம் அடிக

ளாரிடம் அரும்பியது. சபர்மதியில், சத்தியாக்கிரக ஆச்சிரமம் ஒன்று நிறுவி, அதன் மூலம் பலரை அந்நெறியில் பயிற்றினார். அடிகளார் தொடங்கிய விடுதலைப் போரின் முதற்படி இதுவே என்று சொல்லிவிடலாம்.

அந்த ஆச்சிரமத்திற்குக் கோகலே அவர்கள் நல்ல ஆதரவு தந்தார்கள். வேறு பலரும் பொருளுதவி செய்து பேணினர். ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினைந்தாம் (1915) ஆண்டு பயிற்சி நிலையம் நிறுவப் பெற்றது. குஜராத்தி மொழியின் வாயிலாகத் தாய் நாட்டிற்குப் பல தொண்டுகள் செய்யவும் இராட்டை வேலையை நல்ல முறையிலே தொடங்கவும் ஆமதபாதிலேயே அதனை நிறுவ அடிகளார் உறுதி கொண்டார்; தீண்டாதார்களையும் அதில் சேர்த்துக் கொண்டார்; நிலையம் நடைபெறுவதற்கான சட்டதிட்டங்களைப் பற்றிய கருத்துக்களை நாடெங்கும் பலர்மூலம் கேட்டறிந்தார். தொடக்கத்தில் அதில் பதின்மூன்று தமிழர் இருந்தனர். தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த தமிழ் இளைஞர் சிலரும் அங்கிருந்தனர். சுமார் இருபத்தைந்து பேருக்குக் குறையாமல், அந்த வட்டார வாசிகளும் சேர்ந்திருந்தார்கள். எல்லாரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்போல நெடுங்காலம் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

அடிகளார், தம் உறவினர்களைப் பார்க்க வேண்டிப் பம்பாயிலிருந்து போர்பந்தருக்கு ஒருமுறை சென்றார். இடை வழியில் வட்வாண் இரயில் நிலையத்தில், தையற்கார மோதிலால்

அடிகளைக் கண்டு பேசினர். வீரம்காமில் நடந்த வரி விசாரணை பற்றியும், அது பற்றி நடக்கும் கொடுமைகள் பற்றியும் அவர் அடிகளிடம் எடுத்துச் சொல்லி, உதவி செய்ய வேண்டினர். கத்திய வாரிலும், அடிகளார் சென்ற இடங்களில் எல்லாம் அக்கொடுமைபற்றிய நெடிய பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தது. வில்லிங்டன் பிரபு தமக்குத் தந்திருந்த உறுதிமொழியைப் பயன்படுத்த விரும்பி, அடிகளார் பம்பாய்ச் சர்க்காரோடு கடிதங்கள் மூலம் விவாதித்தார்; கவர்னரையும், அவர் செயலாளரையும் நேரில் அது குறித்துக் கண்டு பேசி, ஒழுங்கீனத்தைத் தெளிவாக்கினர். வில்லிங்டன் பிரபு அடிகளாரது செயலைப் பாராட்டி நன்றி கூறி, "டில்லி அரசாங்கத்தின் செயல் அது. எங்கள் கையில் இருந்தால், அச்சுங்கவரி அப்போதே எடுபட்டிருக்கும்," என்று சொன்னர். பின்பு இந்திய சர்க்காருக்கும் அடிகளார் எழுதினர்; செம்ஸ்போர்டு பிரபுவை நேரிற்கண்டு பேசியும், இரண்டாண்டுகள் இடைவிடாது கடித மூலம் எழுதியும், இறுதியில் அதற்கு ஒரு முடிவு கண்டார். சுங்கவரி அடிகளாரின் பெரு முயற்சியால் இறுதியில் நீக்கப்பட்டேவிட்டது. 'இந்திய மண்ணில் இந்த வெற்றிதான் எனது பொறுமைப் போரின் முதல் வெற்றி,' என்று அடிகளாரே தமது வரலாற்றில் எழுதியிருக்கிறார்.

குறிப்பிட்ட காலம்வரையில் வேலை செய்வதாக ஒப்பந்தம் செய்து வெளிநாடு செல்லும்

தொழிலாளிகட்கு 'ஒப்பந்தத் தொழிலாளர்' என்பது பெயர். இவர்கட்கு நேட்டால் சர்க்கார் மூன்று பவுன் தலைவரி போட்டதும், அஃது அடிகளாரின் முயற்சியினால் நீங்கிய செய்தியும் நாம் அறிவோம். ஆனால், அந்த ஒப்பந்தக்கூலி முறையையும் எடுத்துவிட வேண்டும் என்று, தொடக்கமுதலே தலைவர்கள் அரசினரை வேண்டினார்கள். நெடுங்காலம் அஃது எடுபடவில்லை. ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பதினாறும்(1916) ஆண்டு இந்திய சட்ட சபையில் பண்டித மாளவியா அவர்கள் அது பற்றிப் பேசினார்கள். ஹார்டிஞ்சு பிரபு, உரிய காலத்தில் அம்முறை ஒழிந்துவிடும் என்று மேலிடத்திலிருந்து உறுதி வந்திருப்பதாகத் தெரிவித்தார். ஆனால், அக்கூலிமுறை உடனே எடுபட வேண்டும் என்பது அடிகளார் விருப்பம். மக்களிடம் அதற்கு உரிய விழிப்பும் இருந்தது. செய்தித் தாள்களில் அடிகளார் இது பற்றி எழுதிக் கிளர்ச்சி செய்தார். பண்டித மாளவியா 'ஒப்பந்தக் கூலி முறை'யை உடனே நீக்குமாறு சட்டம் நிறைவேற்றச் சபையில் உத்தரவு தரவேண்டினார். வைசிராய் பிரபு அதற்கு இணங்கவில்லை. அடிகளார் நாடெங்கும் சென்று அதற்குத் துணையான ஆதரவு திரட்டினார்; பல சொற்பொழிவுகளும் செய்தார்; பம்பாய் கல்கத்தா முதலிய இடங்களில், பெருமக்கள் ஆதரவுடன் கூட்டங்கள் பல கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற வழி செய்தார்; இது குறித்து அறப்போர் ஒன்று தொடக்க முயன்றார். ஆனால், அதற்கு இடையிலேயே, ஒப்

பந்தக் கூலி முறை எடுபட்டுவிட்டதாக, அரசிய லார் ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

பீஹாரில் சம்பரான் என்ற நிலப் பகுதியிற் பெரும்பான்மை அவுரித் தோட்டங்கள் உண்டு. அத்தோட்ட முதலாளிகளுள் பலர் மேனாட்டி னர். குடியானவர், தம் நிலத்தில் ஒரு பகுதியில் நில முதலாளிகளுக்கு என, அவுரி பயிரிட்டுத் தந்து தீரவேண்டும். சட்டப்படியே அவர்கள் அவ்வாறுசெய்து தரக் கட்டுப்பட்டிருந்தார்கள். 'தீன் கட்டியா' என்ற இம்முறையால், அங்குக் குடிமக்கள் பெருந்தொல்லைகட்கு நிலைக்களனாய் இருந்து வந்தார்கள். அடிகளார் இலக்கினவ் காங்கிரசுக்குப் போயிருந்தபோது, குடியானவர் பலர் அத்தொல்லை பற்றி முறையிட்டுச் சம்ப ரானுக்கு அவரை வரவேண்டினர். காந்தியடி களார் கேள்வியுற்று உண்மை தேற ஆண்டுச் சென்றார். குடியானவர்கள் நிலையினை ஆராயப் பல இடங்களுக்குச் செல்ல வேண்டி இருந்தது. தோட்டக்காரர்களுக்கும் தொழிலாளர் அதி காரிக்கும் கடிதங்கள் எழுதினார்.

அடிகளாரின் உண்மை நிலை உணராத மா வட்ட அதிகாரி, அவர் வரவால் அமைதி குலை யும் என்று கருதினார்; அடுத்த வண்டியிலேயே ஊர் திரும்புமாறு, அடிகளாருக்குக் கட்டளை பிறப்பித்தார். அடிகளார் அது கண்டு துணுக்குற்றார். "யான் ஏழைகட்கு உழைக்க வந்தேன்; ஊரை விட்டுப் போக விரும்பேன்; வருவது வருக! கட்டளை மீறியதற்கு நேரும்

தண்டனையை ஏற்கிறேன்," என அடிகளார் அவருக்குப் பதில் இறுத்தார்.

கட்டளை மீறிய அடிகளார்மீது வழக்குத் தொடரப்பட்டது. அடிகளார் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி தீர்ப்புச் சொல்லாது முடிவினைச் சின்னாள் நிறுத்தி வைத்தார். இதற்கிடையில் அடிகளார் மீதிருந்த வழக்கினைத் தள்ளிவிடுமாறு சம்பரான் அதிகாரிக்குச் சர்க்கார் கட்டளையிட்டது. அது மட்டும் அன்றி, அடிகளார் அதற்குமேல், சம்பரான் தொழிலாளர் துயர் நீங்க விசாரணை செய்யும் உரிமையையும் அரசியலாரிடமிருந்து பெற்றார். விசாரணைக் கூட்டத்தில் சர் எட்வர்டு கேட்டு என்ற ஐரோப்பியரும் இருந்தனர், அவருதவியை அடிகளார் பெரிதும் பெற்று, விரிவான அறிக்கை ஒன்று தயாரித்து, அரசியலாருக்கு முடிவு காண அனுப்பி வைத்தார். கமிட்டியின் வேண்டுகோள்கள், சிறிதும் மாறுதல் இன்றி அப்படியே அரசியலாரால் ஒப்புக்கொள்ளப்பட்டன. அதன் பயனாய், ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்டு நடைமுறையில் இருந்த 'தீன் கட்டியா' முறை நீக்கப்பட்டது. தொழிலாளர் எல்லாரும் நலம் உற்றுத் திகழ்ந்தனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினெட்டாம் (1918) ஆண்டில், பம்பாய் மாகாணத்துக் கெய்ரா நிலப் பகுதியில் விளைவு குறைந்தது. விளைவின் குறைவைச் சிறிதும் கருதாது, அரசியலார் என்றும் போல அன்றும் வரி

திரட்டத் தொடங்கினர். ஏழைக் குடி மக்கள் வரி கொடுக்க இயலாமல் தடுமாறினார்கள். அவர்களது துயர் கேட்ட அடிகளார் அங்குச் சென்று, உண்மை நிலை தேறி, வரிக்குறைவு செய்யுமாறு அரசியலாரிடம் முறையிட்டார். அடிகளார் முறையீட்டினை முதலிலே அரசாங்கம் செவி சாய்த்துக் கேட்க ஒருப்படவில்லை. பின்னர், அடிகளார் தாமே தலைமை தாங்கி வரி கொடா இயக்கத்தினை நடத்தினார். பெண்டிரும் அடிகளார் சொல் வழி நின்றனர். குடியானவர்களின் நிலபுலம், ஆடுமாடு, வீடு வாசல் முதலியவைகளை எல்லாம் வரிக்கு ஈடாக அரசாங்கம் ஏலம் போட்டது. ஆயினும், ஏலம் எடுப்பார் எவரும் இல்லை. அடிகளாரின் ஆன்மவலி அந்நிலப் பகுதி முழுவதையுமே ஆட்கொண்டுவிட்டது. அந்நில மக்கள் எத்தனையோ இன்னல்களை ஏற்றார்கள்; ஒன்றுக்கும் அசைந்து தரவில்லை. இறுதியில், "தீர்வை கட்டக் கூடியவர்கள் கட்டலாம்; முடியாதவர்கள் வரி தர வேண்டுவதில்லை," என்று அரசியலார் பணிந்து ஆணை தந்தனர். ஆமதாபாது நகரில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் (1917) ஆண்டில் கொடிய கொள்ளை நோய் ஒன்று பரவி, மக்களை வருத்தத் தொடங்கிற்று. ஆண்டு நெசவுத் தொழிற் சாலைகள் பல இருந்தன. அங்குள்ள தொழிலாளர்கள் கொடுநோய்க்கு அஞ்சி நீங்கிப் பட்டிகளுக்குச் செல்லத் தலைப்பட்டார்கள். அது கண்ட முதலாளிகள், எழுபது சத

விகிதம் சம்பள உயர்வு தந்து, அப்போக்கினைத் தடை செய்து நிறுத்தினார்கள். ஆனால், நோயின் வேகம் தணிந்தவுடன் கூலி உயர்வினையும் நிறுத்திவிட்டார்கள். அக்காரணம் கொண்டு, அம்முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே சிறிது மனக்கசப்பு ஏற்பட்டது. தொழிலாளர், ஐம்பது சத விகிதம் சம்பள உயர்வு கோரினர். முதலாளிகள், இருபது சத விகிதத்திற்கு மேல் தரக்கூடாது என்றார்கள். திருமதி அநசூயா பாய் வாயிலாக, அடிகளார் இச்செய்தி கேட்டார்; ஆமதாபாது சென்று தொழிலாளிகளினிடையே நேர்மை இருப்பது கண்டு, முதலாளிகளிடம் பரிந்து பேசினார். பல முதலாளிகள், அடிகளாருக்கு உயிர் நட்பினர்களாயிருந்தார்கள். எனினும், அடிகளாரது தலையீட்டினை, மூன்றுமவர் தலையீடு என்று சொல்லி, அவரது வேண்டுகோளுக்கு முதலாளிகள் இடம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். பின்னர் அடிகளார் தலைமை தாங்கி, வேலை நிறுத்த இயக்கத்தினை முதலாளிகட்கு எதிராகத் தொடுத்தார். முதலிலே தொழிலாளிகள் அடிகளாரின் முடிவுப்படி ஒழுங்கு முறையாகவே நடந்தார்கள். பின்னர்ச் சிலர் வேலைக்கு மீண்டனர். அவ்வுறுதிக் குலைவு கண்ட அடிகளார், உண்ணு நோன்பினை மேற்கொண்டார். பின்பு முதலாளிகள், தங்களை அறியாமலே ஒரு நன்முடிவுக்கு வந்து, நிலைமையைச் சீர்ப்படுத்தினார்கள். இங்ஙனம், பல தடவைகளில் பொறுமைப் போர் மேற்கொண்டு

மக்களிடையே விழிப்பும் கட்டுப்பாடும் ஏற்படச் செய்தார் நாட்டு மக்களும், அரசியலாரும் அவரது வலிமையையும் தலைமையையும் சிறுகச் சிறுக உணரத் தொடங்கினர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதில் (1919) இருந்து இருபத்திரண்டு (1922) வரை நாட்டில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள் மூன்று. அவை, இரவுலட்டுச் சட்டமறுப்பு, பாஞ்சாலக் குழப்பம், கிலாபத்து இயக்கம் என்பவை. இம்மூன்றிலும் அடிகளார் ஈடுபட்டுப் பணி ஆற்றினார். இரவுலட்டுச் சட்டத்தின்படி அரசியலாருக்கு எவரையும் கேள்வி முறை இன்றிச் சிறைக்கனுப்ப வழி இருந்தது. அதன்பொருட்டு அடிகளார் அதனை எதிர்த்து நிறுத்த முயன்றார். அந்த நேரத்தில் அடிகளார் நோய் வாய்ப்பட்டு இருந்தார்; இருந்தாலும், அதனை எதிர்த்துப் பொறுமைப் போர் ஒன்று நடத்தியே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். வல்லபாய் படேல், சரோஜினி நாயுடு, சங்கர் லால் பாங்கர், அநசூயா பகன் முதலிய தோழர்களோடு கலந்து பேசி, அது குறித்து நாடு முழுவதும் சுற்றி வந்து ஆதரவு திரட்டினார்; நாடெங்கும் வேலை நிறுத்தமும், சட்ட மறுப்பும், ஒத்துழையாமையும் செய்து எதிர்ப்பினைக் காட்டத் திட்டம் இட்டார்.

இவ்வியக்கத்தின் சார்பாக அடிகளார் பாஞ்சாலம் நோக்கிச் சென்றார். அரசாங்க ஆணை அதுபோழ்து அவரை அங்கு நுழைதல்

ஆகாது என்று தடுத்தது. அடிகளார் அவ்வாணையினை மீறினர். அதிகாரிகள் அவரைப் புகை வண்டியில் ஏற்றி வேற்றிடம் கொண்டு சென்றார்கள். ஒன்றும் அறியாச் சிறுமைக் கூட்டத்தாரிடைச் சிறிது மனக்கவலை ஏற்பட்டது. "அடிகளாரை யாண்டோ அழைத்துச் செல்லுகிறார்கள்," என்னும் செய்தி கிளம்பியது. அச்செய்தி, பாஞ்சாலம், பம்பாய், ஆமதாபாது முதலிய இடங்களில் கொலையிலும் குழப்பத்திலும் வந்து முடிந்தது. 'ஜலியன் வாலா பாகுப் படுகொலை' இதன் விளைவே ஆகும். இக்கொடுமைகளைக் கேட்டு அடிகளார் மனம் மிக நைந்தார். படுகொலையினை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தினர்.

மேலும் சமாதான ஒப்பந்தத்தில் துருக்கிக்கு அளித்த விதிகளில், முஸ்லீம் மக்களுள் பலர் வெறுப்புக் கொண்டனர். அதன் பயனாய்க் கிலாபத்து இயக்கம் தோன்றிற்று. அவ்வியக்கத்திற்கு அடிகளார் முழு ஆதரவு தந்தார். இசுலாமிய சமயத்தவரோடு, தோளோடு தோள் சேர்த்து நட்புரிமையால் வாழ அடிகளார் விரும்பினர். அரசியலாருக்கு எதிரான பெருங் கிளர்ச்சி நாடெங்கும் நடந்தது. இரவுலட்டுச் சட்டம் நீக்கப்படும் வரை பொறுமை நெறியில் நின்று, அதற்கு உடன்பட மறுக்குமாறு அடிகளார் மக்களைக் கேட்டுக்கொண்டார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாம் (1920) ஆண்டில் காங்கிரசு அடிகளார் சாத்துவிக ஒத்துழையாமையினைப் போற்றி ஏற்றது. ஆயி

னும், அரசியலாரின் தாக்குதல்களும் குறைந்து விடவில்லை. தம்பொருட்டு நாட்டில் கலகமும் கொலையும் நிகழ்ந்தது கேட்டு, மூன்று நாட்கள் பட்டினி நோன்பு மேற்கொண்டு அவ்வியக்கத்தினையே அடிகளார் நிறுத்திவிட்டார்.

ஒத்துழையாமை இயக்கம், நாட்டில் காட்டுத் தீப்போலப் பரவி வந்த இடை நாளில் வேல்ஸ் இளவரசர் இந்திய நாடு வந்தார். அவரது வரவேற்பில் நாட்டவர் கலத்தல் கூடாது என்ற ஆணை அடிகளார் வாயினின்று வெளிப்போந்தது. பாரசீகரும் கிறித்தவரும் இவ்வாணையினைக் கேளாது, இளவரசரை வரவேற்க முனைந்தனர். நாடு இரண்டு பட்டதனால், ஒத்துழைப்பாளர் ஒத்துழையாதார் என்ற இரு சாராரிடையேயும கைகலப்பு ஏற்பட்டது; கலகமும் மூண்டது. 1921-ஆம் ஆண்டு, இளவரசர் பம்பாயில் வந்து இறங்கிய போது அங்கு வேலை நிறுத்தம் நடந்தது. அப்போது மக்களுள் ஒரு சிலரிடையே நிலவி இருந்த மிருகச் செயலை வெறுத்து நீக்கப் பட்டினி நோன்பினை அடிகளார் மேற்கொண்டு, அமைதி நிலவச் செய்தார்.

எனினும், இவ்வியக்கங்களை ஒடுக்கச் சர்க்கார் விதித்த அடக்குமுறைகளின் கொடுமைகளை எல்லாம் கண்டு அடிகளார் வருந்தினர்; அவற்றை ஒறுக்கும் முகத்தால் சட்ட மறுப்பு இயக்கம் ஒன்று மீட்டும் துவக்க வேண்டும் என்று உறுதி பூண்டார்; யுத்த சேவைக்காகத் தாம் பெற்ற பொற்பதக்கத்தினைத் திருப்பி

அனுப்பி வைத்தார்; வைசிராய்க்கு ஒரு வெளிப் படைக் கடிதம் எழுதினார். ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த கோரக்பூர் ஜில்லாவில் 'சௌரி சௌரா' என்னும் ஊர் ஒன்று உண்டு. அங்கு ஓர் ஊர்வலம் நடைபெற்றது. அதனைப் போலீசார் தடுத்தனர். அதனால், பொது மக்களோடு போலீசாருக்குப் பெரும்போர் மூண்டது. போலீசார் துப்பாக்கியால் மக்களைச் சுட்டுப் பிணக்குவியலாக்கி, நிலையம் சேர்ந்தனர். பின்பு மக்கள் வெகுண்டு எழுந்து ஆரவாரித்தார்கள்; அடிகளார் பெயரை முழக்கிக்கொண்டு, நிலையம் நண்ணி, நிலையத்தையும் ஆண்டிருந்த பலரையும் தீக்கு இரையாக்கி மீண்டார்கள். இப்பொல்லாக் கொலைச் செய்தி அடிகளாருக்கு எட்டியது. இப் பொல்லாத வினைகள் நாட்டு விடுதலைக்கு எவ் வகையிலும் உதவா என்பது அடிகளார் கருத்து. அறப்போருக்கு நாடு இன்னும் முதிர்ந்த நிலையிற் பக்குவம் பெறவில்லை என்பதை அடிகளார் அறிந்தார்; ஆண்டவனே இச்சம்பவத்தின் மூலம் தமக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தியதாகக் கருதினார். பின்பு ஒத்துழையாமை இயக்கத்தினையே நிறுத்திவிட்டார். இயக்கத்தை நிறுத்தியதும் அடிகளார் அமைதியை நிலை நாட்டக் கருதி, ஆக்க வேலைகளில் முனைந்தார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டாம் (1908) ஆண்டு முதலே, அடிகளார் கைத்தறித் தொழிலை ஆதரித்து வந்தார்; சபர்மதியில் பயிற்சி நிலையம் நிறுவிய பின்னரும், கையால் நூற்றலைப் பற்றிச் சிந்தித்தார். "ஆலைகளில்

நெய்த துணிகளை நாம் பெறுவது தவறு. அதனால், அவர்கட்கு நாம் கையாட்களாய் இருக்கிறோம்," என்று அடிகளார் கருதினார். பின்னர் இராட்டையைத் தேடிக் கொண்டு வந்து, அதன் மூலம் நூற்கும் நூல்களினால் நெய்யும் ஆடைகளையே நாட்டு மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று சொன்னார்; சுதேசி என்ற பெயரால் அந்தக் கதரியக்கத்தினை நாடெங்கும் போய்ப் பரப்பினார்; இருபது இலட்சம் இராட்டைகள் நாட்டில் இயங்க வேண்டும் என்று முயன்றார்.

ஒத்துழையாமை இயக்கக் காலத்தில் நாட்டிடை நிகழ்ந்த கலகங்களுக்கும் கொலைகளுக்கும் அடிகளையே அரசியலார் பொறுப்பாளராக்கினர். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்திரண்டாம் (1922) ஆண்டு மார்ச்சு மாதம் பத்தாம் நாள் அடிகளார் கைது செய்யப்பட்டார். வழக்குத் தொடரப்பட்டது. சிறைப்பட்ட நேரத்திலும் வழக்கு நடந்த காலத்திலும் அடிகளார் அமைதியைக் காக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். வழக்கு நடந்த போது, நீதிபதியின் முன் தாம் குற்றவாளி என்பதனை அடிகளார் ஒப்புக்கொண்டு, ஓர் அறிக்கை விட்டார். அதில், "இந்திய நாட்டிற்கு அன்னிய ஆட்சி தீமைகள் பல விளைத்து வருகின்றது. அதன்மீது அன்பின்மை காட்டல் நன்னெறி. ஆகவே, அவ்வாட்சியின் மீது நேயம் கொள்வது பாவம். அதனை எதிர்த்து ஒத்துழையாமை செய்தேன். என்னுடையது, அறத்தொண்டு. வேற்றவர் ஆட்சிக்குத் துணைபுரியும் சட்டம் நல்

லது என்று உங்கட்குத் தோன்றினால், எனக்குத் தண்டனை தாருங்கள்," என்று கேட்டிருந்தார். நீதிபதி, சட்டத்தின்படி ஆறாண்டு வெறுங் காவல் தண்டனையை அடிகளாருக்கு விதித்தார். சிறைத் தண்டனையின் இரண்டாம் ஆண்டு முடிவில் அடிகளாருக்குக் குடல் நோய் கண்டது. அரசியலார், எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி, அடிகளாரை விடுவித்தனர்.

நாட்டு விடுதலைக்கு இந்து முசுலீம் ஒற்றுமை இன்றியமையாதது என்பது அடிகளார் கண்டறிந்த உண்மை. ஒத்துழையாமைக் காலத்தில் அவர் அவ்வொற்றுமைக்குப் பெரிதும் உழைத்துப் பாடுபட்டார். பின்னர், அடிகளார் சிறை புகுந்திருந்த காலத்தில், இந்து முசுலீம் வேற்றுமை பல இடங்களில் தலைவிரித்தாடிற்று. கொலை கலகங்களும் சில இடங்களில் நிகழ்ந்தன. அடிகளார் வெளிப் போந்ததும் நாட்டிடை வேற்றுமை உணர்வு கண்டு கண்ணீர் உகுத்தார்; இன்சொற்களால் அவ்வேற்றுமையைக் களைய முயன்றார். அதனால், பெரும்பயன் நிகழவில்லை. பின்னர் அடிகளார் இருந்த இடத்திலேயே இருந்து இருபத்தொரு நாள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். அதன் பயனாய் ஓரளவு சமூக ஒற்றுமை உணர்ச்சி நாட்டிடையே மிகுந்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் (1924) ஆண்டு பெல்காமில் நடைபெற்ற காங்கிரசில், அடிகளாரே தலைமை தாங்கினார். அதிலும், பின்னர்ச் சென்னையில் நடைபெற்ற காங்கிரசிலும், "முழு விடுதலையே நாட்

டிற்கு வேண்டும்," என்ற முடிவினைச் செய்து, அதற்குஆதரவு திரட்டினர். 1929-ஆம் ஆண்டில் சீமையில் தொழிற்கட்சியினர் பதவிக்கு வந்தனர். அவர்கள், இந்திய நாட்டிற்குக் குடியேற்ற நாட்டுத் தகுதியே தரப்படும் என்று கூறினர்; வட்டமேஜை மாநாடு ஒன்று கூட்டவும் செய்தனர். அதற்குப் போக யாரும் உடன்படல் ஆகாது என இலாகூரில் நடந்த தேசீயக் காங்கிரசு முடிவு செய்தது. இவ்வகையில் அரசியலாருக்கும் காங்கிரசுக்கும் மனக்கசப்பு வளர்ந்து கொண்டே வந்தது.

பின்னர், அடிகளார் வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், நாட்டுக்கு நன்மை தரும் பதின்மூன்று காரியங்களை உடனடியாக அரசியலார் செய்துவிட வேண்டும் என்று கண்டிருந்தார். அரசியலார், அதற்கு உடன்படவில்லை. மற்றொரு சட்டமறுப்பு இயக்கத்தினை அடிகளார் மேற்கொண்டு நடத்தினர். அதில், உப்புச் சட்டத்தினை மீறுதல் தலைமை வாய்ந்திருந்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் (1930) ஆண்டு மார்ச்சு மாதம் பன்னிரண்டாம் தேதி, அடிகளாரே தமது ஆச்சிரமத்தில் இருந்து இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார், ஏப்பிரல் ஐந்தாம் நாள் டண்டி சென்று, தாமே சட்ட மறுப்புச் செய்தார். அடிகளைப் பின்பற்றி, நாடெங்கும் பல்லாயிரக் கணக்கில் மக்கள் சட்டம் மீறிச் சிறை புகுந்தார்கள். மே மாதம் நாலாம் நாள் நடுநிசியில் அடிகளார் கைது செய்யப்பட்டார். ஆனாலும், சட்டமறுப்பு மட்

டும் ஓயாது தொடர்ந்து நடந்துகொண்டே வந்தது. கள்ளுக்கடை மறியல், உப்புச் சட்டம் மீறல், அந்நியத்துணி விலக்கு முதலிய வகைகளிலே சட்டமறுப்பு நடைபெற்றது. அரசாங்கமும் கொடிய அடக்கு முறையினைக் கருவி எனக் கையாண்டது.

அப்பொழுது சர் சாப்ரூவும், திரு. ஜெயகரும், வைசிராயையும் அடிகளாரையும் கண்டு நல்ல முடிவுக்கு வரத்தூண்டினர். அதன் பயனாய், 1931-ஆம் ஆண்டு, உலகப்புகழ் பெற்ற 'காந்தி இர்வின் ஒப்பந்தம்' என்ற உடன்படிக்கை ஏற்பட்டது. சட்டமறுப்பும் நின்றது. காந்தியடிகளாரும் பிற செயற்கழக அங்கத்தினர்களும் விடுதலை அடைந்தார்கள். பிப்பிரவரி மாதம் பதின்மூன்றாம் நாள், வைசிராய் இர்வின் பிரபுவை, அடிகளார் நேரில் கண்டு பேசினார். அதன் பயனாய், நாடெங்கும் உப்பு மறியல் செய்து சிறைப்பட்ட தொண்டர்களும் விடுதலை பெற்றார்கள். மக்களுக்கு வேண்டிய ஓரளவு உப்பு வரியின்றி எடுத்துப் பயன்படுத்த அரசாங்கம் சலுகை தந்தது. கள்ளுக்கடை, துணிக்கடை முதலியவைகளை அறநெறியில் நின்று மறியல் செய்யலாம் என்றும், இர்வின் அரசாங்கம் பணிந்து கொடுத்தது.

பிறகு, 1932-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த வட்டமேஜை மாநாட்டிற்கு அடிகளார் சென்றார்; மக்களின் குரலையே அங்குத் தாம் காட்டவந்திருப்பதாகப் பேசினார். பிரிட்டிஷாருக்கும் காங்கிரசுக்கும் இடையே நல்லெண்ணம்

உண்டாக்க எவ்வளவோ முயன்றார். காந்தி அடிகளாரை மன்னர் பிரான் கண்டு பேசினார். தீண்டாதாருக்குத் தனித்தொகுதி அமைப்பது என்ற பேச்சினை அடிகளார் அங்குக் கேட்டார். 'உயிரைக் கொடுத்தேனும் அதனை எதிர்ப்பேன்!' என்று அடிகளார் அங்கேயே கூறினார். நாட்டினைப் பிரித்தாளும் சூழ்ச்சியின் முற்றிய விளைவு அந்தத் தனித்தொகுதி முறையிலே இருப்பதனைக் கண்டு மனம் கலங்கினார். கடைசியில் இம்மாதிரி மாநாடுகள் கூட்டிப் பேசுவது முற்றும் வெறுஞ்செப்படிவித்தை என்பதைக் கண்டார். அடிகளார் வெறுங்கையுடனே தாய் நாடு திரும்பினார்.

அடிகளார் திரும்பியதுமே, அரசியலார் காங்கிரசின்மீது போர் தொடுக்கத் தொடங்கி விட்டனர். நாட்டிடைப் பல அவசரச் சட்டங்கள் தோன்றலாயின. சர்க்கார் ஒப்பந்த விதிகளை மீறிற்று. நாடெங்கும் துப்பாக்கி சுடுதலும் தலைவர்கள் சிறைப்படலும் நிகழ்ந்தன. அடிகள் வந்திறங்கிய மறுதினமே சர்க்காரின் போக்கினை நோக்கி வருந்தினார்; வைசிராயைக் கண்டு முறையிட விரும்பினார்; பேட்டி காண அனுமதி கேட்டார். இருதினங்கள் கழித்துப் 'பேட்டி கிடையாது,' என்ற செய்தி வந்தது. அடிகளாருக்கு விருப்பம் இன்றி ஒழியினும், இயக்கத்தினைத் தொடங்கவேண்டிய சூழ்நிலை வலிய ஏற்பட்டு விட்டது. பதினெட்டு மாத காலம் இயக்கம் தொடர்ந்து நடந்தது. இலட்சம் பேருக்கு மேல் சிறை சென்றனர். மீண்டும் அடிகளார் வைசி

ராயிடம் கலந்து பேச விழைந்து, தந்தி அடித்தார். முந்தி இயக்கத்தினை நிறுத்தினாற்றான் பேட்டிக்கு மறுமொழி கிடைக்கும் என்று அரசியலார் பிடிவாதம் செய்தனர். ஆதலால், நட்பு முறையிலே ஒரு விளைவு ஏற்படுவதற்கு ஆன குறிகள் அடிகளாருக்குத் தென்படவில்லை. அடிகளாரும் இயக்க நிறுத்தத்திற்கு உடன்படவில்லை. பின்பு பொது மக்கள் இயக்கமாக நடந்த அதனை அடிகளார் நிறுத்தித் தனிப்பட்டார் இயக்கமாக மாற்றி அமைத்தார். பிறகு காங்கிரசாரிடையே சட்டசபை நாட்டம் அதிகமாய் இருந்தது கண்டு, அதனையும் அறவே நிறுத்தி, சட்டமறுப்பினைத் தம் சொந்தப் பொறுப்பின்கீழ் வைத்துக்கொண்டார். இயக்கத்தினை நிறுத்தின அடிகளார், அதன் பின்பு வாளா இருந்துவிடவில்லை; ஆக்க வேலைத் திட்டத்தை வலுப்படுத்துவதிலும், நாட்டில் அமைதியை நிலை நிறுத்துவதிலும் ஈடுபட்டார்.

இதற்கு இடையில், பிரிட்டிஷ் சர்க்கார் தீண்டாதாருக்குத் தனித்தொகுதி அளிக்கும் வகுப்புத் தீர்ப்பினை ஏற்று வெளியிட்டது. தீண்டாதாரும் மற்றையரும் ஒன்றுபட்டுத் தேர்தலில் உழைத்தல் வேண்டும் என்றும், அம்முறையிலேயே அரசாங்கம் விதி செய்யாதது பிரித்தாளும் சூழ்ச்சி முறையினைச் சார்ந்தது என்றும் அடிகள் உறுதியாகக் கருதினார்; இறுதிவரை அக்கொடுமையைத் தடுத்து நிறுத்தவும் நினைத்தார். அடிகளார் உள் மனம் பட்டினி நோன்பினை மேற்கொள்ளத் தூண்டிற்று. எரவாடா

வில் அடிகளார் உண்ணு நோன்பினை மேற்கொண்டார். அந்நோன்பு ஆறு நாட்கள் தொடர்ந்தது. சாதி இந்துக்களையும், தீண்டாதார் தலைவர்களையும் ஓர் ஒப்பந்தத்திற்கு வர அஃது உந்தியது. அப்பிணைப்பு, தம் வழியே பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் இணங்கச் செய்தது.

சட்ட மறுப்புப் பொறுமைப் போரினைத் தனிப்பட்ட நிலையில் அடிகளார் ஆரம்பித்த போது, ஒரு முறை கைது செய்யப்பட்டார். சிறையிருந்த பதினுருவது மாதம், தம்மையும் தம் வழி நின்ற தொண்டர்களையும் தூய்மைப் படுத்தும் நோக்குடன் இருபத்தொரு நாள் பட்டினி கிடந்தார்; சனுதனத் தலைவர்களைச் சீர் திருத்த வாதிகளுட்சிலர் தாக்கிய இழி செயலுக்கு வருந்தி, மூன்றுமாதம் கழித்து மீண்டும் ஒரு முறை உண்ணு நோன்பினை மேற்கொண்டார்; மற்றும் ஒரு முறை ஹரிஜன் இதழைச் சிறையிலிருந்தே நடத்தத் தமக்குக் கொடுத்திருந்த உத்தரவு நிறுத்தம் குறித்துப் பட்டினி கிடந்தார். இங்ஙனம் பல தடவைகளில் மேற்கொண்ட நோன்புகளால் அடிகளார் உடல் நலம் சீர்கெட்டிருந்தது. அடிகளார் பூனு மருத்துவச் சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்பு எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி அடிகளாரை அரசாங்கம் விடுதலையும் செய்துவிட்டது. அரசாங்கக் கட்டுப்பாடு இல்லாதிருந்தும், பின் மூன்ருண்டுகள் அரசியலினின்று அடிகளார் அறவே விலகி நின்று சமூக முன்னேற்றப் பணிகள் புரி

வதிலேயே நாட்டங்கொண்டிருந்துவிட்டார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தேழாம் (1937) ஆண்டு, எட்டு மாகாணங்களில் காங்கிரசு பதவி ஏற்றது. 'மாகாணச்சுய ஆட்சி' என்ற அடிப்படையின்மேல் மந்திரி சபைகள் அங்கெல்லாம் அமைக்கப்பட்டன. அடிகளாரது கண்காணிப்பின் கீழே அவை வேலைசெய்தும் வந்தன. மாகாணச்சுய ஆட்சி, மன்னர் தனியரசு மக்களிடையே பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக்கு வித்திட்டுவிட்டது. அடிகளாரும் அவ்வியக்கத்திற் பங்கு எடுத்துக்கொண்டு, 1939-ஆம் ஆண்டில் இராசகோட்டுக் கிளர்ச்சியில் நேரடியாய்க் கலந்துகொண்டார். அப்போதும் ஒரு முறை பட்டினி நோன்பு மேற்கொண்டு, இராசகோட்டு மன்னர் தாகூர் சாகிபு தமது வாக்குறுதிகளை மதித்து நிறைவேற்றும்படி செய்தார்.

மூன்றும் கட்சியாளராகப் பிரிட்டிஷார் இங்கு இருப்பதே, நம் நாட்டில் இந்து முசுலீம் பிணக்குகள் தோன்றுவதற்கும், அவை அழியாது நிலைபெற்று நிற்பதற்கும் உரிய காரணம் என்பது அடிகளாரது நிலைநின்ற கருத்து. அதனாலேயேதான் இந்து முசுலீம ஒற்றுமை விளைவு நாட்டு விடுதலைக்கு ஒரு நேரிய வழி என்று திட்டம் வகுத்தார். பலதடவைகளில் அவ்வொற்றுமைக்குத் தாமே முன்வந்து அரும்பாடும் பட்டார். அது போதிய பலன் அளிக்கவில்லை. முசுலீம் தலைவர் ஜின்னு, 1940-ஆம் ஆண்டில் தமது 'பாகிஸ்தான்' என்ற இரு தேசக் கொள்கையை

வெளியிட்டார். அது கேட்டு அடிகளார் கொண்ட துயரம், அளவிட்டு உரைக்கும் தரத்தது அன்று.

இங்கிலையில் இரண்டாவது உலகப் பெரும்போர் மூண்டுவிட்டது. "பிரிட்டிஷார் மேற்கொண்ட போரின் அடிப்படை நோக்கம் யாது? இந்திய விடுதலைக்கு அஃது எந்த அளவில் உதவும்?" என்பனவற்றிற்கு விடைதரும்படி அடிகளார் அரசியலாரைக் கேட்டார். என்றும் போல அன்றும், 'குடியேற்ற நாட்டுத் தகுதி தருவதே எங்கள் இறுதி நோக்கம் ஆகும்,' என்று பிரிட்டிஷ் சர்க்கார் மறுமொழி பகர்ந்தது. தலைமைக் கட்சியினர்கள் அடங்கிய ஒரு 'கமிட்டி' ஏற்படுத்துவதாகவும் அது சொல்லிற்று. அடிகளாருக்கோ, இது மிக்க ஏமாற்றம் தந்தது! இதைக் கண்ட தேசீயக் காங்கிரசு, போரிற்கலந்து பங்கெடுத்தல் ஆகாது என்று முடிவு செய்தது; அதன் முதல் நடவடிக்கையாக எட்டு மாகாணங்களிலும் இருந்த மந்திரி சபைகள் தாமே வலியக் கலைந்துவிட்டன.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதாம் (1940) ஆண்டு ஜூன் மாதம், பிரான்ஸ் போரில் வீழ்ச்சி அடைந்தது. அதன் காரணமாக, நேசதேசத்தினர் நிலை போர் விளைவில் கவலைக்கு இடமாகிவிட்டது. அது கண்ட தேசீயக் காங்கிரசு, அரசியலாரை உடனடியாக இந்திய விடுதலை விளம்பரம் செய்து நாட்டில் தேசீயச் சர்க்காரையும் அமைக்கும்படி கேட்டது; அப்படிச் செய்தால், போரில் முழுப்பங்கு எடுத்து உதவிசெய்ய

முன்வருவதாகவும் வாக்குறுதி தந்தது. ஆனால், அரசாங்கம், டில்லியில் நிருவாக சபையில் ஆள் கூட்டுதலைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது எனச் சொல்லிக் கையை விரித்தது. பின்பு கூடிய பம்பாய்க் கூட்டத்தில் வேறு வழியின்றிக் காங்கிரசு அடிகளாரிடம் நாட்டின் தலைமையை ஒப்புவித்தது. அடிகளார் தொடங்கும் விடுதலைப் போரில் ஒத்துழைக்கவும் தேசியக் காங்கிரஸ் முடிவு செய்தது.

அடிகளாரும் உடனே தலைமை தாங்கி, 'தனிப்பட்டவர் சத்தியாக்கிரகம்' என்ற ஓர் இயக்கத்தினைத் தொடங்கினார். அதன் மூலம் போரினை எதிர்க்க மக்களுக்கு உள்ள உரிமையினை நாடு அரசியலாருக்கு எதிராக, நல்லமுறையில் எடுத்துக் காட்டிற்று. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டாம் (1942) ஆண்டின் தொடக்கத்தில் ஜப்பானுக்குப் போரில் வெற்றிமேல் வெற்றி கிட்டியது. அப்போது சீமையில் இருந்த சர்ச்சில் சர்க்கார், சில திட்டங்களுடன் சர். கிரிப்சு துரையை இந்திய நாட்டிற்குத் தூதாக அனுப்பி வைத்தது. அடிகளார் இதனை ஒரு 'பின் தேதியிட்ட செக்கு' என்று சொல்லி, ஏற்க மறுத்துவிட்டார். கிரிப்சு துரை மகனார் பேசிய பேச்சு முறிந்து போயிற்று. பின்பு நாட்டில் அதனை அடுத்து அரசியல் நெருக்கடி முற்றியது. பிரிட்டிஷார் போரில் திணறிக் கொண்டிருக்கும்போதே நாட்டில் கொடிய பெரிய புரட்சியை உண்டுபண்ணி, நாட்டு விடுதலை பெற வேண்டும் என்று கிளர்ச்சி செய்து

வந்த சுபாஷ் சந்திர போசு சிறையினின்றும் தப்பிச் சென்றார். ஜப்பான் இந்திய நாட்டை நோக்கி விரைவில் முன்னேறிக்கொண்டிருந்தது.

இந்நெருக்கடியான நிலையில் அடிகளார், 'இந்திய நாட்டின் கடமை யாது?' என்பதைத் தீர ஆலோசித்தார். தேசியச்சர்க்கார் ஒன்று நாட்டில் இருந்தால் மட்டுந்தான், பொது மக்கள் எதிர்ப்பை ஒன்றுதிரட்டி அன்னியப் படை எடுப்பை எதிர்த்து நிறுத்தமுடியும் என்ற செய்தியில் முழுவுறுதி பூண்டார்; இந்தப் பகைப் புலனில், 'வெள்ளையரே, வெளியேறுங்கள்!' என்ற ஒலியைக் கிளப்பினார். காங்கிரசும் இதனை ஒருதீர்மானமாக ஏற்று நிறைவேற்றி, வெளியிட்டது. தமது கடைமையையும் இந்திய நாட்டின் நிலைமையையும் விளக்கி, அடிகளார் சீனத்தலைவர் சியாங்கே ஷேக்குக்கும் அமெரிக்கருக்கும் கடிதங்கள் பல எழுதினார்.

ஆனால், அரசியலார் அடிகளாரின் போக்கில் ஐயுற்று, அவரைச் சிறைக்கு அனுப்பினர். அடக்குமுறை நாடெங்கும் தலைவிரித்து ஆடிற்று. அவ்வளவுக்கும் எதிர்ப்பாக, மக்களிடம் புரட்சி வேகமும் குமுறி எழுந்தது. அடிகளாரைச் சிறையிட்ட அரசாங்கம், கலகங்களுக்கும் அழிவுகளுக்கும் காங்கிரசுத் தலைவர்களையே காரணம் ஆக்கிக் காட்டிற்று. அடிகளார், அரசியலாரின் அடக்குமுறையின் கொடுமைகளே அதற்குக் காரணம் என்று சொல்லி, இறுதி வரை மறுத்தார். எனினும், சர்க்காரின் போக்குக்கண்டு துன்பம் அடைந்த அடிகளார், 1943-

ஆம் ஆண்டில் மூன்று வாரகாலம் சிறையிலேயே உண்ணா நோன்பு மேற்கொண்டார். நாடெங்கும் தலைவர்களை விடுதலை செய்துவிடுமாறு கிளர்ச்சியும் நடந்தது. அதிகாரிகள் செவிசாய்க்க முற்படவில்லை.

அடிகளாரை விடுதலை செய்ய அரசாங்கம் மறுத்ததை ஒறுத்து வெளியில் இருந்த தலைவர்களும் பெரியார்களும் வெறுத்துப்பேசினார்கள். வைசிராயின் நிருவாக சபையிலின்று மோடி, சர்க்கார், ஆனே என்ற மூவரும் அதே காரணத்திற்காகத் தம் பதவிகளை உதறிவிட்டு வெளியேறினர். 1943-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வேவல் பிரபு வைசிராயாகி வந்தார். அதனாலும், சர்க்காரின் கொள்கை மாறாமல் பழையபடியே முட்டுக்கட்டை நிலைமை நாட்டிடையே நீடித்து வந்தது. அடிகளார், ஆகாகான் அரண்மனையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்போது அடிகளாருக்குத் தீர்க்க முடியாத இருபெருந் தொல்லைகள் ஏற்பட்டன: அடிகளாரின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி கஸ்தூரிபாய் அம்மையார் நோய்வாய்ப்பட்டிறந்தார். அடிகளாருக்கு வலக்கை போன்று இருந்த மகாதேவ தேசாயும் உயிர் நீத்துப் பிரிந்தார். அடிகளாரின் உடல்நிலையும், முன் சொன்ன காரணங்களால் சீர் கெட்டிருந்தது. நிலைமை படுமோசமாகவே, 1944-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6-ஆந் தேதி அடிகளாரை அரசியலார் விடுதலை செய்து விட்டனர்.

வெளி வந்த அடிகளார், முசுலீம் தலைவர்

ஜின்னாவைக் கண்டு, ஒத்துப்போகும் வழி துறைகளைக் குறித்துப் பேசினார். அதில் பலன் இல்லை. வேவல் பிரபு சிம்லாவில் எல்லாக்கட்சியினரையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டினார். அடிகளாரின் ஆணைப்படி, தேசியக்காங்கிரசு எவ்வளவோ விட்டுக்கொடுத்தும், ஜின்னா சாகிபு தமது இருதேசக் கொள்கையாகிய பாகிஸ்தான் பிடியினின்று மயிரிழையும் நெகிழவில்லை. எனவே, சிம்லாக்கூட்டமும் கருதிய பயனைத்தர முடியாமல் இடிந்து போயிற்று.

இதை அடுத்து, நாட்டிலே நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு பெருமித வெற்றி பெற்றது. சிந்து, வங்காளம் என்னும் இரண்டிடம் நீங்க, மற்றெல்லா இடங்களிலும் காங்கிரசு தனது மந்திரி சபைகளை அமைத்தது.

இந்த வெற்றி, ஆளும் கூட்டத்தாரிடையே ஒரு மனமாற்றம் காட்ட வழி செய்தது. 1946-ஆம் ஆண்டு மே மாதம் பிரிட்டிஷார் ஒரு திட்டம் வெளியிட்டனர். அதன்படி, இந்திய நாட்டிற்கு ஓர் அரசியல் நிருணயசபை ஏற்படுத்தவும், அது முடிவு செய்யும் முறையில் வருங்கால உறவை ஏற்கவும் பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கியது; அன்றியும், உடனடியாகக் குடியேற்ற நாட்டுத் தகுதியினை இந்திய நாட்டுக்கு வழங்கி, இடைக்காலச் சர்க்காரையும் இந்தியர் கையில் ஒப்புவிக்கவும் உறுதி கொண்டுவிட்டது. 1948-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தங்கள் தொடர்பினை அறுத்துக்கொள்ளப் போவதாகவும் அவர்கள் சொல்லி வந்தார்கள். அடிகள் கேட்டவுடன்

இத்திட்டத்தினையும் மேலிடத்தாரின் நல்லெண்ணத்தையும் புகழ்ந்து பலபல பாராட்டினார். காங்கிரசிடமும் அத்திட்டத்தினை ஏற்குமாறு சொல்லிச் சந்து செய்தார்; மக்களுக்கும் அத்திட்டத்தினை ஏற்று நடத்தும் தேசியக்காங்கிரசுக்கு முழு ஆதரவு தரவேண்டும் என்று ஆணையிட்டார்.

சீமையில் இருந்த ஆட்லி சர்க்கார், இது கேட்டு இந்தியாவிற்கு மந்திரி சபைத் தூதுக் கூட்டம் ஒன்றினை அனுப்பிவைத்தது. அக்கூட்டத்துடன் அடிகளார் மனங்கலந்து பேசித் தலையாய பங்கு எடுத்துக்கொண்டார். தூதுக் கூட்டத்தாரின் திட்டப்பற்றிப் பொருள் செய்வதில் சிறிது கருத்து மாறுபட்டது. கடைசியில், வேவல் பிரபு நேருவை அழைத்து, இடைக் காலச்சர்க்கார் ஒன்று அமைக்கும்படி கேட்டுக் கொண்டார். முசுலீம் தலைவர் ஜின்னு சாகிபு அதிற்கலந்து உழைக்க மறுத்துவிட்டார்; மறுத்ததுடன் மட்டும் ஒழியாது, அதன் அமைப்பினை எதிர்த்து நாடெங்கும் உள்ள முசுலீம் மக்களை நேரடி நடவடிக்கை எடுக்குமாறும் தூண்டிவிட்டார். அதன் பயனாய், கல்கத்தா, நவகாளி, பீகார் முதலிய இடங்களில் குத்தும் கொலையும் நிகழ்ந்தன. நாட்டில் அமைதி குலைவுற்றது கண்ட அடிகளார், பெருவேதனை அடைந்து, நவகாளியிலும் பீகாரிலும் சென்று, அமைதி நிலவும்படி செய்து மீண்டார்.

இதற்கு இடையில் முசுலீம் லீகரைச் சர்க்காருக்குள் நுழைக்க வேவல் பிரபு சில முயற்சி

கள் செய்தார். அதன் விளைவாகச் சர்க்கார் இரண்டு பட்டது. வேவல் பிரபு தலைமை மாறி, மவுண்டு பேட்டன் பிரபு இந்திய வைசிராயாக வந்தார். 1948-ஆம் ஆண்டு ஜூன்மாதம் நாட்டு விடுதலை அளிப்பதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை ஒன்று சற்று முன்னரே அறிவித்து இருந்தது. அதனை மாற்றி, 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதியே அளித்துவிடுவதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் ஓர் அறிக்கை விடுத்தது. அதே நேரத்தில் ஜின்னுசாகிபுவின் பாகிஸ்தான் கோரிக்கையையும் அரசாங்கம் ஒப்புக் கொண்டுவிட்டது. அடிகளாரும் மற்றைய தேசியத்தலைவர்களும் வேண்டா விருப்பாகவே பிரிவினைத்திட்டத்தோடு கூடிய நாட்டு விடுதலையைக் கைந்நீட்டி ஏற்றனர். இங்ஙனம் இந்திய விடுதலைக்கே தமது வாழ்நாளை ஈடுகாட்டியிருந்த அடிகளார், 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி தம் கண்ணுர நாட்டு விடுதலையைக் கண்டார்! வெள்ளையர் ஆட்சி ஒழிந்தது கண்டாலும், நாட்டில் பிரிவுபட்ட வகுப்பு வாத நிலை கண்டு துன்புற்றார். பிரிவினைக்குப்பின்லாவது அமைதி நிலவ வேண்டும் என்று இறுதிவரை எவ்வளவோ பாடு பட்டார்.

அடிகளார் முப்பது கோடி மக்களின் விடுதலைக்குத் தொடர்ந்து உழைத்தார்; தம் ஆயுட் காலத்திலேயே வெற்றியும் கண்டார்; பல போராட்டங்களை மேற்கொண்டு நடத்தினர். எனினும், அன்பு நெறியினின்று வழுவவில்லை. அவ்வன்பு நெறியோடு கூடிய தேசிய இயக்கம்,

உலக வல்லரசுகளிலே ஒன்ருன வ... பொருந்திய வெள்ளையர் ஆட்சியின் அடிப... யையே தகர்த்துவிட்டது. அறியாமையில் மூழ்... கிக் கிடந்த மக்களின் நடுவே—சமூகப் பழக்க வழக்கங்களாலும், பாறுபட்ட மதவெறியாலும் தூண்டப்பட்டிருக்கும் மக்களின் நடுவே—இறுதிவரை தனித்து நின்று உழைத்தார். தாம் எடுத்த காரியம் வெற்றி பெறுமா, பெருதா என்ற சிந்தனை இன்றி, விடுதலைக் குறிக்கோளை நோக்கியே அருப்பாடு பட்டார். பட்ட பாடு பலன் அளித்தது. சொட்டு இரத்தமும் சிந்தாமல் ஒரு நாட்டிற்கு விடுதலை அளித்த வீரரை உலக சரித்திரத்திலேயே நாம் இதற்கு முன் கண்டதில்லை. உலக அரசியல் சரித்திரத்திலேயே வருங்கால வழிகாட்டியாக ஒரு புதுநெறி காட்டிச் சென்ற அடிகளாரை என்றென்றும் உலகு மறவாது இனிப்போற்றும் என்பது ஒருதலை!

# VIII சமூகத் தொண்டு

ஒரு மனிதன், வாழ்நாளில் தன் உரிமை மட்டும் கருதி உழைப்பது தகாது; தன்னைச் சூழ்ந்த நாட்டவர் நலம் பேணியும் கடன் ஆற்றல் வேண்டும். இதனை, 'மக்கள் வாழ்வில் கொள்ளத்தகும் ஒழுக்க முறைகளுள் ஒன்று,' என வள்ளுவர் பேசுகிறார். தாம் பிறந்த நாடு அடிமைக் குழியில் புதைபட்டுக் கிடக்கும் போது, அடிகளாருக்குத் தந்நலம் பேணும் கருத்தே தோன்றவில்லை. அடிகளார் வாழ்வு முழுதுமே, பிறர்க்கென வாழ்ந்த பெருவாழ்வாய்த் திகழ்ந்தது. இந்தத் தொண்டு உள்ளமே, அடிகளார் வாழ்வில் இலங்கிய ஒரு 'பெருங்குறிக்கோள்' என்று சொல்லி விடலாம்!

'மக்கள் வாழ்விறுதி நோக்கமே இன்பப் பேறு' என்பதனை மறுப்பவர் எவரும் இரார். அவ்வின்பப்பேறு, மக்கள் வேற்றுமை இன்றி, மனங்கலந்துஉறைந்துஉயருவதிலேயே உள்ளது. மக்களிடையே சாதி, சமயம், பிறப்பு முதலிய பல வேறு காரணங்களால், வேற்றுமையுணர்வு அரும்பிவிடுகிறது. ஓரளவு வேற்றுமைப்

பிரிவு உலகியற்கையே என்றாலும், அதனை நீக்கி ஒற்றுமை காண விழைவதே அறிவுடையார் கடன் ஆகும்.

அடிமை வாழ்விலே மக்கட்கு இன்பம் இல்லை என்றால், அதன் தலையாய காரணம், பல துறையிலும் வேற்றுமை உணர்வு அரும்பி இருப்பதே ஆகும் என்று நாம் சுருங்கச் சொல்லிவிடலாம். அடிமை வாழ்வு வாழும் மக்களிடையே வகுப்பு வாதம், தீண்டாமை, பிறப்பு உயர்வு, கண் மூடி வழக்கம், பெண் அடிமை, பிற நாட்டுக் கல்வி முதலிய இன்னோரன்ன செய்திகள் அவ்வேற்றுமையை வளர்க்க வித்திடும். அரசியலிலே நாடு விடுதலை பெற விழைந்த அடிகளார், நம் மக்கள் இத்தகைய சமூகக் கொடுமைகளினின்றும் நீங்க வேண்டும் என்பதை உணர்ந்தார்; அவ்வத்துறைகளிலும் ஈடுபட்டு, உண்மை நிலை கண்டு உலகிற்கு உணர்த்தி உயர்வு கண்டார். "விடுதலைக்கு உரிய வழி தேச ஊழியத்தில் மட்டும் இல்லை; சமூக ஊழியத்திலேயே பெரிதும் பொருந்தியிருக்கிறது," என்பது அடிகளார் சொல்லிய பொன்மொழி.

அடிகளார், பல துறைகளிலே ஈடுபட்டுச் சமூகத் தொண்டு புரிந்து நின்றார். எனினும், நாம் சுருக்கம் குறித்துச் சிற்சில தலைப்புக்களின் கீழ் அதனை வரையறுத்துக்கொள்ளல் தகும். அத்தலைப்புக்களாவன, தீண்டாமை, பெண்டிர் விடுதலை, தாய் மொழிக் கல்வி, சமய ஒற்றுமை என்பன.

1. தீண்டாமை:

'தீண்டாமை' தமிழ் நாட்டில் இடைக் காலத்தில் வந்து புகுந்த தீய பழக்கங்களுள் ஒன்று. கடவுள் மாட்டு அன்பு உடையாருக்குத் தீண்டாமையும் இல்லை; வேற்றுமையும் இல்லை. நம் நாட்டில் தோன்றிய இராமானுசர், சங்கரர், நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றவர்கள் எல்லாம் அதனை ஒழிக்கவே புவியிடை அரும்பாடு பட்டார்கள். அடிகளாரும் அவ்வழி நின்று அதனை ஒழிக்கப் பாடு பட்டார். "தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தானது சூழ்ச்சி," என்பதை அடிகளார் நாடெங்கும் சென்று முழக்கினர். தீண்டாதாராகிய கணக்கர் மட்கலத்தைத் தீண்டிக் கழுவுவது தகாது என்று கருதிய தம் மனைவியாரை அடிகளார் வெளியே தள்ளினர்; சபர்மதிப் பயிற்சி நிலையத்தில் தீண்டாதாரை உடன் சேர்த்துக் கொண்டார்; தீண்டாதார் தனித்தொகுதி முறை ஒழிப்புக்குத் தம் உயிரையே பணயம் வைத்து நாட்டில் பட்டினி நோன்பு நோற்றார். "அவர்கட்குக் கோயில் நுழைவு வேண்டும்," என்று நாடெங்கும் கிளர்ச்சி நடத்தினர்; தீண்டாதார்களுக்கு 'ஹரிஜனங்கள்' என்னும் புதுப் பெயரைச் சூட்டிச் சாதி மாற்றம் காட்டினர். இங்ஙனம் அடிகளார் வாழ்வு, தீண்டாமையைப் பூண்டறுக்க வந்த பெருவாழ்வாய் விளங்கிற்று என்பதிற் பிழை இல்லை.

2. பெண்டிர் விடுதலை:

'பெண் பிறவி இழிந்தது,' எனக் கருதும்

மடமை உணர்வும் நம் நாட்டில் இடைக்காலத்தில் தோன்றிய ஒன்று. "மன்பதையின் ஒரு பகுதியாகிய பெண் 'இனத்தைச் சிறுமைப் படுத்துவது, ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உகந்தது அன்று. பெண்ணை அடிமை கொள்ளும் சமுதாயம் வளர்வதேயில்லை. அது தன்னைத்தானே விலங்கு நிலைக்குத் தாழ்த்திக் கொள்ளும்," என்பது அடிகளார் எண்ணம். பெண்டிரும் ஆடவரும் ஒத்த நிலையினராய் நாட்டிடை வாழ வேண்டும் என்று அடிகளார் எழுதியும் பேசியும் வந்தார்; பெண் கல்விக்குப் பெரிதும் ஆதரவு காட்டினார்; விடுதலை இயக்கங்களில் ஆடவர்களோடு ஒப்பப் பங்கெடுத்துக் கொள்ளப் பெண்களுக்கும் வாய்ப்பு நல்கினார்; பெண்களைக் காமக் கருவியாக மட்டும் ஆடவர் கருதுவதைக் கண்டித்தார். கவியரசியாராகிய சரோஜினி அம்மையாரை 'இந்தியக் குயில்' என்று அடிகளார் ஒரு முறை சொல்லிப் பாராட்டினார். அடிகளார் விலை மகளிரான பெண்களிடமும் காழ்ப்புக் கொண்டதில்லை. அவர் காக்கிநாடாவில் தம்மைக் காண வந்த பொதுமகளிரை அணுகி, அகமலர்ந்து வரவேற்றுப் போற்றினார். "ஆண் மக்களுள் சிலரிடம் உள்ள விலங்கு உணர்வே பெண் இனத்துள் ஒரு சிலரை விலைமகளிராகச் செய்தது," என்பது அடிகளார் துணிபு. அவர்களையும் நல்லவர்களாக்கிச் சமூகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அடிகளார் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பெண்களை

இளமையிலேயே மணம் செய்து கொடுக்கும் வழக்கத்தினை அறவே நீக்க, மக்களைத் தூண்டி வேண்டுகோள் விடுத்தார். "பெண்டிர் அணிகலன்களின்மீது பெருவேட்கை உடையராய் அலைதல் தகாது," என்று அவர்கட்கும் அறிவுறுத்தினார். இங்ஙனம் பலவாறு பெண்களைப் பெருமைப்படுத்தி, "அவர்களை மதித்து ஏற்று வாழ்வதே இயற்கை வாழ்வு," என்பதையும் நடைமுறையில் நடந்து காட்டிப் பெண்டிர் விடுதலைக்கு வழி கோலினார்.

3. தாய்மொழிக் கல்வி:

*1901*-ஆம் ஆண்டு அடிகளார் கல்கத்தாவில் நடைபெற்ற தேசீயக் காங்கிரசின் கூட்டத்திற்குக் கோகலேயுடன் சென்றார். அப்போது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி முறைகள் எல்லாம் ஆங்கில மயமாகவே இருந்தன. அது கண்ட அடிகளார் கலங்கி நின்றார். "ஆங்கிலம் எவ்வளவு வீறுடன் நம்மீது ஆட்சி செய்து நிற்கிறது என்பதனை நான் அன்றே வருத்தத்துடன் நோக்கினேன்," என்று அந்நிகழ்ச்சி பற்றி, பின்னர் அடிகளார் வருந்திக் குறிப்பிட்டுள்ளது ஈண்டு நாம் சிந்திக்கற்பாலது. அடிகளாருக்கு ஆங்கிலத்தின்மீது வெறுப்பு இல்லை. "தாய்மொழி வழியாகவே இயற்கை வாழ்வு நடத்த முடியும்," என்பதும், "அதன் மூலமே நமது பழம்பண்பாட்டை அழியாது வளர்க்க முடியும்," என்பதும் அடிளார் கண்டறிந்த உண்மை. அடிகளார் தென்னாப்பிரிக்காவில் கலைக்கூடம் ஒன்று அமைத்து மக்களுக்கு அறிவூட்டிய போது

நாட்டு மொழிகளையே முதலிற்பயிற்றினர்.

"ஐம்பது ஆண்டுகளாக நாம் பிறமொழி கற்றதே நம் அடிமை வாழ்வின் அழியாத குறி. அப்பிறமொழிதான் நம்மை மீளா அடிமையில் இருத்தி வைத்திருக்கிறது. ஆங்கிலக் கல்வி, நம்மவரை நம் நாட்டிலேயே வேற்றவர்களாகச் செய்துவிட்டது. பிற மொழி வாயிலாகக் கற்ற புதுப்புதுக் கருத்துக்கள் பாமரர்க்குப் பயன்படாதபடி சிறைப்பட்டுக் கிடக்கின்றன. கடந்த ஐம்பதாண்டுகள் தாய்மொழி வாயிலாக நாம் கற்றிருப்பின், நம்மவரான போசும் இராயும் கண்ட புதுமைகள் வீட்டுக்கு வீடு இராமாயண பாரதங்கள் போலப்பரவி நம்செல்வங்களாய் இருக்கும்," என்னும் இவ்வுண்மைகளைத் தெளிவாக உணர்ந்து, அடிகளார் தாய்மொழி ஆக்கத்திற்கு எத்தனையோ துறைகளில் ஊக்கம் காட்டினர்.

அடிகளார் தமது வரலாற்றைக் கூர்ஜர மொழியின் வாயிலாகவே எழுதி வெளியிட்டார்; தாய் மொழிக்கு முதலிடம் தரும் 'வார்தாக் கல்வித் திட்டத்தை' உருவாக்கித் தந்தார். "கல்வி, ஒழுக்கத்தோடு இயைபு பெறுமாறு, மாற்றி அமைக்கப் பெறவேண்டும்," என்று நாட்டவருக்கு மீட்டும் மீட்டும் சுட்டிக் காட்டினர். காங்கிரசுப் பேரவை அடிகளார் ஆணையின் கீழடங்கி நடந்த காலந்தொட்டே, அதில் தாய்மொழி மணம் கமழ வழி கண்டார். சுருங்கச் சொன்னல், ஆங்கில மயக்கிலே சிக்குற்றுத் தமிழை அறவே மறந்து திரிந்த தமிழன்,

இன்று விழித்து எழுந்து, பழம்பெருமை பேணி, "தமிழ் நாடு தனியரசாகத் திகழ வேண்டும்," என்று முடிவு செய்து முயல்வதற்கு முழுமுதற் காரணம் அடிகளார் செய்த மொழித் தொண்டே என்பதில் சிறிதும் ஐயம் இன்று.

**4. சமய ஒற்றுமை:**

மனிதன் கடவுளோடு உறவு பூண்டு வாழும் வாழ்வு, 'சமய வாழ்வு' எனப்படும். எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளைத்தான் சுட்டுகின்றன. கடவுளுக்கு வெவ்வேறு திறமான பெயர் வடிவங்களையும் நாமே கற்பித்துக்கொண்டு பிணங்குகின்றோம். சிறந்த மெய்யடியார்கள் எம்மதத்தோடும் பிணங்குவது இல்லை. பிற மத உண்மைகளையும் இகழாது போற்றி ஏற்று, கேட்டறிந்து, உண்மை தேறி, எல்லாரையும் ஒரே கடவுளின் பிள்ளைகளாகப் பாவிப்பதே அறிவுடைய நெறி. நம் இந்திய நாட்டில் சமயப் போர், அறியாமையின் காரணமாக நிகழ்ந்து வந்தது உண்டு. நம் அடிகளார், அவ்விதம் நிகழும் போர்கள் நாட்டு நலத்தினைக் குலைக்கும் என்பதை உணர்ந்தார். 'சமய ஒற்றுமை ஏற்படுவதுதான், விடுதலை வழியினை எளிதாக்கும்,' என்னும் உண்மை அவருக்குப் புலப்பட்டது. பல்லாற்றானும் அத்துறையில் நாட்டம் கொண்டு அடிகளார் தொண்டு செய்தார். "சமயம் இன்றி அரசியல் இல்லை; சமயத்துக்கு அரசியலும் ஒரு துணை; சமயம் அற்ற அரசியல் கூற்றுவனை ஒத்தது," என்று அடிகளார் எழுதியுள்ளார். "கடவுள் ஒருவரே.

வேதங்கள் ஒரே கடவுளைத்தான் குறிக்கின்றன; அக்கடவுளே நம் வாழ்வை உறு துணையா யிருந்து நடத்துகின்றார். ஒரு சமயம் விட்டுப் பிற சமயம் புகுதல் தகாது. சத்தியம் என்பது ஒரு சமய வேதத்திற்கு மட்டும் உரியதன்று; நாம் அனைவரும், 'சத்திய நெறியே சமயம்' என் பதை உணர்வோமானால், இந்துக்களாய் இருப் பதோடு முசல்மான்களாயும் கிறிஸ்தவர் களாயும் இருக்கிறோம்," என்று அருளிச்செய்த கருத்துக்கள், அடிகளாரது சமய ஒற்றுமை குறித்த மனப் பண்பினை நமக்கு நல்ல முறையில் எடுத்துக் காட்டும். இப்படிச் சொல் அளவில் மட்டும் அன்றிச் செயல் முறையிலும் அப்பண் பாட்டினை அடிகளார் மேற்கொண்டு ஒழுகினர். இஸ்லாம் மதத்தின்மீது கொண்டிருந்த அன்பே, அடிகளாரைக் கிலாபத்து இயக்கத்தில் சேர்ந்து பாடுபடச் செய்தது. அடிகளார் ஒரு முறை உரோமாபுரிக்கு எழுந்தருளினர்; போப்பாண்ட வரைக் காண வேண்டும் என்ற பேரவாவால், அவ்வாண்டவர் இருந்த நிலையம் நண்ணினர். அங்கே ஏசு நாதர் அறையப் பெற்ற அற்புதச் சிலுவை ஓவியம் ஒன்றைக் கண்டதும், அடி களார் கண்ணீர் பெருக்கி, அன்பு வடிவாய் மாறி, அச்சிலுவைக் கோலத்தினை வலம் வந்து வணங்கினர். 1924-ஆம் ஆண்டு மே மாதம் ஜ்ஸெகுவில் கொண்டாடப் பெற்ற 'புத்தர்பிரான் பிறந்தநாள் பெரு விழா'வில் அடிகளார் சென்று தலைமை தாங்கினர். அடிகளார் பிறப்பால் வைணவராயினும், சிவ பரஞ்சுடரினை நாடோ

றும் காலையில் தொழுவதிலிருந்து தவறுவதில்லை. கோயில்களைச் சமய ஒற்றுமை நிலவுவதற்கு வழி செய்யும் வகையில் சீர் திருத்திச் செப்பனிட வேண்டும் என்று அடிகளார் கருதினர்.

அடிகளார், முற்காட்டியபடி சமூகமுன் னேற்றத் துறைகளை வகுத்து, அவற்றிற் சீர் திருந்தும்படி செய்து, அவற்றை அரசியல் துறைக்குப் பயன்படுத்தினர்; சமூகத்தில் நிலவி வந்த பிற குறைபாடுகளையும் கண்டு வெறுத்துச் சீர்திருத்தினர் என்பதனையும் நாம் மறத்தல் ஆகாது.

கண் மூடி நம்பும் பழக்கவழக்கங்களை அப் படியே ஏற்கவிரும்பும் மூடநம்பிக்கை அடிகளா ரிடம் இல்லை. சமயத்தின் பெயரால் கோவில் களில் வேசையர்களைத் தேவதாசியராகக் கொண்டு பேணிவரும் வழக்கத்தினை அடிகளார் கண்டித்தார்; தாசிகள் கோவில்களில் கலைவளர்ச் சித் திரையின்கீழ் நடனமாடும் காட்சிகளை வெறுத்தார். 'வேதம் சொல்லுகிறது.' என்பதற் காக அறிவுக்குப் பொருந்தாத ஒன்றினை அடிக ளார் மறுக்கத் தயங்கினதில்லை அடிகளார், ஓய்வுநேரங்களில் இராமாயண பாரதநூல்களைப் படிப்பது உண்டு. துளசிதாசர் இராமாயணத் தில் அடிகளாருக்கு அளவிறந்த ஈடுபாடு உண் டாயினும், அதில் சொல்லிய "பெண் மக்கள் மூடர்கள் ; அவர்கள் அடிபடப் பிறந்தவர்கள்," என்ற கருத்தினைக் கண்டித்து ஒதுக்கவே செய் தார்; அக்கருத்துடைய பாடல்களை நூலினின்று நீக்கிவிடவேண்டும் என்றும் அஞ்சாது சொன்

ணர். மனுநூலை ஒரு முறை படித்த அடிகளார், அதன்கண் சொல்லப்பட்டவை எல்லாம் நல்லவை என்று ஏற்கவில்லை. "புலால் உணவினை அந்நூல் ஆதரிக்கின்றது. உலகத்தோற்றம் பற்றி அந்நூல் கூறுபவைகளில் எனக்கு நம்பிக்கை எழவில்லை; அந்நூலைப்படித்ததன் பயனாய்ச் சிறிது நாத்திக உணர்வுகூட என்னிடையே அரும்பிற்று," என்பது அடிகளார் கூற்று. "வடமொழியில் உள்ளனவெல்லாம் வேதமொழிகள் என்னும் மூடநம்பிக்கை நம்மிடை வேரூன்றி விட்டது; அதனை ஒழித்துப் 'பெண்கள் தாழ்ந்தவர்கள்' என்னும் சிறுமை எண்ணத்தைக் களைதல்வேண்டும்," என்று கூசாது பேசுவதிலிருந்து அடிகளார் மூட நம்பிக்கைகளை எந்த அளவுக்கு வெறுத்திருக்கிறார் என்பதனை நாம் சிறிது அறியலாம்.

"குழந்தை மணத்தினை ஒழித்துக் கட்டல் வேண்டும். இளங்கைம்பெண்களின் துயர் களைந்து, விரும்பினால் அவர் நோக்குப்படி மீண்டும் மணம்செய்துகொள்ளச் சமுதாயத்தில் வழி விட வேண்டும்; நன்னெறியில் ஒழுகும்படி தூண்டி, விலைமகளிரைக் குலமகளிராக்க வகை செய்தல் வேண்டும்; கட்குடியினை ஒழித்தல் வேண்டும்; பெண்களை முகமூடியிட்டு மூடிவைக்கும் பர்தா முறையினை மாற்றவேண்டும்; மணத்தின்போது வரதட்சிணை வாங்கும் வழக்கமும் அறவே ஒழிக்கப்படல் வேண்டும்," என்னும் அடிகளாரின் சீர்திருத்தக் கருத்து நயங்களை நாம் காணுதல் நலம். இத்தீமைகள் எல்லாம் நீங்கின

சமூகமே வளர்ச்சியடைந்து நல்வாழ்வு பெறும் என்ற நாட்டம் அடிகளாருக்கு இருந்தது. மேற் குறித்த துறைகளில் எல்லாம் நாடு சீர்திருந்தி ஓரளவு முற்போக்கு அடைந்தும் வருவது கண்கூடு.

மற்றொரு செய்தியும் அடிகளார் முடிவு பற்றி இங்கு நம்மால் மறவாது போற்றத்தகும். இக்கேடுகளை ஒழிக்க அடிகளார் உறுதிகொண்டார் எனினும், இவற்றைத் தொலைக்க மக்கள் மனத்தை ஊறுபடுத்தும் துறைகளில் அவர் இறங்க வழி காட்டினார் இல்லை. "மக்கள் உளம் கனியுமாறு இன்சொற்கூறிமற்றவர் மனமாற்றத்தினால் மட்டும் ஏற்றம் காண வேண்டும்," என்பதே அடிகளார் இட்ட கட்டளை. அரசியல் துறையிலோ, அடிகளார், சட்டமறுப்பு, ஒத்துழையாமை, சிறை புகல் முதலிய அழிவு வழி காட்டி மக்களை விடுதலைப்பாதையில் கூட்டுவித்தார்; அதே சமயத்தில் விடுதலைபெற்றால் அதனை நாம் நல்லமுறையிற்பெற்று மகிழுமாறு சமூகத் துறையில் ஆக்கவழியிலீடுபட்டு மக்கள் தேர்ச்சி பெற வழிகாட்டினார்; இங்ஙனம் இருதுறைகளிலும் கருத்துச் செலுத்தி, ஒன்றினுக்கு ஒன்று அரண்செய்யுமாறு ஈடுகட்டினார். இவ்வரிய நெறியிலே நின்று நாட்டுக்கு விடுதலை கூட்டுவித்த திறம் ஒன்றினையே போற்றிப் பிற நாட்டுப் பேரறிவாளர் பலரும் தம் வாயார அடிகளாரைப் போற்றுகின்றனர்.

## IX மூப்பும் முடிவும்

மக்கள் வாழ்விலே, முதுமைப் பருவம் பெருந்தொல்லை தருவது. அது கண்டே முதுமையினை வெறுப்பார் பலர். எல்லாத் துறையில் உள்ளவர்களும், அத்தொல்லை தரும் பருவத்தில் அலுவல்களை நீக்கி ஓய்வு பெற்றே இருப்பார்கள். எனினும், சிறுபகுதி மக்களிடை இதற்கு விலக்கும் உண்டு.

நம் அடிகளார் முதுமையினை வெறுக்கவில்லை; முதுமைத் தொல்லைகளைப் புதுமையாகக் காணவும் இல்லை. சீரிய ஒழுக்க நெறியாலும், நேரிய தவ வழியாலும், நல்ல உணவு முறையாலும், அவர் பிறமக்களைக்காட்டிலும் மேலான வாழ்வு நிலை கண்டு பேணினர்; மூப்புக்காலத்திலும் இளமை மணம் வீசப்பெற்றார். இளைஞர்கள் பல்லாண்டு வாழவிரும்புவதுபோல, முதுமை எய்திய பின்னரும் பல ஆண்டுகள் தாம் வாழ்ந்து தொண்டு புரிய விழைந்தார். விழைவு மட்டும் அன்றி, செயலிலும் அரும்பெருங் காரியங்களை அடிகளார் முதிர்ந்த பருவத்தில் மேற்கொண்டு முடித்தார். "நான் நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வாழ விரும்புகிறேன்!" என்று அடிகளார்

தம் முன் நிற்கும் பணியினை நினைத்த போதெல்லாம் சொல்லியிருக்கிறார்.

அடிகளார் வாழ்க்கைப்பணியைக் கணக்கிட்டால், அவரது முதுமைக்காலத்துப் பணியே தனி மிகச் சீரியதாய்க் காட்சியளிக்கும். அவர்தம் வாழ்க்கையின் முற்பகுதி, தென்னாப்பிரிக்காவிலே கழிந்தது. இதுவே அடிகளார் சத்திய சோதனை நடத்திய இடம் ஆகும். அதிலே வெற்றி பெற்ற அடிகளார், பின்பு இந்திய நாட்டிலே விடுதலைப் போரினைத் தலைமை தாங்கி முப்பதாண்டுகள் நடத்தி வெற்றியும் கண்டார். நாட்டு விடுதலையோடு அவர்தம் பணி நின்றுவிட்டதாக அவர் கருதவில்லை. கிடைத்த விடுதலையை முழு உரிமையோடு துய்த்து மக்கள் நலம் பெற, நாட்டினை நன்முறையில் மேற்கொண்டும் பண்படுத்தவேண்டும் என்பதை அறிந்தார். முதுமையின் தொடக்கத்திலேயே அடிகளார் அது கருதித் 'தீவிர அரசியலி'னின்று விலகி வந்துவிட்டார்.

1934-ஆம் ஆண்டு செப்டெம்பர்மாதம் அடிகளார் காங்கிரசிலிருந்தே விலகி நின்றார் என்ற செய்தி நம்மால் ஈண்டு மீட்டும் நினைக்கத்தகும். விலகிய உடனே, குடிசைத்தொழில் இயக்கத்தினை ஆரம்பித்து நடத்திக் குடிமக்களின் நிலையினைச் சீர்திருத்தும் பணியினை மேற்கொண்டார். வார்தாவுக்கு அருகில் உள்ள சேவா கிராமத்தினைத் தமது அலுவலகமாக மாற்றிக் குடிமக்களிடையே உறைந்து வந்தார்; நாட்டின் சீர் அமைப்பு வேலையில், கல்வி நிலையின் தலைமை உணர்ந்து, வார்தாக் கல்வித்திட்டத்தைப்

பெருமைபெற ஆக்கித் தந்தார்; ஹரிஜன் பத்திரிகையை மீட்டும் தொடங்கி, அதன் மூலம் ஆக்க வேலைகளைப்பற்றிய நுணுக்க விளக்கங்களை எல்லாம் மக்களுக்கு விளம்பரம் செய்தார். நாடு முழுதும் சென்று, ஆக்கவேலையில் முயலும் வழிதுறைகளைப் பற்றிப் பிரசாரம் செய்து வந்தார். இத்தகைய பெரும்பணிகளை எல்லாம் சிறந்த வகையில் தளராது முதுமைப் பருவத்திலேயே தான் நம் அரும்பெறல் அடிகளார் மேற்கொள்ள நேர்ந்தது.

அரசியல் துறையிலும் மிக்க பெரும்பணிகளை எல்லாம் அடிகளார் முதுமைப் பருவத்திலேயே மேற்கொண்டு முடிவு கட்டினார்: தளராத சிந்தையுடன் தள்ளாத காலத்தில் 'பாதுகாப்புக் கைதி'யாகச் சிறை புகுந்தார்; மன்னர் தனியரசு மக்கள் பிரச்சினையில் ஈடுபட்டு, அதற்கு ஒரு முடிவுகண்டார்; எண்ணற்ற சட்டமறுப்பு இயக்கங்களைத் தலைமை தாங்கி நடத்தினார்; "இந்தியாவை விட்டு, வெள்ளையரே, வெளியேறுக," என்ற இயக்கத்தினைத் தொடங்கினார்; ஜின்னா சாகிபுவைப் பல முறை சென்று கண்டு பேசி வகுப்பு ஒற்றுமை வளரப் பெரிய முயற்சிகளைச் செய்தார்; பல தடவைகளில் உண்ணா நோன்புகளை மேற்கொண்டார். எனவே, எந்த வழியில் பார்த்தாலும் அடிகளாரது முதுமைப் பருவமும் அவரையொத்துப் பெருமை பெற்றே நின்றது என்பது தெரிய வரும்.

நாட்டிலே நம்மிடையுள்ள வகுப்பு வேற்றுமை நீங்கினாற்றான், மூன்றுமவர் தலையீட்டுக்கு

இடம் இன்றி அடிமை நீங்கி நாட்டிடை நாம் நல்வாழ்வுவாழ முடியும்என்பது அடிகள் ஆழ்ந்து கண்டறிந்த உண்மை. அதன் வழியிலே நின்று, எத்தனையோ வகையில் அடிகளார் இந்துமுசுலீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டார். பெரும்பான்மை வகுப்பாராகிய இந்துக்களை, முசுலீம்களுக்காகச் சில உரிமைகளைக்கூட விட்டுக்கொடுக்க வேண்டும் என்று வேண்டினர். நாட்டுப் பிரிவினைத் திட்டம் மத அடிப்படையில் நிறைவேற வழி செய்யக்கூடாது என்று ஜின்னுசாகிபுவைப் பல முறை கண்டு பணிந்து வேண்டினர். தாம் நடத்திய வழிபாட்டுக்கூட்டங்களில் எல்லாம் குரான் மொழிகளைப் பாராயணம் செய்தார். கடைசியில் முசுலீம் தலைவர்கள் ஒத்துவாராதது கண்டு, முசுலீம் பொதுமக்களின் மனத்தையாவது நல்லெண்ணத்தின் மூலம் மாற்றி அவர்களை உடன்பிறப்பாளராக்க உறுதி கொண்டு, முசுலீம்களிடையே குடியிருந்து பழகினர். இறுதியில் எதுவும் பயன்பெருத நிலையில், நாட்டு விடுதலையோடு பிரிவினைத்திட்டமும் வந்தது. வேறு வழி இன்றி, மனக்கவலையுடனே அடிகளார் அதற்கு இடம் கொடுத்தார். பிரிவினையின் பின்னராவது அமைதி நிலவவேண்டிய வழிசெய்ய முனைந்தார். ஆனல், நடந்தது வேறு!

விடுதலைக்குப்பின் நாடெங்கணும் வகுப்புவாதப் பேய் தலை விரித்து ஆடிற்று. பஞ்சாபிலும், அதைத் தொடர்ந்து டில்லியிலும், மற்றும் பலபகுதிகளிலும் கொடுநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குத்தும் கொலையும் கூடிக் கைகோத்துக்

குலவல் ஆயின. நாட்டிலே அமைதியின்மை கண்ட அடிகளார் மனம் எப்படி அமைதியுறும்! "அஹிம்சை மூலம் இந்தியாவிற்குத் தொண்டு செய்யவே என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறேன்," என்று சொல்லிய அடிகளார், நவகாளிக்குச் சென்றார்; கலகம் நடந்த இடங்களில் கால் நடையாகச் சுற்றுப் பிரயாணம் செய்து, அமைதி நிலவச் செய்தார். வகுப்பு ஒற்றுமை நிலவுதல் வேண்டி ஜின்னா சாகிபோடு கூடிக் கூட்டறிக்கை வெளியிட்டார். வழிபாட்டுக் கூட்டங்களில் எல்லாம் இந்துக்களுக்கும் முசுலீம்களுக்கும் நடுநின்று, அடிக்கடி நல்ல புத்திமதிகளை எடுத்துரைத்து வற்புறுத்தினார்.

டில்லியில் கலவரம் நேர்ந்த போது, அடிகளார் அங்கும் சென்று நிலையினைச் சீர்ப்படுத்த உதவினார். பஞ்சாபிலிருந்து பெருந்தொல்லைகட்கு ஆளாகி வந்த திக்கற்ற அகதிகளால் முசுலீம்களுக்கு எல்லையற்ற தொல்லை நேரிட்டது. இரு சாராரிடையேயும் ஒற்றுமையுறவு ஏற்படுத்த அடிகளார் பெருமுயற்சிகள் செய்தார். முசுலீம்களை நன்கு காக்குமாறு இந்திய சர்க்காரை வேண்டியதுடன், அடிகளார், பாகிஸ்தானின் போக்கினையும் கண்டு எச்சரிக்கை செய்தார்; இறுதியில் முடிந்த முடிபாக இவ்வாண்டு (1948) ஜனவரியில் வகுப்பு ஒற்றுமை குறித்தே இறுதி வரை பட்டினியிருந்து மடிய முடிவு செய்து, உண்ணா நோன்பினை மேற்கொண்டார். எல்லா வகுப்புத் தலைவர்களும் அம்முடிவு கேட்டுத் துணுக்குற்றார்கள். வகுப்பு ஒற்றுமைக்கு

அவர்கள் யாவரும் உறுதி கூறிப் பொறுப்பாளி களாய் இருந்து காக்கச் சூளுரை வழங்கினார்கள். அதன்மேல் அடிகளார் ஆறாவது நாளில் நோன் பினை நிறுத்தினார். அதனால், உலகமே கவலை நீங்கிப் பெருமூச்சு விட்டது.

இங்ஙனம் எல்லாம் வகுப்பு ஒற்றுமைக்கும் நாம் பெற்ற விடுதலைக்கும் இடையேயுள்ள பிணைப்பினை உணர்ந்து, இந்து முசுலீம் ஒற்று மைக்கு நம் அடிகள் உயிரையே பணயம் வைத்து இணையற்ற தொண்டு புரிந்தார். முசுலீம் தலை வர்கள் உண்மையுணர்ந்து நல்வழி காட்டவில்லை என்பது பெரிதன்று; இந்துக்களுட்சில வகுப்பு வாத வெறியர் வழியறியாது, அடிகளாரைக் கடிந்தனர். நல்லெண்ணத்துடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடு, சில உரிமை களைத் தியாகம் செய்யுமாறு இந்துக்களுக்கு அடிகளார் வற்புறுத்தியதனை ஓராது, முகமதி யர் பக்கலிலே நின்று அவர் ஓரம் சொல்வதாக ஈரம் அற்ற அவர்கள் கருதினார்கள். அவ்வகுப்பு வாத வெறி, "அடிகளாரின் உயிரினுக்கே உலை வைத்து முடிவு செய்துவிட வேண்டும்," என்ற அளவிற்கு எண்ணுமாறு அவர்களுட்சிலரைத் தூண்டிவிட்டது. அதனை மேற்கொண்ட அவர் களும் அடுத்தடுத்துச் சில வஞ்சனை முறைகளைக் கையாண்டார்கள்.

அடிகளார் இறப்பினைப் பொருட்படுத்தின வர் அல்லர். தாம் வாழ்வதே ஆண்டவன் ஆணை யால் என்ற கருத்துடைய அவர், "ஆண்டவன் விரும்பும் போது என்னை அழைத்துக்கொள்

வான்," என்றே சொல்லி வந்தார். தம்மைப் பாதுகாக்க விரும்பிய அன்பர்களை நோக்கி, "என்னைக் காக்க நீங்கள் முயல வேண்டா; எல்லாரையும் காக்கக் கடவுள் இருக்கிறான். என் காலம் முடியும் போது உலகக்கீர்த்தி பெற்ற ஒருவர் கூட அவனுக்கும் எனக்கும் இடையே வந்து வழி மறிக்க முடியாது," என்று பேசினார். இறப்பினையும் பொருட்படுத்ாது துறந்த மன நிலையில் அறந்தலை காத்த நம் அடிகளாரைப்பிறரும் அந்நிலையிலேயே உணர்ந்தனர். ஜே. ஜே. டோக்குப் பாதிரியார் அடிகளாரைப் பற்றி, "பூவுலகில் கடவுள் ஆட்சியை நிலைநிறுத்த அடிகளார் அரும்பாடு படுகிறார்! அதற்காக அவர் ஒரு நாள் தம் உயிரையே கொடுத்தாலும் கொடுப்பார்!" என்று எழுதுகிறார்.

தமக்கு எதிராகக் கொலை முயற்சிகள் நடைபெற்ற போதும், அவை கண்டு அடிகளார் மனம் கவன்றதில்லை. தப்பிய போது எல்லாம், "கடவுள் என்னை இன்று வரை காப்பாற்றி வந்திருக்கிறார்," என்று சொல்லியே, அவர்க்கு நன்றி செலுத்துவார். தாக்கியவர்களும் பின்பு தங்கள் செயலுக்கு நாணி வருந்துவார்கள். 1934-ஆம் ஆண்டு அடிகளார் மீது ஒரு முறை வெடிகுண்டு வீசப்பட்டது; இறைவன் அருளால் அடிகளார் தப்பினார். பின்பு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் (1948) ஆண்டு ஜனவரிமாதம் இருபத்தாறும் நாள், இளைஞன் ஒருவன் வழிபாட்டுக் கூட்டத்தில் அடிகளார்மீது எறிகுண்டை வீசிக் கொல்ல முயற்சி

செய்தான். ஆனால், அது போதிய பலன் அளியாது சிறிது தொலையிலேயே வெடித்துவிட்டது. அறிவிழந்த அவனுக்கு மன்னிப்பு அளிக்குமாறு அடிகளார் சர்க்காரை வேண்டினர்; இனிமேல் அவனுக்கு நல்லறிவு தருமாறு கடவுளையும் வேண்டினர். "தவறு செய்கிற மனிதனைக் காணும் போதெல்லாம், நானும் தவறு செய்கிறவனாக என் உள்ளம் சொல்லுகிறது. அக்குறையின் காரணமாகப் பிறர் வருந்த நான் இசையேன். பிறர் குறை கண்டால், அதனை ஒழிக்க முயலுவேனே ஒழிய, அவரைத் துன்புறுத்த நான் இயையேன். அப்படியே நான் செய்யும் தவறுகளுக்காக என்னை யாரும் தொல்லைப் படுத்துவதை நான் விரும்புவதும் இல்லை," என்று எழுதிய அடிகளாரின் மணிமொழியினை நாம் என்றென்றும் மறவாது போற்ற வேண்டும். அம்மொழிக்கு இலக்காகவே, குண்டெறிந்தவன் குறையைத் தமதாகக் கருதி மன்னித்ததும் அன்றி, அரசியலாரையும் அவனுக்குக் கருணை காட்ட வேண்டினர். ஆனால், அவர் உலகத்தாருக்குக் காட்டிய கருணையைப் பாழுலகு அவருக்குக் காட்டத் தவறிற்று!

இவ்வாண்டு (1948) ஜனவரி மாதம் மாலை வழக்கம் போல டில்லி பிர்லா மாளிகையினின்று அடிகளார் வழிபாட்டுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். பிர்லா மாளிகை மைதானத்தில் அடிகளாரின் பிரார்த்தனையில் கலந்துகொள்வதற்காக ஐந்நூறு பேர் கூடி, அவர் வரவு நோக்கிக் காத்திருந்தனர். தம் பேர்த்திகளான ஆவா

காந்தி, மனு காந்தி ஆகியவர்மீது சார்ந்து கொண்டு அடிகளார் விரைவாகக் கூட்டத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். அன்று அடிக ளார் கூட்டத்திற்கு வரச் சிறிது காலமும் தாழ்த்தது. அடிகளார் கூட்டத்தை நெருங்கிய தும் அவர் மேடையை அடைய மக்கள் இரு பகுதியாய்ப் பிரிந்து, வழி விட்டார்கள்.

மேடைக்கருகில் பதினைந்து கெஜ தூரத்தில் அடிகளார் வந்துகொண்டிருந்தார். முப்பத் தைந்து வயது வாலிபனான 'கோட்ஸே' என்ப வன் உருவிலே கூற்றுவன் என வந்து நின்றான். நின்றவன், அடிகளாரின் முன் நெருங்கிக் கை கூப்பித் தலை வணங்கினான். அடிகளாரும், பதில் வணக்கம் செய்தார். உடனே அக்கூற்றுவன், மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் மூன்று முறை சுட்டான். நெஞ்சின் கீழும் வயிற்றடியி லுமாக அவை பாய்ந்து, அண்ணலின் உயிர் செகுத்தன. அடிகளார் இராம நாமத்தை வழுத்திய வாயுடனும், மக்களை நோக்கிக் கூப் பிய கைகளுடனும், பொய்யுடல் நீத்துப் பேர மரர் ஆனார்!

அடிகளார் அமரரான உடனே கோடிக் கணக்கான மக்களின் இதயத்தைக் கோயிலாகக் கொண்டுவிட்டார். தெய்வதூதர்களுக்குள்ளும் அடிகளாரைத் தனிப்படப் பிரித்து உலகத்தார் பாராட்டுகின்றனர். "நந்தா விளக்கு ஒன்றிருந்து உலகிற்கே ஒளி வீசிற்று! அஃது அணைந்து போயிற்று!" என்று சொல்லி, நமது மாபெருந் தலைவர் ராஜாஜி மனம் கரைந்து நைந்தார்.

"அவர் இறந்ததனால் ஏற்பட்டிருக்கும் காலி யிடத்தை நிரப்பவே முடியாது," என்று ஜின்னு சாகிபு கூறி வருந்தினர். "உலக சமாதானத் திற்கே பாடு பட்ட மகான்," என்று உரோமி லிருந்து போப்பாண்டவர் பேசினர். "வகுப்பு வாதத்தை ஒழிக்கும் புனிதப் போரில் உயிர் துறந்த வெற்றி வீரர்," என்றும், "மேலை நாடுக ளில் காந்தியைப் போல ஒருவரைக் காண முடி யாது," என்றும், "தேவ புருஷர் காந்தி" என் றும் பல நாட்டு மக்கள் அடிகள் உயிர் நீத்தமை அறிந்து வாய் விட்டுப் புலம்பினர்கள்.

"மனித வருக்கத்துக்கே ஆன்மிகத் துறை யில் தலைவராய் விளங்கிய பெரிய மனிதர் காந்தி; அவர் இறந்தது குறித்து இந்தியா மட்டும் அன்றி உலகமே துக்கம் கொண்டாடும்," என்று அடிகளாரின் பிரிவு கேட்ட அபிசீனியச் சக்கர வர்த்தியார் சொன்னர். "உலகம் அரும்பெருந் தலைவரை இழந்துவிட்டது!" என்று அயர் லாந்து பிரதமர் டிவேலரா அதனையே மீட்டும் சுட்டினர். இங்ஙனம், இந்திய மண்ணிலே பிறந்த அடிகளார் அமரராகி உலகப் பெரியராய் விளங்கிய உயர்வுக்கு நாமும் மகிழ்தல் தகும்!

"நம் காலத்திலேயே ஒரு மகான் தோன்றியிருக்கிறார்; இதற்காகக் கடவுளுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்; அந்த மகான் வருங்காலச்சந்ததியாருக்கு வழி காட்டும் விளக்காக விளங்குவார்," என்பது ஆல்பர்ட்டு ஐன்ஸ்டீன் என்பவர் நம் அடிகளாரைப் பற்றி எழுதிய பொய்யா மொழி. மூதறிவாளராகிய ஐன்ஸ்டீன் பேசிய பேச்சின் உண்மையை இன்று நாம் ஓரளவு உணர்கிறோம். நம் அடிகளார் உலகப் பேரொளியாய் நின்று எண்ணற்ற மக்களுக்கு ஆறுதல் அளித்துக் காக்கப்போவதனை, வருங்கால உலகு மேலும் நல்ல முறையிலே அறிய முடியும்.

விளக்கு இருளுக்கு இடையே இருந்தாலும், அவ்விருளால் கதுவப்படுவது இல்லை; தான் ஒளி வடிவாய் நின்று, அவ்விருளை ஓட்டிப் பட்ட பொருளின்மீதும் ஒளி வீசி, நமக்கும் நல்வழி காட்டுகின்றது. நம் அடிகளார் நிலையும் அப்படியே இருக்கக் கண்டோம்! போட்டியும், பொறாமையும், பகைமையும், போரும், குத்தும், கொலையும், புலையும், திருட்டும் மிகுந்து நின்ற தீய உலகிடையேதான் அடிகளார் பிறந்து

வாழ்ந்தார். எனினும், அத்தீய பண்புகளால் அடிகளார் கவரப்பட்டார் இல்லை. அவர் அவை களைத் தம்மிடம் அணுகவொட்டாது வெருட்டி ஓட்டினர். மங்கிக் கிடந்த அன்பு, அருள், அஞ் சாமை, தியாகம், பொறுமை, மன்னிப்பு, நோன்பு முதலான நற்பண்புகள் மீது ஒளி வீசிக் காட்டி, மக்கள் வாழ்வு பெறுமாறு அதற்கு உரிய வழி யையும் துலக்கினர். அவரது வாழ்க்கை தவறான வழியிற்சென்ற பல்லாயிரக் கணக்கான மக்களை இழுத்து நல்வழியிலே நடத்திச் சென்றது.

மிகுந்த புயலால் விளக்கு அணையும். அறை யின் உள்ளே உள்ள விளக்கு அவ்விடத்தள விலே மட்டும் ஒளி வீசும். என்றும் அவியாது வானிடை நின்று ஒளி வீசி உலக முழுமைக்கும் காட்சி நல்குவது, ஞாயிறு. உலகப் பேரொளி யாகிய அப்பரிதியை ஒத்து, உயிர்க்களை உள்ள மெய்ந்நெறியை உலகத்தவர் எவருக்கும் காட்டி எவ்வுலகும் போற்ற வாழ்ந்து அமரராகிய அடி களை 'உலகப்பேரொளி' என்பதிற் பொய்யோ அன்றிப் புகழ்ச்சியோ இல்லை. அது முழுப் பேருண்மையே ஆகும்.

பிற நாட்டு வரலாறுகளை நாம் அறிவோம். ஒரு காலத்திலே ஒரு புரட்சி வீரன் தோன்றி நாட்டினுக்கு விடுதலை வாங்கி வைப்பன். பின்பு திட்டம் தந்து அரசியல் அமைப்பை வகுக்கும் பேரறிஞனாய்ப் பிற்காலத்தில் வேறு ஒருவன் அந்நாட்டிடை வந்து பிறப்பன். அங்கே ஒழுக்க போதனை செய்து மக்களை வாழ்விலே உருப்படுத் தத் தேவையான மற்றொருவன் பின்வீட்டுப்

பிறப்பது உண்டு ஆனால், நம் அடிகளார் வரலாறு அதனைப் பொய்யாக்கிற்று. நேரிய அரசியல் கிளர்ச்சிகள் மூலம் நாட்டுக்கு விடுதலை தேடித் தந்த அவரே ஆக்க வேலைகளின் மூலம் நமக்கு அரசியல் திட்டத்தையும் உருப்படுத்தித் தந்து நின்றார். மக்களின் ஒழுக்கமுறையான சக்திகளைத் திரட்டி, ஆட்சிக்கு அமைந்து வாழும் வகையினையும் அவர்கட்கு விளக்கிக் காட்டினார். இதனை உணர்ந்தேதான், உலக அரசியல் வரலாற்றிலேயே அடிகளை ஒரு தனிப்பட்ட அறிஞர் எனப் பலரும் போற்றுகின்றனர்.

உலகப் பெரியார்களாய்ப் பலவேறு காலங்களில்-பல வேறு இடங்களில்-பல பேரறிஞர்கள் தோன்றி வாழ்ந்திருக்கிறார்கள். இயேசு நாதர், சாக்கிரட்டீஸ், ஆபிரகாம்லிங்கன், புத்தர்பிரான் முதலிய பெருமக்களை இவ்வரிசையில் வைத்து நாம் எண்ணல் தகும். அவர்களை ஒத்தே நம் அடிகளாரும் உலகிடை வாழ்ந்து நலம்புரிந்தார். ஆண்டவனுடைய மெல்லிய குரலுக்குப் பலரையும் செவிசாய்க்கச் செய்தார்; இந்தியாவிற்கும் மனித வருக்கத்திற்கும் தாம் ஒரு தொண்டன் என்றே பேசி நின்றார்; 'அன்பு வழி ஒன்றே உறுதியான வழி,' என்பதனைப் பலமுகங்களிலே உலகினுக்கு எடுத்துக் காட்டினார். தன்னலமற்ற இந்த அன்பு நெறியைத்தான் இயேசு நாதர் மலைப்பிரசங்கங்களிலே வலியுறுத்தினார்.

உரோமப் பேரரசோடு போரிட்ட முன்னைய கிறித்தவ மக்கள், போராட்டங்களில் இதே வழியைத்தான் பின்பற்றினார்கள். பதின்

மூன்றும் நூற்றுண்டளவில் செயிண்டு பிரான் சிஸ் இத்தாலியச் சீர்திருத்தத்திற்கு இந்த அன்புநெறியினையே மேற்கொண்டார். ரஷியப் பேரறிஞரான லியோ-டால்ஸ்டாய் தம் நாட்டவருக்குப் போதனை செய்ததும் இவ்வன்பு நெறியே ஆகும்.

எனினும், ஓர் அரசியல் இலட்சியத்திற்காகப் பெரிய அளவில் இவ்வன்பு நெறியினைக் கையாண்டு, விலங்கு வலி படைத்த வெள்ளை அரசாங்கத்தையே பணியவைத்து, இந்தியாவிற்கு விடுதலை வாங்கி அளித்த விந்தை இதற்கு முன் நம்மால் எவ்வரலாற்றிலும் கேட்டறியப்படாதது. இவ்வுண்மை நிலையினை நன்குணர்ந்த கிர்பி பேஜ் என்னும் அமெரிக்கர், "அவர் சீலத்திற் புத்தர் பெருமானைப் போலவும், கொள்கை உறுதிப்பாட்டில் செயிண்டு பாலைப்போலவும், வீரத்தில் கரிபால்டியைப் போலவும், அன்பில் செயிண்டு பிரான்ஸிஸைப் போலவும் இருக்கிறார்," என்று அடிகளாரை மனமாரப் போற்றியுள்ளார்.

உலகிடை வாழ்ந்த வழி போக, அடிகளார் உயிர் நீத்து முடிவு அடைந்த முறையும், அவ்வுலகப் பெரியார்களை நாம் நினைக்குமாறு செய்கிறது. இயேசு நாதர் தம் வாழ்க்கை முடிவினை அன்று முன் கூட்டியே உணர்ந்தார். கடைசி இராச் சாப்பாட்டின் போது, ஒரு ரொட்டித் துண்டினைக் கையில் எடுத்துப் பிட்டுக்கொண்டே, "மனித சமூகத்தின் ஆன்மிக வளர்ச்சிக்கு அர்ப்பணித்துக்கொள்ளும் என்

லைக் குறிக்கிறது இது," என்று கூறினர். மறு நாள் அவர் வாழ்க்கை முடிவு பெற்றது. அவர் அமரர் ஆனுர்.

அடிகளார் தமது கடைசிக் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த போது, "சேவா கிராமம் செல்வது எப்போது?" என்று அன்பர் ஒருவர் கேட்டார். அடிகளார், "என்னுல் சொல்ல முடியாது. எல்லாம் கடவுள் கையில் இருக்கிறது. மாலை வழிபாட்டிற்குப் பின் செலவு பற்றி முடிவு செய்வேன்," என்று மறுமொழி பகர்ந்தார். வெள்ளி மாலை வழிபாட்டுக் கூட்டத்திலேயே அடிகளார் பொய்யுடல் நீத்துத் தேவ வாழ்வு பெற்ருர்.

அடிகளார், "என் சேவையிலேயே சாவதற்குத்தான் நான் விரும்புவேன்," என்று அடிக்கடி சொல்லி வந்தார். "நான் உயிருடன் இருக்கும் போது அல்லாவிட்டாலும், இறந்த பிறகாவது இந்துக்களும் முசுலீம்களும் வகுப்பு வாதத்தை ஒழிக்கவே பாடுபட்டேன் என்பதை நிரூபிப்பார்கள்," என்று சொல்லிய அடிகளார், அதன்பொருட்டே சேவை செய்து, அவ்வகுப்பு வாதத்திற்கு அடிப்பலி ஆனுர்.

நம் அடிகளார், வெளித் தூண்டுதலின் துணை இன்றி மக்களுக்குத் தலைவராக வந்தவர்; சூது வாதுகளும் சூழ்ச்சிகளும் இன்றித் தம் சொந்த ஒழுக்க மேம்பாட்டினையே உறு துணை எனக் கொண்டு, அரசியலிலே வெற்றி கண்டு நின்றவர்; என்றும், எக்காலத்தும், மிருகச் செயலை அறவே புறக்கணித்த வீரர். அறிவும்

அதற்கு இணையான அடக்கமும் மிகுந்து, உறுதியுடன் அசைக்க முடியாத மன வலிமையும் வாய்ந்து, மக்கள் நலத்திற்கு எனவே தம் சக்தி முழுவதையும் அர்ப்பணம் செய்த அடிகளாரையொத்த பெரியாரை, நாம் எங்கும் கண்டதில்லை. "இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும், பூவுலகத்தில் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கடினம்!" என்று, ஐன்ஸ்டீன் சொல்லிய வார்த்தை வேதவாக்குப் போன்றது. வருங்கால உலகம் அடிகளை ஆலயத்திலே கோயில் கொள்ளுமாறு செய்து கடவுள் எனப் போற்றப்போவது உறுதி.

இங்ஙனம் தமது வாழ்க்கை முழுவதையுமே அன்புக்குப் பரிசாகத் தந்த அடிகளார் இன்று நம்மிடை இல்லை. இதுகாறும் இந்திய நாட்டின் ஒளியாய் இருந்த அவர், அமரரான அன்றே உலகப் பேரொளியாய்விட்டார். நமது கடமை இனி மிகப் பெரியது. நாம் பிறிதொரு விளக்கினை அவ்வொளியினின்று ஏற்றி, மற்றவர்க்கு வழிகாட்ட இங்கு வைத்தல் வேண்டும். அவ்வொளி விளக்கிற்கு-அன்பே தகழி ஆகும்; தியாகம் இடுதிரி ஆகும்; அகிம்சையே அதில் வார்க்கும் நெய் ஆகும். அத்தெய்வ விளக்கினைக் கையில் ஏந்திக் காற்றும் புயலும் அதனை அணையாதபடி காத்துப் போற்றுவது நமது கடன்! அவ்விளக்கு நமக்கு வாழ வளம் தருமாக!